அப்போஸ்தலர் வரலாறு

கிறிஸ்துதாஸ்

1978

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

நடபடிகளின் ஆகமத்துக்குப் பின்

அப்போஸ்தலர் வரலாறு

G.B. Sathyanesan, **B.A.**

படைப்பு :

பேராசிரியர் கனம் **D. A.** கிறிஸ்துதாஸ் ஐயர்

பெத்தேல்

பெத்தேல் வெளியீடு

1978

பெத்தேல் பிரசுரம் :

அப்போஸ்தலரின் வரலாறு

ஆக்கியோன் :

பேராசிரியர் கனம் D. A. கிறிஸ்துதாஸ் ஐயர்
B.A., L.T., B.D., M.Th.

விலை ரூ. 2-00

முன்னுரை

அப்போஸ்தலரின் நடபடிகள் என்னும் ஆகமத்தில் பரிசுத்த பேதுரு, யாக்கோபு, யோவான், பவுல், பர்னபா, கர்த்தருடைய சகோதரனுகிய - யாக்கோபு என்னும் பரிசுத்த ஊழியரைப்பற்றிச் சில விபரங்களே யுள்ளன. அவர்களின் பிந்திய வரலாறுகளும், பிற அப்போஸ் தலரின் வாழ்க்கை விபரங்களு மிருந்தவாறென்ன வென் றறிய விரும்பின திருநெல்வேலி அத்தியட்சாதீன சபை ஊழியரான சில நண்பர்களுடைய கோரிக்கைக் கிணங்கி, அவ்வரலாறுகளை 1953-ம் ஆண்டு நற்போதக இதழ்களில் வெளியிட்டோம். அவைகளை ஒரு நூல் வடிவில் தர வேண்டும் என்று கேட்ட நண்பரின் விருப்பத்தை நிறை வேற்ற அன்று கூடாதிருந்தோம். இன்று பெத்தேல் பிரசுரத்தார் அவற்றை ஒரு நூலாக வெளியிட முன் வந்துள்ளனர். அவர்கட்கு எம் நன்றி.

5-ம் 6-ம் நூற்ருண்டுகளில் அவ்வரலாறுகளை கற்பனு லங்காரத்தோடு சில ஆக்கியோன்கள் எழுதி வைத் துள்ளனர். அவற்றில் வரலா றேற்கக்கூடாத கற்பனைச் சித்திரங்களை நீக்கி, வேறு பல வரலாற்று நூல்களையும் ஆராய்ந்து வரலாறு வடிவத்தில் அத்தகவல்களை இந்நூலில் தந்துள்ளோம்.

கர்த்தர் தமது சித்தப்படியே இதை ஆசீர்வதிக்க வேண்டி அவரின் திருப்பாத காணிக்கையாக இதை அர்ப்பணிக்கின்ருேம்.

பெத்தேல், டேனிஷ்பேட்டை
8, அக்டோபர் 1978

தே. அ. கிறிஸ்துதாஸ்

பொருளடக்கம்

பக்கம்

1. அப்போஸ்தலனுகிய பரிசுத்த பேதுரு ... 1

2. அப்போஸ்தலனுகிய பரிசுத்த அந்திரேயா ... 8

3. அப்போஸ்தலனுகிய பரிசுத்த யோவான் ... 13

4. அப்போஸ்தலனுகிய பரிசுத்த பிலிப்பு ... 19

5. அப்போஸ்தலனுகிய பரிசுத்த பர்த்தொலொமேயு ... 26

6. அப்போஸ்தலனுகிய பரிசுத்த மத்தேயு ... 32

7 அப்போதஸ்லனுகிய பரிசுத்த தோமா ... 36

8 அப்போஸ்தலனுகிய பரிசுத்த சீமோன் ... 41

9. அப்போஸ்தலனுகிய பரிசுத்த யூதா ... 43

10. அப்போஸ்தலனுகிய பரிசுத்த யாக்கோபு ... 49

11. அப்போஸ்தலனுகிய பரிசுத்த மத்தியா ... 51

12. அப்போஸ்தலனுகிய பரிசுத்த பவுல் ... 52

13. அப்போஸ்தலனுகிய பரிசுத்த பர்னபா ... 57

14. கர்த்தருடைய சகோதரனுகிய பரிசுத்த யாக்கோபு ... 62

15. சுவிசேஷகனுகிய பரிசுத்த மாற்கு ... 65

16. சுவிசேஷகனுகிய பரிசுத்த லூக்கா ... 69

17. பரி, பவுலின் சீஷனுன பரிசுத்த தீமோத்தேயு ... 72

18. பரிசுத்த பவுலின் சீஷனுன பரிசுத்த தீத்து ... 77

அப்போஸ்தலரின்

பின் வரலாறு

1

அப்போஸ்தலனுகிய

பரிசுத்த பேதுரு

நான் உம்மை நேசிக்கிறேன் [யோவான் 21 : 17]

அப்போஸ்தலர் நடபடிகளினுகமம் 12-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட காரியங்களுக்குப்பின், பேதுரு 'வேருெரு இடத்துக்குப் போனுன்' என்று கூறப்பட்டிருக்கிறது. (2. 17). இந்த இடம் எதுவென்று திட்டமாய்க் கூறக்கூடாத போதிலும், அது ஒரு வேளை அந்தியோகியாவாயிருக்கலாம் என்று யூகிப்பவர்களுண்டு. பெந்தேகோஸ்தே நாளில் மனந்திரும்பின கூட்டத்தாரில் சிலரால் அந்தியோகியாவில் கிறிஸ்து மார்க்கம் போதிக்கப்பட்டிருக்கவேண்டும். அன்று பிரிகியா, பம்பிலியா, எகிப்து, சிரேனே பிராந்தியம், கிரேத்தா, அரேபியா, ரோமாபுரி முதலிய விடங்களிலிருந்து வந்தவர்கள் தங்கள் தங்கள் பாஷைகளில் அப்போஸ்தலர் தேவனுடைய மகத்துவங்களை விவரிக்கக் கேட்டார்கள் (அப். 2 : 10, 11). அவர்களில் சீப்புருதீவாரும், சிரேனே பட்டணத்தாருமாகிய சிலர் அந்தியோகியா பட்டணத்துக்கு வந்து, கிரேக்கருடனே பேசி, கர்த்தராகிய இயேசுவைக் குறித்துப் பிரசங்கித்தார்கள் (அப் 11 : 20). அந்தியோகியாவில் சபை உண்டானதும், அங்குள்ள சபையை ஸ்திரப்படுத்துவதற்காக எருசலேம் சபையார் பர்னபாவை அனுப்பினுர்கள். அப்பட்டணத்தில்தான் 'கிறிஸ்தவர்கள்' என்கிற பெயர் முதல் முதலாவதாக விசுவாசிகளுக்கு வழங்கப்பட்டது (வ. 22,26). இது கி. பி. (சுமார்) 42-ம் வருஷத்தில் நடைபெற்றது. செசரியாப் பட்டணத்தில் கொர்னேலியு மனந்திரும்பினது கி. பி. 40-ம் வருஷம். எனவே பேதுரு சிறைப்படுத்தப்பட்டதும் அதிலிருந்து கர்த்தருடைய தூதனுல் விடுவிக்கப்பட்டதும் 40-ம் அல்லது 41-ம் வருஷமாயிருக்கலாம்.

அப். 12 : 17 க்குப்பின், பேதுரு நேராக அந்தியோகியாவுக்குச் சென்ருர் என்று நாம் எண்ணிவிட முடியாது. ஏனெனில் 13:1 ல் அந்தியோகியாச் சபையின் ஊழியர் ஜாபிதாவில் பேதுருவின் பெயரில்லே. இந்த ஜாபிதாவின் காலம் 45-ம் வருஷம். இது முதல் அந்தியோகியா, பவுல், பர்னபா முதலானவர்களின் தலைமை ஸ்தானமாயிருந்தது என்று மட்டும் விளங்குகிறது. ஆனல் 50-ம் வருஷத்தில், அப். 15-ல் சொல்லப்பட்ட எருசலேம் சங்கம் நடந்த பின், பேதுரு அந்தியோகியாவிலிருந்து சபையைக் கண்காணித்துவந்தார் என்றறியலாம் (கலா. 2 : 10, 11). ஆகவே, 45 முதல் 50 வரைக்கும் பேதுரு பலஸ்தீனுவிலும் சுற்றுப் புறங்களிலும் யூதர்களுக்குள்ளே சு வி சே ஷ வேலே செய்தார். அக்காலங்களில் அவர் யூதர், புறஜாதியர் விஷயத்தில் தாராள மனப்பான்மையுடையவராயிருந்தபோதிலும், அந்தியோகியாவின் கண்காணியாரானதிலிருந்து யூதர்களின் நியாயப் பிரமாண ஆசரிப்பை முக்கியப்படுத்திய "யூதக் கிறிஸ்தவர்களின்" கூட்டத்தில் சேர்ந்து, 'பர்னபாவையும் தன் பக்கமாக இழுத்து,' பரி. பவுலின் கண்டனத்துக்கு ஆளானுர்.

கி. பி. 50 முதல் 57 வரை பேதுரு அந்தியோகியாவின் கண்காணியாராகப் (அத்தியக்ஷராகப்) பணிவிடை செய்தார். பவுல், பர்னபா, மாற்கு, சீலா, முதலானவர்கள் ஊழிய நிமித்தம் அயலிடங்களுக்குப் போய்விட்டபடியால், அந்தியோகியாவிலுள்ள 'வளர்ந்து பெருகும் சபையின் பொறுப்பு' அவருடையதாயிற்று. மூன்ரும், நான்காம் நூற்ருண்டுகளில் வாழ்ந்த திருச்சபை வரலாற்ருசிரியரான யூசெபியஸ் 'பேதுரு அந்தியோகியாவிலிருந்து பொந்து, கலாத்தியா, பிததினியா, கப்பதோக்கியா, ஆசியா (சின்ன ஆசியா) வில் சிதறியிருந்த யூதர்களுக்குச் சுவிசேஸத்தை அறிவித்தார்' என்று எழுதுகிருர் (**Eusebius—Ecclesiastical History III : 1**)

பிற்காலத்தில் அந்தியோகியாவில் பிரபல சிரேஷ்ட அத்தியக்ஷராயிருந்த கான்ஸ்டான்ஷியஸும் பேதுருவே அந்தியோகியாவின் முதல் அத்தியக்ஷரென்றும், அ ங் கி ரு ந் து (சின்ன) ஆசியாவின் வடபாகத்தில் சிதறியிருந்த யூதர்கள் மத்தியில் அவர் சுவிசேஷ ஊழியம் செய்தார் என்றும் கூறுகிருர்.

கி. பி. 57-ல் (அல்லது கான்ஸ்டான்ஷியஸ் போன்ற சிலர் எண்ணுகிறபடி, கி. பி. 53-ல்) பேதுரு தனது அத்தியக்ஷ ஸ்தானத்தைத், தனது சீஷர்களில் ஒருவராகிய எனோதியு (Enodius) என்பவரிடம் ஒப்புவித்துவிட்டு, ஐப்பிராத்து நதி தீரத்தில் பிரயாணம் செய்து, பழைய பாபிலோனிய சாம்ராஜ்யத்தில் சிதறியிருந்த யூதர்களிடம் சென்றூர். (எனோதியு அந்தியோகியாவின் இரண்டாவது பிஷப்). பேதுரு பாபிலோனியாவில் ஒரு சபையை ஸ்தாபித்து கி. பி. 57 அல்லது 58 முதல், சுமார் 6 அல்லது 7 வருஷங்களாக அதன் அத்தியக்ஷராக ஊழியம் செய்தார் என்றும், அக்காலத்தில்தான் முதலாம் பேதுரு நிருபத்தை எழுதினூர் என்றும் பலர் அனுமானிக்கின்றனர் (1 பேதுரு 5 : 13). பல வியாக்கியானிகள் பாபிலோன் என்பது ரோமாபுரியைக் குறிக்கிறது என்று கொண்டு, அவர் பாபிலோனுக்குப் போகவேயில்லை என்பர். ஆனால் அது இலகுவில் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ரோமாபுரி 'பாபிலோன்' என்று முதன்முதல் இகழ்ச்சியாக அழைக்கப்பட்டது 4-ம், 5-ம் நூற்றூண்டுகளில் வாழ்ந்த ஜெரோம் என்ற 'சபைப்பிதா' வினுல் தான். மேலும், ரோமாபுரியிலிருந்து பேதுரு அந்நிருபத்தை எழுதியிருந்திருப்பாராஞல் ரோமாபுரியை 'ரோமாபுரி' என்றே கூறலாமே. பாபிலோன் என்று இகழ்ச்சியாகக் கூற அவசியமில்லையே.

பாபிலோனில் அத்தியக்ஷ சேவை முடிந்தபின் அவர் மேற்கே பிரயாணமாகி, சீரியா. ஆசியா நாடுகளிலும், எகிப்து, பலஸ்தீனூவிலும் சுற்றியலேந்தார். அக்காலத்தில்தான் அவருடைய மனைவியும் பிள்ளைகளும் கூடவேயிருந்து, அவருடைய ஊழியத்தில் உதவிசெய்தார்கள் என்று எண்ணப் படுகிறது (1 கொரி 9 : 5). பேதுருவுக்கு ஒரு மகளிருந்தாளென்பதும், அவள் பெயர் பெட்ரோனிலா (Petronilla) என்பதும், பல ஆண் மக்களிருந்தார்களென்தும், அவர்களிலொருவன்தான் நிருபத்தில் குறிக்கப்படுகிற மாற்கு (1 பேதுரு 5 : 13) என்பதும் ஒரு பாரம்பரியம்.

பேதுரு அப்போஸ்தலனின் சீஷர்கள் பலர். அவர்களில் சிறந்தவர் சுவிசேஷகுகிய மாற்கு. மாற்கு யோவான் என்ற

இவர் பர்னபாவின் இனத்தான். எருசலேம் வாசி (அப் 15 : 37 12 : 12). அவர் பேதுருவின் மனைவியின் சகோதரனென்பது ஒரு பாரம்பரியம். பேதுரு சொல்லச் சொல்ல (மாற்கு) சுவிசேஷத்தை மாற்கு எழுதினர் என்பது பேப்பியஸ் (Papias) என்ற சபைப் பிதா எழுதிவைத்திருக்கும் தகவல்.

மற்றெரு சீஷன் ரோமாபுரி கிளமெந்து (பிலி 4 : 3). இவர் எழுதிய Recognitions என்ற ஒரு நூலிலிருந்து நாம் அறிவது பின்வருமாறு: பேதுரு பல தேசங்களில் சுற்றித்திரிந்து சுவிசேஷ ஊழியம் செய்து பலஸ்தீனுவுக்கு வந்தபோது, ரோமனுகிய கிளமெந்து, பர்னபா என்ற ஒரு சீஷன் மூலமாய் எகிப்து தேசத்தில் கிறிஸ்துவைப்பற்றிக் கேள்விப்பட்டு, அவரைப்பற்றி இன்னமும் அதிகமாய் அறிய விரும்பி, பர்னபாவுடன் பாலஸ்தீனத்திலுள்ள செசரியாப்பட்டணம் வந்து, அங்கு பேதுருவைச் சந்தித்து, அவரிடத்தில் உபதேசம் பெற்ருர். அக்காலத்தில் மாயவித்தைக்காரனுகிய சீமோன் ஏற்கனவே பேதுருவினுல் கடிந்துகொள்ளப்பட்டதிலிருந்து (அப் 8 : 5-24) கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குப் பகைஞனுகி, ஊழியத்திற்கு இடையூறு செய்வதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தான். இப்போது அவன் செரியாவுக்கு வந்து, பேதுருவுடன் மூன்று நாட்களாகத் தர்க்கம் செய்து, அவரால் தோற்கடிக்கப்பட்டு ஓடிப்போனுன். அதன்பின் அவ்வூரில் சுமார் பதினுயிரம் பேருக்கு அப்போஸ்தலன் ஞானஸ்நானம் கொடுத்து, அப்பெருஞ் சபைக்கு சகேயு (இவர் சுவிஷேங்களில் கூறப்படும் சகேயுவாயிருக்கலாம்) ஏன்னப்பட்ட ஒருவரை கண்காணியாராக (அத்தியக்ஷராக) நியமித்துவிட்டு, திரிப்போலி (Tripolis) பட்டணம் சேர்ந்து, அங்கு மூன்று மாதம் தங்கி ஊழியம் செய்து, அநேகரை விசுவாசிகளாக்கி, கிளமெந்துடன் அந்தியோகியாவுக்குப் பயணமானுர். அப்பட்டணத்தில் நடந்தது சொல்லப்படவில்லை. அவர்கள் அங்கிருந்து அரது (Aradus) வழியாய் லவோத்திக்கேயா சேர்ந்தனர். அங்கும் மாய வித்தைக்காரனுகிய சீமோனேடே பேதுரு போராடவேண்டியிருந்தது. இத்தகவல்களைத் தரும் Recognitions என்ற இந்நூலின் ஆக்கியோனுகிய அக்கிளமெந்து பின்னுல் ரோமாபுரியின் இரண்டாவது அத்தியக்ஷரானுர்.

பேதுரு சுமார் 67-ம் வருஷத்தில் ரோமாபுரி சேர்ந்தார். அங்கு நேரோ ராயன் கொடுங் கோலாட்சி செலுத்திக்கொண்டிருந்தான். அவன் கிறிஸ்தவர்களைப் பகைத்து, அவர்களைத் துன்புறுத்தி, அநேகரைக் கொலை செய்துவந்தான். அந்நாட்களில் பரி. பவுல் இரண்டாம் முறையாக ரோமாபுரிக்கு வந்து, துன்பப்பட்ட சபையாரைத் தேற்றி, உற்சாகப்படுத்திக்கொண்டு தம் ஊழியத்தை நடப்பித்துவந்தார்.

மாய வித்தைக்காரனாகிய சீமோன் நேரோ இராயனின் அரண்மனையில் கண்யமிக்கவனாயிருந்தான். ரோமர்கள் அவனைப் "பெரியவனாகப்" பாராட்டி மதித்துவந்தார்கள். ராஜாவும் அவனுக்குச் சிநேகிதன். ஒரு நாள் ராயனின் இனத்தானான வாலிபன் ஒருவன் மரித்துப் போனான். மாய வித்தைக்காரனான சீமோன், சடலத்தின் பக்கத்திலிருந்துகொண்டு, தன் மாயா ஜாலவித்தைகளின்மூலம் சரீரத்தில் ஜீவன் உண்டானது போலத் தோன்றச் செய்தான். எல்லாரும் அவனைப் புகழ்ந்தார்கள். "செத்தவனுக்குள் உயிர் வரச் செய்த மகான்" என்று அவனைக் கொண்டாடினார்கள். அச்சமயத்தில் அவனுடைய விரோதியாகிய பேதுரு அங்கு வந்தார். சீமோனின் மாயா ஜாலத்தை வெளிப்படுத்த எண்ணி, கட்டிலிலிருந்து அவனை அப்புறப்படுத்தச் சொன்னார். சீமோன் கட்டிலைவிட்டுத் தூரச் சென்றவுடன், அவனுடைய வித்தையின் பெலன் குன்றினமையால், உயிர் பெற்றதுபோலத் தோன்றின சரீரம் மறுபடியும் பொலிவிழந்து பிரேதமாயிற்று. அப்போது பேதுரு, மனதுக்குள் ஜெபித்து, "கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் எழுந்திரு" என்று அந்த வாலிபனுக்குக் கட்டளையிட, மரித்துப்போனவன் எழுந்து உட்கார்ந்து பேசத்தொடங்கி, ஆகாரம் புசித்தான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்.

இதன் பின்பு சீமோன் தன் பெருமை குறைவதுக் கண்டு, மறுபடியும் அதை நிலைநாட்ட எண்ணி, ஒருநாள், தான் கோட்டையின் உப்பரிகையிலிருந்து குதித்து பறந்து போகப் போவதாக ஜனங்களுக் கறிவித்தான். குறித்த நேரத்தில் திரள் கூட்டம் ஜனங்கள் கோட்டை உப்பரிகைக்குக் சமீபத்தில் கூடினர். பேதுருவும் அக்கூட்டத்திலிருந்துகொண்டு, இம்

மாயாஜாலங்களாலும், கண்கட்டி வித்தைகளாலும் ஜனங்களை ஏமாற்றி மோசம் போக்கின சீமோனுடைய அட்டகாசங்களுக்கு முடிவு வரவேண்டும் என்று வேண்டிக்கொண்டு நின்றார். சகலருடையகண்களும் மேல் நோக்கின. சீமோன் தனக்கு உண்டாக்கியிருந்த செட்டைகளை விரித்துக்கொண்டு, உப்பரிகையிலிருந்து குதித்தான். குதித்துக் கீழே விழுந்து இறந்தான்!

பயங்கர ராயனாகிய நேரோ தன் சிநேகிதனுக்கு நேர்ந்த அவமானத்தைப்பற்றிக் கேள்வியுற்றதும், கோபாவேசங்கொண்டு பேதுருவையும் அவருடைய மனைவியையும், பலரையும் பிடித்துச் சிறையிலடைத்துவைத்தான். இத்தகவல்களை ஹெகெஸிப்பஸ் (Hegesippus) என்ற 4-ம் நூற்றுண்டில் வாழ்ந்த நூலாசிரியன் கொடுக்கிறார். பல சரித்திராசிரியர்கள் மரித்தோன் ஒருவனைப் பரி. பேதுரு உயிரோடெழுப்பினதை நம்புவதில்லை. ஆனால் ஏன் நம்பக்கூடாது? மரித்துப்போன யோப்பாப் பட்டணத்து தொற்காள் என்னும் தபீத்தாளை பேதுரு மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பவில்லையா? (அப் 9 : 36—42). துரோவாவில் மரித்தவனாய் எடுக்கப்பட்ட ஐத்திகுவைப் பவுல் உயிரோடெழுப்பிவில்லையா? (அப். 20 : 9,10). ஆதிச் சபை சரித்திரத்தில் பக்தர்கள் மரித்தவர்களை உயிரோடெழுப்பினதாக வேறு அநேக சரித்திரங்களுமுண்டே.

பரி. பேதுருவின் மரணத்தைப்பற்றியும் ஒரு பாரம்பரியமுண்டு. நேரோ ராயன் அப்போஸ்தலரைக் கொலைசெய்யத் தீர்மானித்திருக்கிறான் என்று அறிந்த விசுவாசிகள், பல தடவைகள் பேதுருவினிடத்திலும் பவுலினிடத்திலும் வந்து, தப்பியோடிவிடவேண்டுமென்று ஆலோசனை கூறினார்கள், பக்தர் மறுத்தார்கள். ஆனால், பேதுரு கடைசியில் இணங்கிவிட்டார். ஓரிரவு அவர் தன் சிறைச்சாலைச் சுவரின் மீதேறிக் குதித்துத், தப்பி, பட்டணத்தை விட்டு வெளியேறினார்.

இருளில் அவருக்கு முன்னால் ஒரு ஆள் வருவது தெரிந்தது. அவர் கண்ட காட்சி என்ன? முன்னால் வந்தது யார்? .... அவருடைய ஆண்டவர் அல்லவா! "கர்த்தாவே எங்கே போகிறீர்? போகிறீர்"? என்று கேட்டார் பேதுரு. அதற்குத் கர்த்தர் 'இரண்டாம் தடவையாகச் சிலுவையிலறையப்பட

ரோமாபுரிக்குப் போகிறேன்" என்றார். பேதுருவின் மனம் உடைந்தது. தான் பல வருஷங்களுக்கு முன் கர்த்தரை மறுதலித்த இருண்ட இரவை எண்ணினார். உடனே திரும்பினார். சிறைக்குள் புகுந்தார்.

நேரோ ராயன் குறித்த நாள் வந்தபோது. பக்தர் மூவரும் இழுத்துச்செல்லப்பட்டனர். பேதுருவின் மனைவி முதலாவது சிரச்சேதம் செய்யப்பட்டபின், (ரோமப் பிரஜா உரிமை பெற்ற) பவுல் சிரச்சேதமானார். கடைசியில் பரிசுத்த பேதுரு (தான் கேட்டுக் கொண்டபடியே) தலைகீழாய்ச் சிலுவையில் அறையப் பட்டு மரித்தார். இது கி. பி. 68ம் வருஷம் ஜூன் 29-ம் நாள் நடந்தது.

மார்செலினஸ் என்ற ஒரு கிறிஸ்தவ குரு பரிசுத்த பேதுரு வின் சடலத்தை எடுத்து, வாற்றிகன் குன்றில் 'வெற்றிவாச' வின் சமிபத்தில் நல்லடக்கம் செய்தார்.

சீமோனே சேவல் கூவுங்கால்
மனங் கசந்து அழுதான்;
கற்போல நின்று பாசத்தால்
கர்த்தாவைச் சேவித்தான்.

—பாமாலை 153 : 3

2

அப்போஸ்தலனாகிய

பரிசுத்த அந்திரேயா

மேசியாவைக் கண்டோம் [யோவா. 1 : 41]

பரிசுத்த அந்திரேயாவைப்பற்றி ஏராளமான கதைகள் ஆதிச் சபையில் வழங்கப்பட்டன. அவைகளிலிருந்து உண்மையான வரலாற்றைப் பிரித்தெடுப்பது சிரமமாகத் தோன்றும். எனினும் அவரது சரித்திரத்தை தொகுத்தெழுத முயற்சிப்போம்.

பெந்தேகோஸ்தே நாளுக்குப்பின் சீஷர்கள் பற்பல திசைகளுக்குப் போய் ஊழியம் செய்யலானார்கள். பரிசுத்த அந்திரேயா ஸ்கைதியா (Scythia) என்ற நாட்டுக்குப் போனார் அக்காலம் ஸ்கைதியா எனப்பட்ட பிரதேசம் இக்காலத்தில் ஜியார்ஜியா, துருக்கி, வட மேற்குப் பாரசீகம், தென் ரஷியா தென்மேற்கு சைபீரியா நாடுகளாகும்.

பரிசுத்த மத்தியாவும் சின்ன ஆசியாவில் கப்பத்தோக்கியா மலைப் பிரதேசங்களில் காட்டுமிராண்டி ஜனங்களுக்குள் ஊழியம் செய்யலானார். அவர் ஒருநாள் அப்பிரதேசத்தில் வாழ்ந்த நரமாம்ச பக்ஷிணிகளிடத்தில் அகப்பட்டுக்கொண்டார். அவர்கள் அவரைப் பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்து வைத்தார்கள். அவருடன் அச்சிறையில் வேறு 271 ஆண்களும், 49 பெண்களும் சிறைகளாயிருந்தார்கள். அந்நாட்டுக் கொடியவர், சிறையிலடைக்கப்பட்ட இம்மக்களைக் கண்களைக் குத்திக் குருடாக்கியும், கைகளை ஒடித்து முடவராக்கியும், மூளையை மருந்து கொடுத்துக் குழப்பி பைத்தியமாகவும் வைத்திருந்தனர். அவர்களுடைய விசேஷ காலங்களில் சிறைப்பட்டோரான இவர்களை இரண்டு மூன்று பேராகக் கொன்று புசிப்பது வழக்கம்.

மத்தியா இச்சிறையிலிருந்து விடுவிக்கப்படவேண்டும் என்று கர்த்தரை நோக்கி இடைவிடாமல் ஜெபித்து, நம்பிக்கையுடன் காத்திருந்தார். கர்த்தர் அவருக்குத் தரிசனமாகி இன்

னும் 27 நாள் கழித்து அவருக்கு உதவி செய்ய அந்திரேயாவை அனுப்புவதாகக் கூறினார்.

தாம் கூறினவாறே, ஆண்டவர் அந்திரேயாவுக்குத் தரிசனமாகி, உடனே நரமாமிச பக்ஷிணிகளின் நாட்டுக்குப் போக ஆக்யாபித்தார். கருங்கடலுக்கு வடக்கில் சுவிசேஷப் பணியிலீடுபட்டிருந்த அந்திரேயா, முதலில், அக்குறுகிய காலத்துக்குள் அவ்விடம் சேருவது கூடாத காரியம் என்று பதிலுரைத்த போதிலும், கீழ்ப்படிந்து, தன் இரு சீஷர்களுடன் கடற்கரைக்கு வந்தார். அங்கு ஒரு படகோட்டியும், அவனுடைய இரு வேலைக்காரரும் தயாராயிருப்பது கண்டு, அப்படகிலேறி, கடலைக் கடந்து தான் நாடிய தேசம் வந்துசேர்ந்தார்.

நரமாமிச பக்ஷிணிகளின் கண்களில் படாமலே அந்திரேயாவும், சீஷர்களும் சிறைச்சாலையை அடைந்தனர். அங்கு ஏழு காவலாளிகள் சிறைக்கூடத்தைக் காத்துநின்றார்கள். பக்தன் உடனே கர்த்தரை வேண்டிக்கொள்ளவே, காவலாளிகள் விழுந்து ஜீவனற்றவர்களாகிவிட, கதவும் தானாகவே திறவுண்டது. அந்திரேயா உள்ளே சென்று, மத்தியாவைக் கண்டதும் அப்போஸ்தலரிருவருக்கும் உண்டான மகிழ்ச்சி அளவு கடந்தது. இருவரும் வெகுநேரம் அளவளாவியபின், மத்தியா தன் உடன் கைதிகளின் நிலைமையை அவரிடம் பிரஸ்தாபித்தார். அந்திரேயா அவர்களனைவரையும் சொஸ்தப்படுத்தி, குருடரை பார்க்கச் செய்து, முடவரைக் குணமாக்கி, அவர்கள் தப்பி ஓடும்படி உதவி செய்தார். அவர்களனைவரும் இரவோடிரவாய் ஓடித் தப்பிக்கொண்டனர். மத்தியாவும் விடுதலையாகி, வேறு தேசம் சென்றார்.

அந்திரேயாவோ பின் தங்கி, அங்கு நடப்பதைக் கவனிக்கலானார். காலையில் ஊரார் சிறைச்சாலையை அடைந்து, காவலாளிகள் மரித்திருப்பதையும், சிறைக்கைதிகள் தப்பிப் போனதையும் கண்டு, போய் தங்கள் நகரதிபதிகளிடம் தெரிவித்தார்கள். அதிபதிகள் மிகவும் கலங்கி 'இனி என்ன செய்வது? நமது விருந்துக்கு உபயோகமாவதற்காக நம்முள்ளே மிகவும் கிழவர்களானவர்களைப் பிடியுங்கள்' என்று கட்டளையிட்டனர். அவ்வண்ணம் ஏழு வயோதிபர்கள் சிறையிலிடப்பட்டார்கள்.

அவர்களில் ஒரு கிழவன் அதிபதிகளிடம் கெஞ்சி, 'ஐயன்மாரே, எனக்கு வாலிபனான ஒரு மகனும், வாலிபப் பெண்ணான ஒரு மகளும் உண்டு. அவர்களைப் பிடித்துக்கொண்டு என்னை விட்டுவிடுங்கள்' என்று வேண்ட, அதிபதிகளும் அதை ஏற்று அவ்வாலிபரைப் பிடித்துக்கொண்டு, கிழவனை விட்டுவிட்டனர்.

அவ்விளைஞனையும், அந்நங்கையையும் அன்றே கொல்ல உத்தரவுமிடப்பட்டது. உடனே அவர்கள் இருவரும் இழுத்துச் செல்லப்பட்டார்கள். அவர்கள் கதறியழுத பரிதாபக் குரல் பக்தன் காதில் விழவே, அவர் அவர்களுக்காக வேண்டிக்கொண் டார். ஆண்டவரருளால் அவர்களின் கழுத்தை வெட்ட ஓங் கப்பட்ட கத்தி வழுவி விழுந்தது. இதை விபரீதமாய் அர்த்தப் படுத்திக்கொண்ட அதிபதிகள், 'ஐயோ! நமக்கு மோசம் வந் தது! இளைஞரை விட்டுவிடுங்கள்; ஆனால் நம் மத்தியிலிருந்து கொண்டு மந்திரம் செய்துகொண்டிருக்கிற ஒருவனை, அவனால் தான் இவ்விபரீதங்கள் நடைபெறுகின்றனவாதலால், பிடித்துக் கொள்ளுங்கள்' என்று கட்டளையிட்டார்கள். அவன் யார் என்று தேடியலைந்த சேவகர் அந்திரேயாவைக் கண்டு, கையும் காலும் கட்டி, அதிபதிகளிடம் கொண்டுபோக, அவர்கள், 'இவனை சித்திரவதை செய்து கொல்லுங்கள்' என ஆஞ்ஞாபிக் கவே, அப்போஸ்தலன் கயிறுகளால் கட்டப்பட்டுத் தெருத் தெருவாய் இழுத்துச் செல்லப்பட்டார். அவருடைய கால்களி லும், முதுகிலுமுள்ள தோல் தேய்ந்து, சதை கிழிந்து ரத்தம் வடிந்தது. பகல் முழுவதும் இவ்வண்ணம் இழுத்து வதைத்து, இரவில் அவரை சிறையிலடைத்தனர். இவ்விதம் மூன்று நாட் கள் நடந்தது. அப்போஸ்தலன் அனுபவித்த வேதனை விஸ் தரிக்கக்கூடியதல்ல. மூன்றும் நாள் இரவு கர்த்தர் அவருக்குத் தரிசனமாகி, அவருடைய காயங்களைத் தொட்டு சுகப்படுத்தினார்.

சிறையில் ஒரு சிலை இருந்தது. அந்திரேயா அச்சிலை வாயிலிருந்து உப்பு நீர் கொப்புளிக்கும்படி கட்டளையிட, அவ் வண்ணமே ஏராளமாகத் தண்ணீர் வந்தது. நான்காம் நாள் மாலைக்குள் ஊர் முழுவதும் உப்பும் கந்தகமும் கலந்த நீரால் நிறைந்தது. மார்பளவுக்குத் தண்ணீர் வந்துவிடவே, மக்கள் அனைவரும் அப்போஸ்தலனிடம் வந்து, கதறியழுது மன்னிக்

கும்படி வேண்டினார்கள். அந்திரேயா அவர்களுக்கு மன்னித்து தேசத்தை ஆரோக்கியப்படுத்தி, இரட்சிப்பின் நல்லுபதேசம் கூறி, மக்களை மனந்திரும்பச் செய்துவிட்டு வேறிடம் சென்றார்.

பின்பு அவர் திரப்பிசஸ், நிசேயா, கால்ஸேதோன், ஹெராக்லியா, அமாஸ்ட்ரீஸ் முதலிய பட்டணங்களில் யூதருக்கும், புறஜாதியாருக்கும் சுவிசேஷத்தை அறிவித்து, சினோப்பி பட்டணத்துக்கு (Sinope) வந்து, அங்கு சில காலம் தங்கி, ஒரு உறுதியான சபையை ஸ்தாபித்துத், தான் அவ்விடம்விட்டுப் போகவேண்டிய காலம் வந்தபோது, பவுலின் சீஷரில் ஒருவனை பிலோலோகை (ரோம 16 : 15) அப்பட்டணத்தின் முதல் அத்தியக்ஷராக அபிஷேகம் செய்தார்.

அங்கிருந்து பைஸான்றியம் என்று அக்காலத்தில் அழைக்கப்பட்ட கான்ஸ்றருன்றிநோபிள் பட்டணத்துக்குச் சென்று, அநேக எதிர்ப்புகளுக்கிடையில் ஊழியம் செய்து, ஒரு சிறந்த கிறிஸ்தவ சபையை ஸ்தாபித்து, தானே அதில் அத்தியக்ஷக் கண்காணிப்புச் செய்தார். பின் சில காலம் கழித்துப், பரிசுத்த பவுல் அப்போஸ்தலனின் நண்பர்களில் ஒருவனை ஸ்தாக்கி (Stachys - ரோமர் 16 : 9) யை அப்பட்டணத்தில் தனது ஸ்தானத்தில் அத்தியக்ஷராக்கினார். (பரி. அந்திரேயாவே கான்ஸ்றருன்றிநோபிலின் முதல் அத்தியக்ஷர்). அந்நாட்டு அரசன் அந்திரேயாவை தேசப்பிரஷ்டம் செய்துவிடவே, அப்போஸ்தலன் அக்கிரோப்போலிப் பட்டணம் சென்று, அங்கு பிரசங்கம் செய்து கிட்டத்தட்ட அப்பட்டணவாசிகளனைவருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார். பின், திரேஸ், மாசிடோனியா, தெசாலி, அகாயா, எப்பைரஸ் நாடுகளில் சுற்றித்திரிந்து, சுவிசேஷத்தை அறிவித்து, அகாயாவிலுள்ள பெட்ரே நகரில் தங்கினார்.

பெட்ரேயில் அநேகர் குணப்பட்டார்கள். அப்பட்டணம் ரோம அதிபதியான ஏஜியஸ் என்பவனின் ஆட்சியிலிருந்தது. ரோமர்கள் அங்கு வசித்துவந்தார்கள். அப்போஸ்தலனின் ஊழியத்தின் பயனாக அவர்களிலும், மற்றும் யூத, கிரேக்க ஜாதிகளிலும் திரள்பேர் விசுவாசிகளானார்கள். அதிபதியான ஏஜியஸின் மனைவி மாக்ஸிமில்லாவும் கிறிஸ்துநாதரை ஏற்றுக்

கொண்டு கிறிஸ்தவளானாள். அவனுக்கு இது பிடிக்கவில்லை. அவன் தன் மனைவியைத் துன்புறுத்தி, அவளை 'விசுவாசத் துரோகியாக்க' ஆனமட்டும் பிரயாசப்பட்டான். ஆனால் அவளோ, சகல சித்திரவதைகளையும் பொறுமையாய்ச் சகித்து மறுதலிக்க மறுத்துவிட்டாள்.

ஏஜியஸின் கோபம் இப்போது அந்திரேயா மீது பாய்ந்தது அவன் அப்போஸ்தலனைப் பிடித்து × வடிவமுள்ள சிலுவையில் அறைந்து கொல்லுமாறு கட்டளையிட்டான். இரண்டு நாள் அப்போஸ்தலன் அச்சிலுவையில் பாடுபட்டார். அவ்விரண்டு நாட்களும் தன்னைக் காண வந்த திரள் கூட்டத்தாரான கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்தி, விசுவாசத்தை விட்டு விடாதிருக்கப் புத்தி கூறினார். தன்னைக் கேலிசெய்த அவிசுவாசிகளுக்குச் சுவிசேஷ சத்தியங்களைச் சொல்லி, இயேசுவே தேவன் என்று விளக்கினார். விரோதிகளிலும் அநேகர் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

இரண்டாம் நாள் மாலையில் அந்திரேயாவினிமித்தம் பட்டணத்தில் ஓர் அமளியுண்டாயிற்று. உடனே ஏஜியஸ் தானே சிலுவையினண்டை வந்து அவரை இறக்கி விடுதலை செய்ய முயன்றான். அப்போஸ்தலனோ அதற்கு இடங்கொடுக்கவில்லை. அதன்பின் சில நிமிஷங்களில் இயேசு ரக்ஷகரைத் துதிக்கும் துதியுடன், தன் ஆவியை அன்பர் கரங்களில் ஒப்புக்கொடுத்தார்.

அப்போஸ்தலரின் சரீரம் பைஸான்றியத்திலிருந்து வந்திருந்த பக்தர்களால் சிலுவையினின்று இறக்கப்பட்டு, அவர் முதல்முதலாவது அத்தியக்ஷ பீடம் வகித்த அந்த பைஸான்றியம் பட்டணத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. கிறிஸ்துவுக்குப்பின் 330-ம் ஆண்டில் மகா கான்ஸ்றன்றைன் சக்கரவர்த்தி அக்கல்லறையை உள்ளடக்கி அப்போஸ்தலர் ஆலயம் (The Church of the Holy Apostles) என்ற மகத்தான ஆலயத்தைக் கட்டினான்.

கொந்தளிக்கும் லோக வாழ்வில்
கேட்போம் மீட்பர் சத்தத்தை:
'நித்தம் நித்தம் மா அன்போடு,
நேசா, பின் செல்வாய் என்னை'.

— பாமாலை 144 : 1

3

அப்போஸ்தலனாகிய
பரிசுத்த யோவான்

அவனுடைய சாட்சி மெய் [யோவான் 21 : 24]

அப்போஸ்தலனாகிய பரிசுத்த யோவான் சிலகாலம் பேதுரு வுடன் சேர்ந்தே சுவிசேஷ ஊழியம் செய்தார் என்று பரிசுத்த அப்போஸ்தலர் நடபடிகளினாகமத்தில் வாசிக்கிறோம். பேதுரு எருசலேமைவிட்டு வெளியேறினபின், யோவான், பரிசுத்த கன்னி மரியம்மாள் கி. பி. 48-ல் மரிக்குமட்டும், அந்தம்மாளுக்கு ஆதரவாயிருந்து, அதன் பின்னும் எருசலேம் பட்டணத்திலுள்ள சபையிலேயே பணியாற்றிவந்தார். கி. பி. 50-ம் வருஷம் எருசலேம் சபைச்சங்கம் கூடியபோது, இவர் ‘சபையின் தூண் களில் ஒருவராக’ மதிக்கப்பட்டதாக கலாத்தியர் நிருபத்தில் வாசிக்கிறோம். எருசலேமில் கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபு அத்தியக்ஷராயிருந்த காலமெல்லாம், யோவானும் அங்குதானிருந்தார் என்பது பல சாஸ்திரிகள் கொள்ளும் அபிப் பிராயம். யாக்கோபு கி. பி· 62-ம் வருஷத்தில் கொல்லப்பட்ட பின்பு, யோவான் பலஸ்தீனாவைவிட்டு வெளியேறி, சின்ன ஆசியா நாட்டுக்குச் சென்றார்.

சின்ன ஆசியாவிலுள்ள எபேசுப் பட்டணத்தைத் தன் இருப்பிடமாக்கிகொண்டு, * அதிலிருந்து சுற்றுப் பிரதேசங் களில் அவர் செய்த ஊழியத்தின் பயனாய் பல சபைகள் தோன்றின. அவற்றில் முக்கியமானவை ஸ்மிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்பவை களாம். எபேசுப் பட்டணத்தில் அவர் கிறிஸ்துவின் ராஜரீகத் தைப்பற்றிப் பிரசங்கித்து, உலக ராஜ்யங்களெல்லாம், ரோம சாம்ராச்சியமுங்கூட, அழிந்துபோகும். ஆனால் இயேசு

---

*அருமை இரட்சகரின் தாயாராகிய பரிசுத்த மரியாள் எபேசுவுக்குச் சென்று பரிசுத்த யோவானின் ஆதரவில் தன் கடைசி நாட்களைச் செல விட்டு, அங்கேயே மரித்து அடக்கம் பண்ணப்பட்டார் என்பது ஒரு பாரம் பரியச் செய்தி.

ராஜாவின் ராஜ்யம் என்று நிலைக்கும் என்று பகிரங்கமாய்க் கூறினர். இப்படி அவர் பற்பலவிடங்களில் பற்பல தடவைகளில் பிரசங்கித்ததினுல், இச்செய்தி ராஜாங்க அதிகாரிகளுக் கெட்டிற்று. அவர்கள் மூலமாய் அது ரோம சக்கரவர்த்தியாகிய தொமீஷியன் காதுகளுக்கும் கிட்டியது. அவன் உடனே நூற்றுக்கதிபதியொருவனிடம் சேனுவீரரை அனுப்பி, அப்போஸ்தலனைப் பிடித்துக்கொண்டுவரும்படி கட்டளையிட, அவர்கள் எபேசு சென்று யோவானைக் கைதியாக்கித் திரும்பினர். வரும் வழியில் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர, மற்ற நாட்களில் அவர் ஒன்றும் புசியாதிருந்ததைச் குறித்து ஆச்சரியப்பட்ட நூற்றுக்கதிபதி, அரண்மனை சேர்ந்ததும் அரசனிடம் அவ்விஷயத்தைக் கூறவே, அவனும் மிகவும் ஆச்சரியமடைந்தான்.

அன்றே அப்போஸ்தலன் சக்கரவர்த்தியின் முன் நிறுத்தப்பட்டார். டொமீஷியன் அவரிடம் "எம் அரசு ஒழிந்து, இயேசு என்றொரு அரசன் ஆளுகை செய்வார் என்று கூறின யோவான் நீதானு?" என்று கேட்க, யோவான், "ஆம், நான்தான். கடவுள் எத்தனை வருஷங்கள் உமக்குக் கொடுக்கிருரோ அத்தனை ஆண்டுகள் நீர் ஆளுவீர். உமக்குப் பின்னும் அநேகர் அரசு புரிவார்கள். பூலோகக் காலங்கள் முடிவடைந்தபின், பரலோகத்திலிருந்து ஒரு ராஜா வருவார். எல்லா ஜாதிகளும் கோத்திரங்களும் அவருக்கு கீழ்ப்படும். நித்தியரும், சத்தியருமான நியாயாதிபதியாக, அவர் மரித்தோரையும் ஜீவனுள்ளோரையும் நியாயம் தீர்ப்பார். பூமிக்குரிய சகல அதிகாரங்களும் அவரால் ஒன்றுமில்லாமையாக்கப்படும். பெருமையானவைகளைப் பேசும் வாய்கள் யாவும் அடைக்கப்படும். இவரே சர்வ வல்ல ஆண்டவரும், சுவாசமுள்ள யாவுக்கும் இராஜாவானவருமான 'வார்த்தை' என்னும் தேவகுமாரனுன இயேசு கிறிஸ்து" என்றுர். தொமீஷியன், "எனக்குப் பிரசங்கம் தேவையில்லை, நீ சொல்லுகிற அவர் தேவ குமாரனுயிருந்தால் அதைக் கிரியையில் நிரூபி" என்று கேட்டான். யோவான் உடனே சில அற்புதங்களை நடப்பித்தார். அவை, கொடிய விஷத்தைத் தான் உண்டு சாகாதிருந்ததுவும், அவ்விஷத்தை ஒரு கைதிக்குக் கொடுத்ததும் அவன் மரிக்கவே, அவர் அவனை உயிருடனெழுப்

பினதுவும், அரண்மனையில் அன்று மரித்துப்போன ஒரு தாதிப் பெண்ணை உயிர் பெறச் செய்ததுமாம். சக்கரவர்த்தி இவற்றைக் கண்டதும், தான் முன் நிர்ணயித்திருந்தபடி அப்போஸ்தலனைக் கொல்லுவது கூடாது என்று எண்ணி, ஆயினும், ரோமருக்குப் பயந்ததினால், அவரைப் பத்மூத் தீவுக்கு நாடு கடத்தினான். இது சுமார் 8-ம் வருஷம் நடந்திருக்கவேண்டும்.

பத்மூத் தீவிலிருக்கும் காலத்தில் யோவான் பரலோகக் காட்சிகளைக் கண்டு, நமது வேத புஸ்தகத்தின் கடைசி ஆகமத்தை எழுதினார். முதல் மூன்று அதிகாரங்களிலுள்ள கடிதங்கள் பத்முவிலிருந்து ஏழு சபைகளுக்கும் அனுப்பப் பட்டன என்பர். சில வருஷங்கள் அவர் அங்கிருந்தபின், தொமீஷியனுக்குப்பின் வந்த நெர்வா சக்கரவர்த்தியின் கட்டளை யின்பேரில் அவர் விடுதலை பெற்று. மறுபடியும் எபேசுப் பட்டணம் சேர்ந்தார். இது கி. பி. 96-ம் ஆண்டில் என்பது கற்றோர் அபிப்பிராயம்.

சிறையிருப்பு முடிந்து எபேசுப் பட்டணம் வந்த காலத்தில் அவருக்கு வயது சுமார் 96. இவ்வளவு வயோதிபமாயிருந்த போதிலும், யோவான் பின்னும் சில காலம் சபைகளை மேற்பார் வையிடுவதிலும், தனி யாட்களைக் கிறிஸ்துவின் தொண்டராக்கு வதுமான சேவையிலும் ஈடுபட்டிருந்தார்.

அக்காலத்தில் ஒருநாள், அவர் ஒரு கிராமச் சபைக்குச் சென்றார். அவ்வூரில் ஒரு வாலிபனிருந்தான். அவன் நன்றாய் வளர்ந்து திடகாத்திரமுடையவனாகக் காணப்பட்டான். அவன் மிகுந்த புத்திசாலி என அவன் கண்களில் பிரகாசித்த ஒளி காட்டிற்று. எப்படியாவது அவனை ரக்ஷகரின் பிள்ளையாக்கவேண் டும் என்று அப்போஸ்தலன் விரும்பி அவனுக்குக் கிறிஸ்து நாதரின் சுவிசேஷத்தைப் போதித்தார். பின் அக்கிராமச் சபையின் தலைவரான மூப்பரை * அழைத்து, "அதோ, அந்த வாலிபனை நான் உம் கையில் ஒப்புவிக்கிறேன். திருச்சபையும் கிறிஸ்து நாதரும் இதற்குச் சாட்சி," என்று கூறிவிட்டு எபேச

---

* பெரிய கிராமச் சபைகளின் மூப்பர் என்ற குருமார் அக்காலத்தில் கிராம அத்தியட்சர் (Chorepiscopos) என்றறியப்பட்டனர்.

திரும்பினுர். மூப்பர் அப்போஸ்தலன் கட்டளையைச் சிரமேற் கொண்டு, உடனேயே அவ்வாலிபனுடன் நட்புக்கொண்டு, சின்னுட்களில் அவனைத் தன் வீட்டிற்கழைத்துச் சென்று, ரக்ஷிப்பின் மார்க்கத்தைப் போதித்து, ஞானஸ்நானம் கொடுத்துச் சபையில் சேர்ந்தார். சில காலம் அவ்வாலிபன் தன் புதிய வாழ்க்கையில் நன்ருகவே விளங்கினுன்.

ஆனுல் கூடா நட்பு அவனைப் பின்வாங்கச் செய்தது. பொல்லாதவர்களின் கூட்டத்தில் சேர்ந்து விசுவாசத்தைக் கைவிட்டான். தீயவொழுக்கத்தில் பழகி நரக பாதையில் வெகு வேகமாக முன்னேறி, சமுதாயத்திலிருந்து விரட்டப்பட்டு கள்வர் கூட்டத்தில் சேர்ந்து, அவர்களின் தலைவனுமானுன், கொள்ளையும் கொலையும் அவன் செய்துவந்த தினசரித் தொழில்கள்.

ஒருநாள் யோவான் திடீரென்று அக்கிராமத்துக்குச் சென்று அக்கிராம அத்தியக்ஷரான அந்த மூப்பரை அழைத்து, 'நான் உம்மிடம் ஒப்புவித்த பொருளை என்னிடம் தாரும். கர்த்தரும் நானும் இச்சபை சாட்சியாக உம்மிடம் ஒப்புக்கொடுத்தோமே' என்க, அக்கண்காணியார், அது எப்பொருள் என்று அறியா யாமல், சற்று திகைத்தார். அதுகண்ட அப்போஸ்தலன், 'நான் அன்று உம்மிடம் ஒப்படைத்தேனே அந்த வாலிபனின் ஆத்துமாவைத்தான் கேட்கிறேன்' என்க, அவர் 'ஐயோ! அவன் செத்துப்போனுனே' என்று பதிலுரைத்தார். அவர் கண்களில் கண்ணீர் வடிந்தது. அன்பின் சீஷன், மேலும் 'எப்படி இறந்தான்?' என்று மிகுந்த துயரத்துடன் வினவ, அவ் அத்தியக்ஷர் நடுநடுங்கி, அச்சம் நிறைந்த குரலில், 'தேவ கிருபையிலிருந்து நழுவி விழுந்து செத்தான். தேவ காரியங்கள் சம்பந்தப்பட்டவரையில் அவன் செத்தே போனுன். அவன் செய்த பொல்லாத காரியங்களினிமித்தம் நகரத்திலிருந்து விரட்டப்பட்டு, இப்பொழுது மலைகளில் ஒளிந்து திரியும் திருட னுய் அலைகிருன்' என்ருர்.

அப்போஸ்தலனுக்கு சணப்பொழுதும் தாமதிக்க மனதில்லை அவர் உடனே ஒரு குதிரை மீதேறி, கள்வரின் கானகம் புகுந் தார். திடீரென்று திருடர் கூட்டமொன்று அவரைச் சூழ்ந்து

கொண்டு, வயோதிபன் என்றும் பாராது, அவரைப் பல துன்பங்களுக்குள்ளாக்கி, மலைகளின் மீதிழுத்துச் சென்று தம் தலைவன் முன் நிறுத்தினர். கள்வர் தலைவன் உடனே அவரைக் கண்டு கொண்டான். ஏதோ ஒருவித பயம் அவனைப் பிடித்தது. அப்பரிசுத்தவானின் பார்வைக்குமுன், பாவத்தால் நிறைந்த தான் நிற்கக்கூடாதிருப்பதை உணர்ந்தான். அப்போஸ்தலன் ஒரு வேளை தன்னைக் கடிந்துரைப்பார் என்று கருதி, துள்ளிக்குதித்து குகையை விட்டு வெளியேறி, மலைச்சரிவில் இறங்கி ஓடினான். யோவானோ, தன் மூப்பையும் பாராமல் அவன் பின்னால் ஓடி, 'என் மகனே, உன் தகப்பனைக் கண்டு ஏன் பயந்து ஓடுகிறாய்? என்னைப் பார்! என்மேல் இரக்கம் பாராட்டமாட்டாயா? என் மகனே, அஞ்சாதே. இன்னமும் நீ இரட்சிக்கப்பட நம்பிக்கையுண்டு; உனக்காக நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குமுன் நின்று மன்றாடுவேன். அவசியமானால் உனக்காக மரிக்கவும் நான் சந்தோஷத்துடன் தயாராயிருக்கிறேன். நமக்காக அவர் மரித்தாரே! மகனே, நில்; நம்பு; அவரே என்னை உன்னிடம் அனுப்புகிறார்' என்று உரத்த சத்தமாய்க் கூவிச் சொன்னார்.

அந்த வாலிபன், உடனே தன் கையிலிருந்த ஆயுதங்களை எறிந்துவிட்டு, மலையின் மேலேறி, பரிசுத்த யோவானிடம் தலைகுனிந்தவனாக நடந்துவந்து, முழங்காற்படியிட்டு, முகத்தை தன் கைகளால் மூடிக்கொண்டு சத்தமாய் அழுதான். அப்போஸ்தலன் அவனைத் தூக்கி நிறுத்தி, அவனை ஆலிங்கனம் செய்தார். இருவரும் அழுதார்கள். பின்பு அவர் ஜெபித்து, கர்த்தராகிய கிறிஸ்து அவனை மன்னிக்கும்படி வேண்டினார். வாலிபன் உத்தம மனஸ்தாபக் கண்ணீர் சிந்தி அழுது ஜெபித்தான். அன்பர் அவனைப் புறக்கணித்தாரா? அவனுக்காகவும் அவர் இரத்தம் சிந்தப்படவில்லையா? நிறைந்த மனச்சமாதானம் அவன் இருதயத்தை ஆண்டது. மீட்கப்பட்டவனாக, அவன் 'அன்பின் சீஷனுடன்' மலையிலிருந்து இறங்கி, ஆலயத்துக்குப் போனான். திரும்பவும் சபையில் சேர்க்கப்பட்டுத் தன் பிந்திய நாட்களை உத்தம கிறிஸ்தவ ஊழியத்தில் செலவிட்டான்.

யோவான் அப்போஸ்தலனின் கடைசி வருஷங்கள் எபேசுவிலேயே கழிந்தன. மூப்பினால் அவர் நடமாடக் கூடாதவரான காலத்திலும், தன்னைத் தேடி வருபவர்களுக்கும், தன் சீஷர்களுக்கும் இயேசுவின் அன்பு ஒன்றையே பற்றிப் பேசிக் கொண்டிருப்பார். ஓய்வுநாட்களில் திரளான ஜனங்கள் ஆலயத்தில் கூடியிருக்கும் வேளையில், அவரை ஒரு நாற்காலியில் வைத்துத் தூக்கிக்கொண்டுபோய் ஆலயத்தில் வைப்பார்கள். தன் பெலவீனத்திலும், அவர், கூடிய அளவு சத்தமாய், 'பிள்ளைகளே, ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள்' என்று கூறி அதற்குமேல் பேசமுடியாதவராய், அந்தச் சிறிய பிரசங்கத்தை முடிப்பார்.

அதிக பலவீனமாயிருந்த காலத்தில் தன்னுடைய மூன்று நிருபங்களையும் எழுதினார். முதலாம் நிருபம் சபைகளுக்கும், இரண்டாம், மூன்றும் நிருபங்கள் தனி மனிதருக்கும் எழுதப் பட்டவை.

'அன்பின் சீஷன்' இவ்வண்ணமாய்த் தன் அன்பின் ஊழியத்தைக் கடைசிவரைக்கும் நிறைவேற்றி கி. பி. 99-ம் வருஷம் சுமார் 100 வயதுடையவராய் சமாதானத்துடன் மரித்து அன்பரின் திருச்சன்னிதானம் சேர்ந்தார். அவரது சரீரம் எபேசுவில் அடக்கம் செய்யப்பட்டது.

கழுகைப்போல வான் பறந்தே
மா ரகசியம் கண்ணோக்கினார்
நீர் திவ்விய வார்த்தையாம் என்றே
மெய்யான சாட்சி கூறினார்.

— பாமாலை 75 : 3

4

அப்போஸ்தலஞகிய

பரிசுத்த பிலிப்பு

மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம் [யோவான் 1 : 45]

அப்போஸ்தலஞகிய பரிசுத்த பிலிப்பு பெத்சாயிதா ஊரான் என்றறிவோம். ஆனதுபற்றி அவர் பேதுரு அந்திரேயா முதலிய வர்களை ஏற்கனவே நன்கறிந்து நட்புறவுகொண்டிருந்தவர் என்பதும் தெளிவு. இயேசு நாதரால் அழைக்கப்பட்டு அவருக்குச் சீஷஞன பிலிப்பு, நாத்தான்வேலைக் கர்த்தரிடத்தில் அழைத்துவந்தார்.

ஐந்தப்பங்களைக் கொண்டு ஐயாயிரம் பேரை இரட்சகர் பசி யாற்றின சம்பவம், கிரேக்கர்களை அந்திரேயாவுடன் சேர்ந்து அழைத்துவந்த சம்பவம், "ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும்," என்று கேட்ட சந்தர்ப்பம் முதலிய ஒரு சில சமயங் களில் தவிர பிலிப்புவைப்பற்றிச் சுவிசேஷங்கள் வெறெச் செய் தியும் நமக்குத் தந்தில.

கர்த்தர் பரத்துக் கேறிய பின், பெந்தேகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்ற சீஷர், சில காலம் எருசலேமிலிருந்துவிட்டுப், பின் ஆவியானவர் அவர்களை எவ் வெத் தேசங்களுக்கு அனுப்பினுரோ அங்கு சென்று, தங்கள் அப்போஸ்தலப் பணியை நிறைவேற்றினுர்கள்.

பரிசுத்த பிலிப்புவின் ஊழியத்தைப்பற்றிய வரலாறு "பிலிப்பு வின் நடபடிகள்" என்னுமொரு பழங்கால நூலில் காணப் படுகிறது. ஆனுல் அந்நூல் பிற்காலத்தியதென்பதாலும், அது தரும் சில செய்திகள் கட்டுக் கதைகளை யொத்திருந்தன வென்ப தாலும், அவ்வரலாறு ஏற்கப் பாலதன்று என்று வரலாற்ருசிரியர் கள் அதை ஒதுக்கித் தள்ளிவிடுகின்றனர். ஆனுல் அவர்கள் கொடுக்கின்ற காரணங்களை நாம் அவ்வளவு இலகுவில் ஏற்கத்

தேவையில்லை. எடுத்துக்காட்டாக, 50 அடி நீளமுள்ள ஒரு சர்ப்பத்தையும் பிற நாகங்களையும் வானத்திலிருந்து அக்கினியைத் தருவித்து, அப்போஸ்தலன் அழித்தார் என்றும், இன்னும் அதுபோன்ற பல அற்புதங்களை நிகழ்த்தினர் என்றும் கூறப்பட்டுள்ளதை வைத்து, 50 அடி நீளமுள்ள அரவமெதுவும் இன்றுள்ள உலகிலில்லை, எனவே "அவ்வரலாற்றுச் செய்தி"யை வரலாறென்று ஒப்புக்கொள்ள முடியாதென்பர். ஆனால், பூமியினடியிலிருந்து காலாகாலங்களில் கிடைக்கும் எலும்புக் கூடுகள் விநோதமும் விபரீதமுமான பல பிராணிகள் ஒவ்வொரு காலத்தில் வாழ்ந்தனவென்று நிரூபிக்கின்றன வன்றோ ! சதுப்பு நிலக்காடுகளிலும், பூர்வீகக் காடுகளடர்ந்த பெரிய பெரிய மலைத் தொடர்களிலும் பயங்கரமான பிராணிகள் வாழ்ந்தனவென்பதை நம்புவது கடினமல்லவே.

வானத்திலிருந்து அக்கினியை அப்போஸ்தலர் தருவித்தனர் என்பதை நம்பமுடியாதென்றால்; அப்போஸ்தலர்களால் நடப்பிக்கக் கூடுமென்று கர்த்தர் சொன்ன காரியங்களை நம்ப முடியாது என்பதுதானே பொருள் ? .

எது எவ்வாறாயினும், அப்போஸ்தலர்கள் அதிகமாகத் தன்னந்தனியாகவும், சிற்சில சமயங்களில் இரண்டிரண்டு பேராகவும், நீண்ட பிரயாணங்களிற் சென்று, காடுகளைக் கடந்து, நாடுகளில் சேர்ந்து, பட்டிகளிலும் பட்டணங்களிலும் சுவிசேஷத்தைக் கூறிவந்தனரென்பது உண்மை. அப்படி அலைந்து சென்ற அவர்கள் என்னென்ன எதிர்ப்புகளைச் சமாளித்திருந்திருப்பார்கள்! என்னென்ன கஷ்டங்களை அடைந்திருப்பார்கள்! அவர்களுடைய உயிருக்கு என்னென்ன விதமான ஆபத்துகள் உண்டாயிருந்திருக்கும் ! அவைகளிலிருந்து தெய்வத்தின் நேரிடைக் குறுக்கீடில்லாமல் அவர்கள் பாதுகாக்கப்பட்டிருக்கக் கூடியது எவ்வாறு ? ஆகவே, "நான் உன்னோடிருக்கிறேன்," "தண்ணீர்களைக் கடக்கும் போது உன்னோடிருப்பேன். நீ ஆறுகளைக் கடக்கும் போது அவைகள் உன் மேல் புரளுவதில்லை, நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய், அக்கினி ஜுவாலை உன் பேரில் பற்றாது," என்றெல்லாம் வாக்குக் கொடுத்தவர், அப்போஸ்தலரின் வாழ்க்கையில் தேவையேற்பட்ட காலத்து,

அற்புதங்களை நடத்தியிருக்க மாட்டாரோ? எனவே, இவ்வரலாறுகளில் கூறப்படுகிற அற்புதச் செயல்களைக் கட்டுக் கதைகள் என்று புறக்கணிப்பது முறையென்று ஒப்புக்கொள்ளோம்.

பிலிப்பு திருமணமாகாதவராக, அல்லது தாரமிழந்தவராக விருந்திருக்கவேண்டும். ஏனெனில் அவர் தனது பிரயாணங்களில் தன்னுடைய சகோதரியான மிரியாமையே அழைத்துச் சென்றார் என்றறிகிறோம். மிரியாமும் ஒரு பலத்த விசுவாசி. அவள் பெத்தானியாவூர் மார்த்தாளுக்கு ஒரு நல்ல சிநேகிதியாயிருந்தாளென்பது ஒரு பாரம்பரியம்.

பிலிப்புவினுடைய பணிவிடை யனைத்தும் சின்ன ஆசியாவிலேயே நிறைவேறியது. அவர் பிரிகியா (Phrygia) நாட்டில் தன் துவக்க கால ஊழியத்தை நிறைவேற்றினாரென்றும், ஆனால் அதற்கு முன், கிரேக்க நாட்டுக்குப் போய் அத்தேனே பட்டணத்தில் சுவிசேஷம் கூறினார் என்றும் ஒரு வரலாறு (அல்லது, பாரம்பரியம்) கூறுகிறது.

அத்தேனேயில் அவர் பல நோயாளிகளைச் சுகப்படுத்தினார்; கண் தெரியாதவர்களுக்குக் கண்களைத் திறந்தார்; காது கேளாதவர்களைக் கேட்கச் செய்தார்; பிசாசு பிடித்தவர்களிலிருந்து அவைகளை ஓட்டினார்; மரித்துப்போன ஒரு சிலர் உயிர் பெற்றெழச் செய்தார். அவருடைய கீர்த்தி பட்டணம் முழுவதிலும் பிரசித்தமானது.

ஒரு தடவை அத்தேனே பட்டணத்துத் தத்துவ ஞானிகளின் (Athenian Philosophers) கூட்டத்தில் கலந்து கொண்டு, அவர்களுக்குக் கிறிஸ்துநாதரின் ஞானம், தியாகம், இரட்சிப்பு இவைகளைப்பற்றிப் பேசி, இரட்சிப்படைவதற்கு இயேசுவின் நாமமேயல்லாமல் வேறே நாமமெதுவும் கொடுக்கப்படவில்லையென்று திட்டவட்டமாகப் போதித்தார். ஞானிகள் அப்போதனைகளைப்பற்றித் தங்களுக்குள் ஆலோசித்து இந்த மனிதனுக்குத் தகுந்த பதில் கூறக்கூடியவர்கள் எருசலேமிலுள்ள யூத மதக் குருக்களே அன்றி வேறு யாருமிலர் என்று தேர்ந்து, பிலிப்புவையும், அவருடைய கிறிஸ்தவ உபதேசங்களையும், செய்கைகளையும்பற்றி தெளிவாக ஒரு கடிதத்தில்

எழுதி, அதை எருசலேமிலிருந்த வயது முதிர்ந்த பிரதான ஆசாரியனான அனனியா என்பவனுக்கு அனுப்பி, 'நீர் தயவு செய்து இங்கு வந்து, இந்த பிலிப்பு என்பவன் சொல்லுகிற 'இயேசு' என்னும் இந்த நாமத்தைப்பற்றிய காரியத்தைத் தெளிவுபடுத்தவேண்டும்' என்று வேண்டினார்கள்.

அனனியா அதை வாசித்ததும் கோபத்தால் நிறைந்து, "இந்த ஏமாற்றுக்காரன் ஞானிகளின் நகரமாகிய அத்தேனேக்கும் போய், அவர்களை வழிவிலகச் செய்ய முயற்சிக்கிறானே? இதை விட்டுவிட்டால் இந்த மனிதருடைய போதனை உலகத்தையே நிறப்பிவிடும்!" என்று வெகுண்டெழுந்தான். அவன் பரிசேயர், ஆசாரியர் முதலியவர்களிடம் ஆலோசனை கேட்கத் தீர்மானித்து, அவர்களை அழைத்தனுப்பினான். அவர்கள், "நீர் ஐந்நூறு பேரைக் கூட்டிக்கொண்டு அத்தேனேக்குப் போய், பிலிப்புவைக் கொன்றுவிட்டு வாரும்" என்று ஆலோசனை கூறினர்.

அவ்வாறே ஐந்நூறு பேருடன் அனனியா அத்தேனேக்குச் சென்றபோதிலும், பிலிப்பு செய்த அநேக அற்புதங்களை எதிர்த்து நிற்கக்கூடாமல், திரும்பினான்.

அதன்பின் சுமார் இரண்டாண்டுகள் பிலிப்பு அத்தேனேயில் ஊழியம் செய்தார்.

கிரேக்க நாட்டிலிருந்து திரும்பியபின், சின்ன ஆசியா நாடுகளில் சுவிசேஷம் கூறினாரென்றும், சில காலம் அவருடைய நண்பரான அப்போஸ்தலனாகிய பரிசுத்த பர்த்தொலோமேயுவும் அவருடன் அத்திருப்பணியில் உடனுழைத்தாரென்றும் பாரம்பரியம் கூறுகிறது.

பிந்திய காலத்தில் சின்ன ஆசியாவின் கிழக்குப் பகுதியில் தன் சகோதரியுடன் சேர்ந்து நாடெங்கும் சுற்றியலைந்து சுவிசேஷம் கூறினார்.

இறுதி ஆண்டுகளில் அவர் பர்த்தொலோமேயுவுடனும், மிரியாமுடனும் ஹையராப்பொலிஸ் (Hierapolis) என்ற நகரத்துக்குச் சென்றார்.

சின்ன ஆசியப் பட்டணங்களனைத்திலும் விக்கிரக வணக்கம் அதிகமாக உள்ள நகரம் அது. நாகங்களைத் தெய்வமாகக் கொண்டு, அவைகளுக்கு அநேகக் கோயில்களைக் கட்டி, நாகச் சிலைகளைச் செய்து அவைகளில் வைத்து வணங்கினர் அவ்வூர் மக்கள். நாக தேவதைகளின் பட்டணமாதலால், ஹையராப்பொலிஸுக்கு, 'நாகங்களின் நகரம்' என்றர்த்தம் கொள்ளும் ஒப்வியோரிமா (**Ophiorymа**) என்னும் பெயரும் உண்டு.

அவ்வூரில் ஒரு சில கிறிஸ்தவர்களிருந்தனர். அவர்களில் ஒருவர் ஸ்தாக்கி (**Stachys**) என்னும் பெயரினர். ஒரு சிறந்த பக்தன். அவர், பிலிப்பு, மிரியாம், பர்த்தொலோமேயு என்னும் மூவரையும் தன் வீட்டில் ஏற்று, தன் வீட்டிற்கு வருபவர்களுக்கு இரட்சிப்பின் நற்செய்தியைப் போதிக்கத் தகுந்த வசதிகளை அவர்களுக்குச் செய்துகொடுத்தார்.

மிரியாமும் பிலிப்புவும் அங்கு கூடிவந்தவர்களுக்குச் சுவிசேஷம் கூறினர். அவர்கள் கூறின நற்செய்தியில் அவர்கள் வற்புறுத்தின உண்மைகள், கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவின் மூலமாக கொடிய வலுசர்ப்பமாகிய சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து கிடைக்கும் மீட்பும் நித்திய ஜீவனுமாம். பர்த்தொலோமேயுவும், ஸ்தாக்கியும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு இச் சத்தியங்களை அதிகமதிகமாக வற்புறுத்திப் பேசினர்.

இந்த ஊழியம் பல நாட்களாக நடந்துவந்ததின் பயனாக, திரளான மக்கள் 'பிரதான சத்துரு' வினிடத்திலிருந்து தப்பி, இயேசு நாதரிடமாகத் திரும்பினர். பிலிப்புவும் அவனுடனிருந்தவர்களும் அவர்களைச் சேர்த்துக்கொண்டார்கள். விசுவாசிகளும் கிறிஸ்துவின் அன்பில் திடனடைந்தார்கள்[1]

ஹையராப்போலிஸின் ரோம அதிபதி (**Governor**) ஒரு தீவிர விக்கிரகவணக்கக்காரன். அவனுடைய மனைவி நிக்கனோரா (**Nicanora**) ஒரு யூத ஸ்திரீ. அவள் ஏற்கனவே இரட்சகரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தாள். ஸ்தாக்கியின்

---

1 Acts of Philip p. 3

வீட்டில் நடந்துவந்த சுவிசேஷப் பிரச்சாரச் செய்தியைக் கேள்விப்பட்ட அவள், கர்த்தரைப்பற்றி மேலும் அறிய விரும்பி ஒருநாள் பல்லக்கேறி அவ் வீட்டுக்கே வந்துவிட்டாள். அவள் ஒரு எபிரேய மாது என்று மிரியாம் அறிவாளாதலால் அவளைக் கண்டதும் எபிரேய மொழியில் அவளை வரவேற்று, அம் மொழியிலேயே அவளுக்கு உபதேசித்தாள். அப்போஸ்தலரிருவரும் விரைவில் அவர்களுடன் சேர்ந்துகொண்டனர். மூவரிடமும் உபதேசம் கேட்ட நிக்கனோரா விசுவாசித்தாள். பின் அனைவரும் ஜெபித்தனர்.

ஜெபித்து முடிந்தவுடன் அவர்கள் கண்ட காட்சி! .... கவர்னர் மகா கோபாவேசனாக அவர்களுக்கு எதிரில் நின்றான். அவன் தன் மனைவியை மிகுந்த கோபத்துடன் ஏசி, பல தூஷணங்களைப் பேசி, வைது, அவளை இன்னின்ன விதமாகத் தண்டிப்பேன் என்று அச்சுறுத்தினான். அவளோ அவனுக்கே நற்செய்தி கூற ஆரம்பித்துவிட்டாள். அது நிலைமையை மோசமாக்கிவிட்டது. அவனுடைய கோபம் அதிகரித்துக் கட்டுக் கடங்காததாகவே, அவன் அப்போஸ்தலர்களைப் பிடித்து சித்திரவதைக்கு ஒப்புக்கொடுத்தான்.

அவர்கள் பிலிப்புவையும், மிரியாமையும், பர்த்தொலோமேயுவையும் இழுத்துக்கொண்டுபோய், மிலாறுகளால் இரத்தம் வர அடித்தார்கள். பின் மூவரின் கால்களிலும் கயிறுகளைக் கட்டி தெருக்கள்வழியே இழுத்துச்சென்றார்கள். பக்தரின் முதுகுகள் கற்களால் கீறப்பட்டு இரத்தக்களரிகளாயின. கவர்னர் அவர்களை 'விரியனின் கோயிலில்' (**Temple of the Viper**) காவல்வைக்கும்படி கட்டளையிட்டான். தெருக்களில் இழுத்துச் செல்லப்பட்டபோது, அவர்களிடத்தில் காணப்பட்ட பொறுமை அநேகரை விசுவாசத்திற்குள் இழுத்தது.

விரியனின் கோயிலுக்குள் அப்போஸ்தலர் அடைபட்டுக் கிடந்த அன்று அக்கோயில் நாகங்கள் செத்துப்போயின. காலையில் அதை அறிந்த பூசாரிகள் நாகபக்தரில் திரள்பேரை கூட்டிக்கொண்டு, கவர்னரிடம் முறையிடவே, அவன் பிலிப்புவின் கால்களில் கரண்டைக்கு மேல் துவாரமிட்டு, அவைகளில்

கயிறுகளையிட்டுக் கட்டி, விரியன் கோயிலுக்கு முன்னிருந்த மரத்தில் தலைகீழாகத் தொங்கவிடவும், பர்தொலோமேயுவை அக்கோயிலின் சுவருக்கெதிராக நிறுத்திக், கைகளிரண்டையும் பக்கவாட்டில் உயர்த்திச் சுவர்களுடன் ஆணிகளால் அறைந்து நிறுத்திவைக்கவும், மிரியாமை அவமானப்படுத்தவும் கட்டளையிட்டான். அப்போஸ்தலர் இருவரையும் அப்படியே செய்தபின், அவர்கள் மிரியாமிடம் நெருங்கிவந்தபோது, அப் பரிசுத்தவாட்டியைச் சுற்றிலும் அக்கினி பற்றியெறிந்தது. அதைக் கண்ட பகைவர் அவளண்டை நெருங்கப் பயந்து விலகி ஓடினர்.

அதன்பின், கடவுளருளால் அவள் அங்கிருந்து யோர்தான் நதிக்கரைக்குச் சென்றாள்.

பிலிப்பு தானிருந்த நிலையிலேயே சில நாட்கள் தொங்கி, மரித்தார். அவர் இறப்பதற்கு ஓரிரு நாட்களுக்குமுன் பர்த்தொலோமேயு விடுதலைசெய்யப்பட்டார். பிலிப்புவின் வேண்டுகோளுக் கிணங்கி அவர் அந்த வீட்டை விட்டகன்றார்.

காரிருள் பாவம் இன்றியே
பகலொன்றாக ஸ்வாமி தாம்.
பிரகாசம் வீசும் நாட்டிற்கே,
ஒன்றான வழி கிறிஸ்துதாம்.

— பாமாலை. 150 : 1

5

அப்போஸ்தலனுகிய

பரிசுத்த பர்த்தொலோமேயு

கபடற்ற உத்தம இஸ்ரவேலன் [யோவான் 1 : 47]

நாத்தான்வேல் என்ற பர்த்தொலோமேயுவும், பெத்சாயிதா ஊராளுகிய பிலிப்புவும் சிநேகிதர். யூதருக்குள் தொல்மேயர் என்ற ஒரு பிரிவாருண்டு. அவர்கள் ஏபேர் என்ற பெயருடைய ஒரு யூத ரபியின் சீஷர். இக்கூட்டத்தார் வேத ஆராய்ச்சியில் நிபுணர். பர்த்தொலோமேயு இக்கூட்டத்தைச் சேர்ந்தவர் என்பது ஓர் ஐதீகம். பிலிப்பு பர்த்தொலோமேயுவை அதிகமாய் மதித்து நட்புறவுடன் பழகினர். அவர்களிருவரும் தங்கள் தேசத்தைப்பற்றியும், கடவுளைப்பற்றியும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவைப்பற்றியும் அடிக்கடி பேசிக்கொள் வதுண்டு. பிலிப்பு இயேசுவைப் பார்த்து, 'மோசேயின் நியாயப் பிரமாணத்திலும் தீர்க்கதரிசனங்களிலும் சொல்லப்பட்டவர் அவர் தான்' என்று உணர்ந்தவுடன் அதைப் பர்த்தொலோமேயுவிடம் கூற, அவர் முதலில், ' நாசரேத்திலிருந்து நன்மை வருமோ ? ' என்று சந்தேகித்தாலும், பின்பு ' வந்து பார்த்து, ' அவரே ' மேசியா ' என்று திட்டமாய் நம்பினர்.

பெந்தேகோஸ்தே நாளுக்குப்பின் பர்த்தொலோமேயு, பிலிப்புவுடனும், அவரது தங்கை மிரியாமுடனும் ஆசியாவின் மேற்குப்பகுதியில் ஊழியம் செய்தபின், அவர்களைவிட்டுப் பிரிந்து, பார்த்தியா சென்று, சுவிசேஷப் பிரசாரம் செய்தார். பிலிப்புவும் மிரியாமும் பார்த்தியாவுக்கு வந்து, அவரைச் சந்தித்து, அவருடன் அத்தேசத்திலுள்ள பெருநகரங்களி லொன்ருகிய ஹையராப்போலிஸ்பட்டணம் சேர்ந்தனர். அங்கு பிலிப்பு இரத்தச் சாட்சியாய் மரித்தார். பர்த்தொலோமேயு அங்கிருந்து லிக்க வோனியாவுக்கும், மிரியாம் யோர்தான் நதிதீரத்துக்கும் போனுர்கள்.

ஹையராப்போலிஸிற்ருன் பிற்காலத்தில் மத்தேயுவும் அடக் கம் பண்ணப்பட்டார் என்றொரு பாரம்பரியமுண்டு. ஆனல் அது வேறொரு ஹயராப்போலிஸ் என்பர் சிலர்.

பர்த்தொலோமேயு எவ்வண்ணமோ மத்தேயுவுடன் சேர்ந்து, அவர் எபிரேயு பாஷையில் எழுதியிருந்த சுவிசேஷச் சரித்திர நூலை வாங்கிக்கொண்டு இந்தியாவுக்குச் சென்றார். அங்கு பரி. தோமாவினால் கிறிஸ்தவர்களாயிருந்த சேரநாட்டு மக்களைச் சந்தித்து, சில வருஷங்கள் அவர்களுடன் தங்கி, உபதேசம் செய்து, பிரிந்துபோகும் வேளையில் மத்தேயுவின் எபிரேயுச் சுவிசேஷத்தை அவர்களிடம் விட்டுச்சென்றார்.

இச்சுவிசேஷத்தை இரண்டாம் நூற்றாண்டினிறுதியில் தங்களைச் சந்திக்க வந்த, அலெக்சந்திரியாப்பட்டணத்து பரி. பந்தியேனுவிடம் அக்கிறிஸ்தவர்கள் கொடுத்தனுப்பினார்கள் என்று பாரம்பரிய சரித்திரச்சான்றுகளுண்டு.

இந்திய ஊழியம் முடிந்தபின், அப்போஸ்தலன் ஆர்மீனியா தேசத்துக்குச் சமீபமாய் வந்து, அந்நாட்டு மக்களுக்குப் பிரசங்கித்தார். அத்தேச மக்கள் விக்கிரக ஆராதனைக்காரர். அவர்களுடைய பிரதான தெய்வம் அஸ்தரோத் எனப்படுவது. அஸ்தரோத்தையும், மற்று மனேக குட்டித் தேவதைகளையும் அம்மக்கள் வணங்கினர். அவைகள் தங்களில் நோய்வாய்ப்பட்டவரின் நோய்களைத் தீர்த்துவிடும் சக்தி பெற்றவை என்பது அம்மக்கள் அவைகளைப்பற்றி கொண்டிருந்த நம்பிக்கை. பர்த்தொலோமேயு அவ்வூர் வந்த நாளிலிருந்து, அஸ்தரோத்தும் அதன் ‘நண்பரும்’ தங்களைத் தொழுபவர்களின் ஆராதனைகளை ஏற்றுக்கொள்ளவாவது, வியாதியஸ்தரைச் சொஸ்தமாக்கவாவது கூடாமல் திகைத்தன. மக்கள் எவ்வளவு வேண்டியும், அவை பதில் கொடுக்க மறுத்தன. எனவே அவ்வூரார், பக்கத்து நகரத்திலுள்ள பெக்கேர் என்ற தேவதையிடம் போய்க் கேட்க, அத்தேவதை, “மெய்யான கடவுள் தம்முடைய ஊழியக்காரனாகிய ஒருவனை உங்கள் மத்தியில் அனுப்பிய நாள்முதல், உங்கள் தேவனாகிய அஸ்தரோத் நெருப்புச் சங்கிலிகளால் கட்டப்பட்டு, பேசவும், மூச்சுவிடவுங்கூட இயலாதவனாய்த் திணறுகிறான்,” என்றது. ஜனங்கள் “யார் அந்த ஊழியக்காரனை அந்நியன்? நாங்கள் அவனைப் பிடிப்போம், அவனைப்பற்றி எங்களுக்குச் சொல்ல வேண்டும்,” என்று கேட்டனர். அப்போது பேரீத் என்னும் அந்த பெக்கேர் தன் ஆசாரிகள் மூலமாய் கூறினது, “அவன்

சர்வ வல்லவருடைய நண்பன். அவன் தன் தேவனின் நாமத்தில் இங்கு வந்திருக்கிறான். வெள்ளை உள்ளுடையும் வெள்ளை மேற்சால்வையும் தரித்தவன். தலையில் சுருண்ட மயிர். ஆனால் அம்மயிர் வாரப்படவில்லை. வெள்ளை நிறத்தவன். சிவப்பு கலந்த நிறமுடைய தாடியுடையவன். அகன்ற கண்கள். அழகிய நாசி. தலைமயிரால் மறைக்கப்பட்ட காதுகள். அதிக வளர்த்தியுமில்லை. அதிகக் குட்டையுமில்லை. இருபத்தாறு வருஷங்களாக ஒரே ஆடையை அணிந்திருக்கிறான். ஆனாலும் அவ்வாடை அழுக்கேறவுமில்லை, கிழியவுமில்லை. ஒரு நாளில் ஒரு தடவை தன் கடவுளை வணங்குகிறான், ஏழு தடவை ஜெபிக்கிறான். அவன் சத்தம் எக்காளத்தொனிபோல் முழங்கும். அவன் களைப்படைவதுமில்லை. தாகமடைவதுமில்லை. எப்போதும் மலர்ந்த முகத்துடனிருப்பான். பல பாஷைகளைப் பேசுவான். அவனைக் கண்டுபிடியுங்கள். ஆனால் இங்கே கூட்டிக்கொண்டு வந்து விடாதேயுங்கள். வந்தால் என் தம்பி அஸ்தரோத் படும் பாடுதான் எனக்கும்! " என்றது.

ஜனங்கள் அப்போஸ்தலனைத் தேடிக்கொண்டு அலைந்தார்கள். ஒருநாள் பிசாசு பிடித்த ஒருவன் பார்த்தொலோமேயுவைக் கண்டதும், " கர்த்தருடைய அப்போஸ்தலனே, பார்த்தொலோமேயுவே, உம்முடைய ஜெபங்கள் என்னை எரிக்கின்றனவே " என்று கத்தினான். அப்போது அவர் ' நீ பேசாமல் இவனை விட்டு வெளியே வா, " என்று கட்டளையிட, பிசாசு பிடித்தவன் சொஸ்தமானான்.

அவ்வூர் அரசனாகிய பாலிமியஸ் இதைக் கேட்டதும், அப்போஸ்தலன் தன் அரண்மனைக்கு வந்து, அசுத்தாவி பிடித்திருந்த தன் மகளையும் குணமாக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்ள, அவ்வாறே அவர் அரண்மனைக்குச் சென்றார். அங்கு, இளவரசி இரும்புச் சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்தாள். அவ்வாறு கட்டப்படாவிட்டால் அவளை அடக்க ஒருவராலும் கூடாதிருந்தது. ஆனாலும் அப்போஸ்தலனைக் கண்டதும் அசுத்த ஆவி ஓடிப்போய்விட்டது. அவள் சொஸ்தமானாள். அரசன் இதைக் கண்டதும் விசுவாசமுள்ளவனானான். அப்போஸ்தலன் அவனுக்கும், அரசிக்கும்,

இரு ராஜகுமாரருக்கும், அரண்மனையிலுள்ள அனைவருக்கும் இரட்சிப்பின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அவர்கள் வணங்கி வந்த அஸ்தரோத் யார் என்று அவர்கள் அறியும்படி, அவ் வஸ்தரோத்தே தன்னைக் குறித்துப் பேசும்படி செய்வேன் என்றும் கூறினார்.

மறுநாள் காலையில் அவர்களனைவரும் அஸ்தரோத்தின் கோவிலுக்குச் சென்றார்கள். அங்கே பூஜாசாரிகள் பூஜையை ஆரம்பித்தார்கள். உடனே அஸ்தரோத் பூஜாசாரியில் வந்து, "நிறுத்துங்கள், மதியீனரே, எனக்கு வந்த கேடு உங்களுக்கும் வருமுன் நிறுத்துங்கள். யூதர்களால் சிலுவையிலறையப்பட்ட தேவகுமாரனாகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய தூதன் என்னைச் சங்கிலிகளால் கட்டி அடக்கிவிட்டான். யூதர்கள் அவருக்குப் பயந்து அவரைச் சிலுவையிலறைந்தார்கள். அவரோ, எங்கள் ராஜாவாகிய மரணத்தையே மரணத்துக்குள்ளாக்கி, எங்கள் அதிபதியாகிய பிசாசையும் ஜெயித்தவராய் மூன்றும் நாளில் உயிருடனெழுந்தார்" என்று கூறி நிறுத்தினது.

அப்போஸ்தலனுடைய கட்டளையின் பேரில் அது மேலும் கூறினது: "எங்கள் அதிபதியாகிய பிசாசும் நாங்களும் மனிதருடைய சரீரங்களுக்கு வியாதிகளின் மூலம் தீங்குண்டாக்கி, அவர்கள் எங்களை வணங்கும்போது சற்றே விலகிக்கொண்டு அவர்களுக்குச் சுகம் வரச்செய்கிறோம். அப்போது அவர்கள் எங்கள் மீது நம்பிக்கைகொள்ள ஆரம்பிக்கின்றனர். பின் நாங்கள் அவர்களை ஆண்டு, அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு அழிவு வரச்செய்வோம்", என்றது.

இனிமேல் ஜனங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கத் தடையென்ன? பர்த்தொலோமேயு அஸ்தரோத்தின் கோவிலை இடித்துப் போடக் கட்டளையிட்டார். உடனே கோவிலும் விக்கிரகங்களும் நாசமாக்கப்பட்டன. பின் அரசன், அரசி, அரசிளங்குமரர், இளவரசி, பிரபுக்கள் உட்பட ஜனங்களனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்போஸ்தலன் அவர்கள் மத்தியில் தங்கி அவர்களுக்கு உபதேசித்து வந்தார்.

பாலிமியஸ் ராஜாவுக்கு ஒரு தமையனிருந்தான். அவன் அண்டை நாட்டு அரசன். தன் தம்பியைப் பற்றிய செய்தி கேள்வியுற்றதும், அவன் ஆட்களையனுப்பி பர்த்தொலோமேயுவைப் பிடித்துவரக் கட்டளையிட்டான். அஸ்ட்ரெகெஸ் என்ற பெயருடைய இவ்வரசன் வைராக்கியமான விக்கிரகத்தொழும்பன். அவன் வணங்கிய தேவதை பல்தாது என்னும் பெயருடையது. பர்த்தொலோமேயு அஸ்ட்ரெகெஸின் முன்னால் கைதியாக நிறுத்தப்பட்டதும், பல்தாதின் தொண்டர்களும் பூசாரிகளும் அப்போஸ்தலன்மீது கோபாவேசராகி, அவரைக் கொலைசெய்யவேண்டும் என்று அரசனை வேண்டிக்கொண்டார்கள். அரசனும் அப்போஸ்தலன் 'பல்தாது தெய்வத்தை வணங்கி, அதைப் பூஜித்தால் விடுதலை செய்யப்படுவார், அல்லாவிட்டால் ஆக்கினைக் குள்ளாவார்', என்று கட்டளையிட்டான். தன் ஆண்டவரை மறுதலிக்க அப்போஸ்தலன் மறுத்தார்.

அச் சமயம் பல்தாது விக்கிரகமும் மற்றக் குட்டிச்சாமிச் சிலைகளும் தங்கள் நிலையிலிருந்து விழுந்து உடைந்தன. பூஜாசாரிகள் ஓடோடியும் மன்னனண்டை வந்து முறையிட்டார்கள். அரசனது ஆத்திரம் அளவு கடந்துவிட்டது. அவன் தன் வஸ்திரங்களைக்கிழித்து, பல்லைக் கடித்து, புருவத்தை நெரித்து, பர்த்தொலோமேயுவைச் சித்திரவதை செய்து பின் சிரச்சேதம் செய்யக் கட்டளையிட்டான் சேவகர் அவரைக் கொண்டுபோய், வாரால் அடித்து, சிரச்சேதம் செய்து கொன்றனர்.

அச் செய்தியைக் கேள்விப்பட்ட பாலிமியஸ் தன் ஆட்களை அனுப்பி அப்போஸ்தலனின் சடலத்தைத் தன் நாட்டுக்கு எடுத்துச் சென்று நல்லடக்கம் செய்தான் அஸ்ட்ரெகெஸ் அப்போஸ்தலனுக்குச் செய்யப்பட்ட மரியாதைகளைக் குறித்துக் கேள்விப்பட்டு, மனம் வெந்தான். அவன் தன் சேவகரை அனுப்பி அப் பரிசுத்தவானின் சரீரத்தைக் களவாடிக் கடலிலாழ்த்திவிட ஆக்ஞாபித்தான். பாலிமியஸ் அதை அறிந்தவுடன் தானே சடலத்தை எடுத்து லிப்பேரித் தீவில் கொண்டு

போய்ச் சேமித்தான். தேவகோபம் அஸ்ட்ரெகெஸ்மீது இறங்கினது. ஒரு நாளிரவு அவன் தன் படுக்கையில் கழுத்து நெறிக்கப்பட்டு மரித்துக் கிடந்தான்.

பாஸிமியஸ் தன் ராஜ்யபாரத்தை ராஜிநாமாச் செய்து விட்டு, இரு நாடுகளிலுமுள்ள கிறிஸ்தவ சபைகளைத் தன் கண்காணிப்புக்குள்ளாக்கிப் பராமரித்து வந்தான்.

தாசரது ஜெபம், சாந்தம்
பாடு, கஸ்தி, யாவுமே.
தெய்வ மைந்தன் புஸ்தகத்தில்
தீட்டப்பட்டிருக்குமே,
இவை உந்தன் பொக்கிஷங்கள்
நாதா அந்த நாளிலும்
உம் சம்பத்தை எண்ணும் போது
எண்ணும் அடியாரையும்.

பாமாலை 157 : 3

6

அப்போஸ்தலனாகிய
பரிசுத்த மத்தேயு

எனக்குப் பின்சென்றுவா [லூக்கா 5 : 27]

பரிசுத்த மத்தேயு நாசரேத்தில் பிறந்தவர் என்றொரு வரலாறு உண்டு. ஆனால் அவருடைய தொழில் கப்பர்நகூமில் நடந்தது. இயேசுநாதரும் நாசரேத்தில் வளர்ந்தாராதலால் மத்தேயுவுக்கும் இரட்சகருக்கும் ஏற்கனவே பரிச்சயம் ஏற்பட்டிருந்திருக்கவேண்டும். கிறிஸ்துநாதர் கலிலேயாவில் ஊழியம் செய்த காலங்களில் கப்பர்நகூமையே தமது ஊழியத் தலைமையிடமாகக் (head quarters) கொண்டிருந்தாரென்றும், கப்பர்நகூம் அவருடைய 'பட்டணமாக' பாராட்டப்பட்டிருந்ததென்றும் சுவிசேஷ வரலாற்றின் மூலம் அறியலாம். அக்காலத்தில் அந்நகரில் ஆயக்காரனாயிருந்த லேவி என்ற மத்தேயு கர்த்தருடைய காரியங்களை நன்கு அறிந்தவராயிருந்து, இரட்சகரின் அழைப்பு கிடைத்ததும் உடனே அவருக்குச் சீஷனானர்.

கர்த்தர் பரமேறிச் சென்றபின், மற்றச் சீஷரோடுகூட, மத்தேயுவும் பெந்தேகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரைப் பெற்று, உடனேயே சுவிசேஷ ஊழியத்தி லீடுபட்டார்.

ஒரு பாரம்பரிய வரலாற்றின்படி அவர் சுமார் 9 வருஷங்கள் எருசலேமிலும் யூதேயாவிலுமே பணியாற்றிவந்தார். அவருடைய ஊழியப் பயன்களாக அநேக யூதக் கிறிஸ்தவ சபைகளுண்டாயின. அவர் அச்சபைகளை வளர்க்கும் மேய்ப்பனாகக் கிறிஸ்துநாதரைப்பற்றிய சகல செய்திகளையும் அச்சபை மக்களுக்குப் போதித்தார். பின் அச்செய்திகளையே எபிரேயு மொழியில் ஒரு சுவிசேஷமாக எழுதினர். அந்த எபிரேய சுவிசேஷத்தை அப்போஸ்தலனாகிய சின்னயாக்கோபு (அல்பேயுவின் குமாரன்) கிரேக்க மொழியில் திருப்பினர் என்ற ஒரு எண்ணம் 16-ம் நூற்றாண்டு வரையிலிருந்துவந்தது. ஆனால் வரலாற்றாசிரியரின் ஆராய்ச்சி அக்கருத்தை ஏற்க இடங்கொடுக்கவில்லை.

 G. B. Sathyanesan, B.A.

எபிரேயு மொழியில் மத்தேயு ஒரு சுவிசேஷம் எழுதினர் என்றும், அதின் ஒரு நகல் பரிசுத்த பர்த்தொலோமேயுவினல் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டதென்றும், இங்கு பரிசுத்த தோமாவினல் நிறுவப்பட்ட சேரநாட்டுச் சபைகளின் மக்கள் கி. பி. 197-ம் ஆண்டுவரை அதை வைத்திருந்தார்களென்றும், அலெக்சந்திரியாவிலிருந்து இந்தியாவுக்கு வந்து, பத்தாண்டுகள் (கி. பி. 187—197) அச்சபைகளில் பணிவிடைசெய்த பரி. பான்றேனஸ் (St. Pantaenus) அப்பிரதியை அலெக்சந்திரியாவுக்கு எடுத்துச் சென்ருர் என்றும் கூறும் வரலாற்றுச் செய்தியை ஆசிரியர் ஒப்புக்கொள்ளுகிருர்கள்.

பலஸ்தீனுவில் ஊழியம் முடிந்தபின் சுமார் கி. பி. 44 போல் மத்தேயு அந்நாட்டினின்று வெளியேறினர்.

திருச்சபையின் ஆதிகால வரலாற்ருசிரியர்களான சாக்ரட்டீஸ் (H. E. — 1 : 19). ரூப்வினஸ் (X : 9) ஆகிய இருவரும் மத்தேயு எத்தியோப்பியாவுக்குச் சென்ருரென்றும் அங்கேயே சுவிசேஷம் கூறி, இரத்தச்சாட்சியானர் என்றும் எழுதியுள்ளனர். பிற ஆசிரியர்களும் இக்கூற்றை ஏற்கிருர்கள். தவிரவும் அவர் அந்நாட்டில் அநேக சபைகளைத் தோற்றுவித்தாரென்றும், அவைகளில் பணிவிடைசெய்ய மூப்பர்களை (Presbyters) அபிஷேகித்தார் எனவும் சுவிசேஷ ஊழியத்தைத் தொடர்ந்து செய்வதற்காக அநேக பிரசங்கிமாரை நியமித்தாரெனவும் கூறுகின்றனர்.

அங்கு அவ்வாறு வெற்றிகரமாகப் பணிவிடை நிறைவேற்றி எத்தியோப்பியத் திருச்சபையை நிறுவியபின், அவர் பார்தியா என்ற தேசத்துக்குச் சென்ருர்.

பார்தியா என்ற நாடு தற்கால இரான் (Iran) தேசத்தின் வடபாகத்தில், கஸ்பியன் கடலுக்குத் தென்கிழக்கில் அமைந்த பூபாகம். இங்கும் எத்தியோப்பியாவிற்போலவே வெற்றியாக ஊழியம் நிறைவேறியது. அநேக சபைகள் உருவாயின. மூப்பர்களும் சுவிசேஷகர்களும் நியமிக்கப்பட்டனர். (Foxe. p 20)

பின்னர் சின்ன ஆசியாவில் அவர் சில காலம் பணிவிடை செய்தாரென்றும் 'அப்போஸ்தலனுகிய பரிசுத்த மத்தேயுவின் நடபடிக்கைகளும் இரத்தச்சாட்சி மரணமும்' (Acs and **Martyrdom of St. Matthew the Apostle)** என்ற நூலொன்று கூறுகிறது. இந்நூலும் 4-ம் 5-ம் நூற்ருண்டைச் சேர்ந்ததாலும் இதில் காணப்படும் செய்திகள் கட்டுக்கதையாகத் தோன்றுவதாலும், அவற்றை அப்படியே ஏற்பதற்கில்லை.

அந்நூலின்படி மலையொன்றின்மீது தியானத்துக்காகச் சில நாட்களைப் பின்னிட்டுக் கொண்டிருந்த மத்தேயுவை இட்சகர் நேரில் சந்தித்து மிர்னு **(Myrna)** என்னுமோர் ஊருக்குப் போகும்படி கட்டளையிட்டார். நைசிபோரஸ் என்ற திருச்சபை வரலாற்ரு சிரியன் அவ்வூரின் பெயர் மிர்மெனெ **(Myrmene)** என்கிருர். வேறுசில பிரதிகளில் அது சிமிர்னு **(Smyrna)** என்றிருக்கிறது. ஆனுல் வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்படுகிற சிமிர்னுவாக இருக்கமுடியாது. ஏனெனில் இந்த மிர்னுவாசிகளை நிர்வாணிகளென்றும் நரமாம்ச பட்சணிகளென்றும் அந்நூல் வர்ணிக்கிறது. அதே சமயத்தில் அவ்வூரில் ஒரு கிறிஸ்தவ சபையும், அதைக் கண்காணித்த ப்ளேட்டோ என்ற கண்காணியாரும் **(Plato the Bishop)** மூப்பர்களும் இருந்ததாகவும் அது கூறுகிறது.

மிர்னு என்ற அவ்வூரில் ஆட்சி செய்தவன் புல்வேனஸ் என்ற அரசன். அவனுடைய மனைவியான புல்வேனு, அரச குமாரனுன இளவரசன் புல்வேனஸ், அவனுடைய மனைவி எர்வா ஆகிய மூவரும் மத்தேயுவின் மூலம் சுவிசேஷம் கேட்டு விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்ருர்கள். ஆனுல் புல்வேனஸ் என்ற அரசன் மத்தேயுவையும் ப்ளேட்டோவையும் நரமாம்ச பட்சணிகளாகிய பத்து சேவகரை அனுப்பிக் கைதுசெய்து, அவரைக் கொல்ல முயன்ருன். ஆனுல் அவர் அவனது கண்களைக் குருடாக்கிப், பின் அவன் மனம் மாறினவன்போல் நடித்ததை நம்பி அவன் கண்களைத் திறந்துவிட்டார். ஆனுலும் அவன் அவரைக் கொலை செய்தான். பின் அவர் அவனுடைய சொப்பனத்தில் அவனை எச்சரிக்கவே, அவன் தன் குற்றமுணர்ந்து விசுவாசித்து, உயிரோடெழுந்துவந்த மத்தேயுவிடத்

திலேயே மத்தேயு என்ற பெயருடன் ஞானஸ்நானம் பெற்ருன். (மற்ரெரு பிரதிப்படி, ப்ளேட்டோவிடத்தில் தீட்சை பெற்ருன்) பின் சிலகாலம் கழித்து ப்ளேட்டோ மரித்துப்போகவே, புல்வேனஸ் தன் அரச பதவியை உதறிவிட்டு மிர்ருவின் கண்காணியாஞன்.

மேற்சொல்லப்பட்டுள்ள இந்த வரலாறுகளுக்கு எவ்விதமான ஆதாரமுமில்லை.

பார்தியாவை விட்டபின் அவர் சின்ன ஆசியாவில் சில காலம் பணியாற்றிஞரென்றும், ஒருக்கால் அங்கிருக்கும் காலத்தில் அவர் பெயரால் அழைக்கப்படும் சுவிசேஷத்தை சின்ன ஆசியாவிலுள்ள யூதக் கிறிஸ்தவர்களடங்கிய சபைகளுக்காக கிரேக்க மொழியில் எழுதிஞரென்பது ஏற்கக்கூடியது. பரிசுத்த யோவானின் சீஷர்களிலொருவராகிய பேப்பயஸ் (Papias), "மத்தேயு வசனங்களை **(Logia)** அரமெய்க் மொழியில் தொகுத்தார்," என்றெழுதுகிறபடியால், கிரேக்க சுவிசேஷத்தை எழுதுமுன் நமது ஆண்டவருடைய உபதேசங்களை ஒரு தொகுப்பாகக் (The **Sayings of Jesus**) கூட்டி எழுதி, ஒரு நூலாக்கினுர் என்று நம்பவும் வழியுண்டு.

மத்தேயு தன் இறுதி ஆண்டுகளை எத்தியோப்பியாவில் செலவிட்டார். அங்கே நாடாபார் என்னும் மூரில் இரத்தச் சாட்சியாக மரித்தார் (கி. பி. 60)

[சாக்ரட்டீஸ் என்னும் கி. பி. 4-ம் நூற்ருண்டுத் திருச்சபை வரலாற்ருசிரியன் இக்கருத்தை ஏற்கிருர். ஆஞல் டாரதீயஸ் என்ற வேருெரு ஆசிரியர் அவர் பார்தியாவிலேயே ஹயராப் பாலிஸ் என்னு மூரில் இயற்கையான மரணம் அடைந்து கிறிஸ்தவ மரியாதைகளுடன் அடக்கம் பண்ணப்பட்டார் என்கிருர். எனினும், மத்தேயு எத்தியோப்பியாவில் இரத்தச்சாட்சியாஞர் என்பதே ஏற்புடைத்து.]

மத்தேயு பக்தன் போலவும்
எல்லாம் வெறுத்து நாங்களும்
நல்மனதோடு உம்மையே
பின்பற்ற ஏவும், கர்த்தரே

— பாமாலை 158 : 6

7

அப்போஸ்தலனாகிய

பரிசுத்த தோமா

என் ஆண்டவரே! என் தேவனே! [யோவான் 20 : 28]

பரிசுத்த தோமா பெந்தேகோஸ்தேத் திருநாளுக்குப்பின் எங்கு சென்றார், எவ்வெவ்விடங்களில் ஊழியம் செய்தார் என்பது நமக்கு அப்போஸ்தலர் நடபடியாகமத்தினால் தெரிவிக்கப்படாத விஷயம். கி. பி. சுமார் 41 ; 42 ம் வருஷம் வரை நடந்ததொன்றும் அறியோம் ஆனால் பரிசுத்த தோமாவின் நடபடிகள் என்ற நூலிலிருந்து சிலவறியலாம். 42-ம் ஆண்டு போல், பதினொருவரும் கூடி, ஒவ்வொருவரும் எவ்வெத்திசைகளுக்குப் போவது என்பது பற்றிச் சீட்டுப்போட, இந்தியாவுக்குப் போக வேண்டுமென்று தோமாவின் பேருக்குச் சீட்டு விழுந்தது. தோமாவுக்கோ அது பிரியமில்லை தனக்குச் சரீர பெலவீனம் என்று கூறி அங்கு போவதற்கு முடியாது என்று தீர்மானித்தார். அன்றிரவு இயேசு இரட்சகர் அவருக்குக் கனவில் தோன்றி, "பயப்படாதே, தோமா, நீ தைரியமாய் இந்தியாவுக்குப் போ. அங்கு போய் சுவிசேஷத்தை அறிவி. என் கிருபை உன்னோடு கூடவரும்' என்றார். ஆனால் அப்போஸ்தலனோ, 'இல்லை, ஆண்டவரே, நீர் என்னை வேறெங்கு வேண்டுமானாலும் அனுப்பும். இந்தியாவுக்கு மட்டும் நான் போகப்போவதில்லை" என்றார். இப்படிச் சொல்லி நாட்களைக் கடத்தி வந்தார்.

அக்காலத்தில் வட இந்தியாவிலுள்ள பஞ்சாப் பிரதேசத்தில் பார்த்திய ராஜவம்சத்தைச் சேர்ந்த ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவனுடன், அவனுடைய சகோதரனாகிய காத் என்பவனும் ராஜ்ய நிர்வாகத்தில் ஈடுபட்டிருந்தான். அக்காலத்தில் ரோம சாம்ராஜ்யத்திற்கும் இந்திய ராஜ்யங்களுக்குமிடையில் வியாபாரம் நடந்துவந்தது. தங்கள் வர்த்தகங்களை

நடத்துவதற்கு ராஜாங்க வர்த்தகர்களை நியமிப்பது இந்திய அரசர்களின் வழக்கம். விந்தாபர்ணு (அல்லது கிரேக்க பாஷையில் கொண்டாபோரஸ்) என்ற இப்பஞ்சாப் தேச பார்த்திய அரசனுக்கும் அபனு என்னும் பெயருடைய வர்த்தகன் இருந்தான். ஒரு தடவை ராஜா தன் வர்த்தகனைப் பார்த்து, சீரியா தேசத்துக்கு வர்த்தக நிமித்தமாக அவன் போகும்போது ஒரு சிறந்த கட்டிட நிபுணனை அழைத்துவரக் கேட்டுக்கொண்டான். அபனு எருசலேம் பட்டணத்துக்குப்போய், தன் வியாபாரத்தை நடத்திக்கொண்டிருக்கும்போது, ஒரு ஆள் அவனிடம் வந்து, 'உனக்கு ஒரு அடிமை தேவையாயிருக்கிறதா?' என்று கேட்க, அவனும் 'ஆம்' என்றான். சிறிது நேரத்தில் அடிமை கொண்டு வரப்பட்டான். அபனு அவனிடம் அவன் பக்கத்தில் நின்றிருந்த அவனுடைய எஜமானைக் காட்டி, 'இவர் யார்?' என்று கேட்க, அவன் 'இவர் என் எஜமானன்' என்று பதிலுரைத்தான். பின் விலை பேசி, பணத்தைக் கொடுத்து ரசீது பெற்றுக்கொண்டான். அதில் 'இயேசு தன் அடிமையாகிய தோமாவை இராஜாவாகிய கொண்டா போரஸின் வர்த்தகனுக்கு விற்றுப் பணம் பெற்றுக் கொண்டதற்கு இதுவே ரசீது'. என்று கண்டிருந்தது.

அபனுவும் தோமாவும் இந்தியாவுக்குப் பயணமானார்கள். வழியில் அந்திரா போலி நகரில் இறங்கிச் சின்னாள் செலவிட்டகாலை, தோமா அவ்வூர் அரசன் மகளைப் பிடித்திருந்த பேயை விரட்டி, அவளுக்கும் அவளுடைய புருஷனுக்கும் உபதேசம் செய்து, கிறிஸ்தவ விசுவாசிகளாக்கினார். இதினால் ராஜகோபத்திற்கு ஆளாகி, உடனே புறப்பட்டு, அவரும் அபனுவும் பல நாட்களுக்குப்பின் இந்தியா சேர்ந்தார்கள்.

கொண்டாபோரஸ் அரசன், தோமா தச்சு வேலையும் கொல் வேலையும் தெரிந்தவர் என்றறிந்து, அவரிடம் நிரம்பப்பணம் கொடுத்து, தனக்கு ஒரு அழகிய அரண்மனை கட்டித்தர வேண்டும் என்று கேட்க, அப்போஸ்தலனும் அதற்கிசைந்தார். தோமாவோ அப்பணத்தைக் கொண்டு ஏழைகளுக்கு உதவி செய்து, சுவிசேஷப் பிரச்சாரம் செய்வதில் தன் நாட்களைச் செலவிட்டார். ஆறு மாதம் கழித்து அரசன் தன் பிரதானிகளை

விளித்து, தோமா கட்டின அரண்மனை எந்நிலையிலிருக்கிறதென்று வினவ, அவர்கள், "அரசே அவன் பணத்தை யெல்லாம் ஏழைகளுக்குத் தானம் செய்து விட்டான். ஒரே கடவுள் உண்டென்றும், அவர் இயேசு என்னும் ஒருவர் என்றும் ஒரு புதிய மதத்தைப் போதிக்கிறான். நோய்வாய்ப்பட்டவர்களைச் சுகப்படுத்துகிறான். பிசாசுகளை ஓட்டுகிறான். இன்னும் பல அற்புதங்களும் செய்கிறான். அவன் ஒரு மந்திரவாதி என்றெண்ணுகிறோம். ஆனாலும் அவன் ஒரு நல்ல மனுஷன். நீதிமான். சாந்த குணமுடையவன். அடிக்கடி உபவாசிக்கிறான், ஜெபிக்கிறான். உப்பும் ரொட்டியும் மட்டும் புசித்துத் தண்ணீர்தான் குடிக்கிறான். அவனுக்கு ஒரே ஒரு ஆடைதானுண்டு. தனக்குள்ளதெல்லாவற்றையும் பிறருக்குக் கொடுத்துவிடுகிறான்." என்றார்கள். ராஜாவுக்குக் கடுங்கோபமுண்டாயிற்று. அவன், உடனே தோமாவும் அபனுவும் சிறைப்படுத்தப்படவேண்டும் என்று கட்டளையிட்டான். அவ்வாறே தோமாவும் வர்த்தகனும் சிறையிலடைக்கப்பட்டார்கள். அரசன் இரவெல்லாம் சிந்தித்தான். தோமாவை எப்படிக் கொல்வது நலம், உயிரோடு தோலை உரித்தா. நெருப்பிலிட்டா என்று யோசித்து இரவைப் போக்கினான்.

அன்றிரவே அரசனின் தம்பியான இளவரசன் காத் வியாதிப்பட்டு மரித்தான். வேந்தனுக்குத் தாங்கொணாத் துயரமுண்டாயிற்று. தம்பிக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களையெல்லாம் ராஜ மரியாதைகளுடன் முடித்துவிட்டுத், துயரத்துடன் துயிலுறும் வேளையில், காத் அவனுக்குச் சொப்பனத்தில் தோன்றி, தான் மரித்தவுடன் தேவ தூதரால் நேராக மோட்சலோகத்துக்கு இட்டுச்செல்லப்பட்டதாகவும், அங்கே கட்டப்பட்டிருந்த மாளிகைகளைத் தூதன் ஒருவன் தனக்குக் காட்டினதாகவும், ஒரு அழகிய அரண்மனையைக் காட்டினதாகவும், 'அது யாருடையது?' என்று தான் கேட்கத், தூதன் தன்னிடம் 'அது உன் அண்ணனுகிய கொண்டாபோரசுக்காகத் தோமா கட்டியது' என்று கூறினதாகவும் சொல்லிப்போனான்.

அரசன் விழித்தெழுந்து, தோமாவை விடுதலை செய்து, அவனுடைய உபதேசங்களைக் கேட்டு விசுவாசித்துத், தன்

குடும்பத்தாரனைவருடனும் கூடத் தோமாவிடம் ஞானஸ்நானம் பெற்றான். அதுமுதல் அப்போஸ்தலன் உற்சாகமாக ஊழியம் செய்து, அநேகரை கிறிஸ்து சமயத்தில் சேர்த்தார்.

இப்படி நடந்துவரும் நாளில், திடீரென்று அந்நாட்டுக்கு ஒரு விக்கினம் உண்டாயிற்று. குஷானர் என்ற ஒரு முரட்டு ஜாதியார் மத்திய ஆசியாவிலிருந்து புறப்பட்டு இந்தியாவுக்குள் நுழைந்தனர். கொண்டாபோரஸ் அவர்களுடன் யுத்தம் செய்து தோற்றான். குஷான் ஜாதியார் முரடர். எனவே அவர்கள் அத்தேச மக்களை வெகுவாய்த் துன்புறுத்தினர். பலர் குடியோடிப் போனார்கள். தோமாவும், மேலும் அந்நாட்டிலிருப்பது பயன் தராது என்று கண்டு, கப்பலேறித் தன் சுயநாடு திரும்பினார்.

ஆனால் அவர் பலஸ்தீனாவுக்குப் போகாமல், வழியிலுள்ள சொகோட்ரா என்ற தீவில் இறங்கினார். அங்கும் அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, வியாதிகளைக் குணமாக்கி, அசுத்த ஆவிகளை விரட்டி, ஊழியம் செய்து வந்தார். ராஜ அரண்மனையிலேயே சில ஸ்திரீகளைப் பிடித்திருந்த பேய்களை விரட்டினார். திரள்பேர் விசுவாசிகளானார்கள். அவர்களில் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த மிக்டோனியா என்ற பெண்ணும் ஒருத்தி. சில நாட் கழித்து ராணியாகிய தெர்ஷியாவும், இளவரசனாகிய ஜீசேன்ஸும் அவன் மனைவி மார்கியா என்ற இளவரசியும் விசுவாசிகள் கூட்டத்தைச் சேர்ந்தார்கள். மிக்டோனியா தான் புதிதாகக் கண்டுபிடித்த இரட்சிப்பில் மகிழ்ந்து, தன் குடும்பத்தை மறந்து, ஊழியத்திலேயே தன் நேரத்தைச் செலவிட வாரம்பிக்கவே, அவளுடைய புருஷனாகிய காரிஸ் ராஜாவாகிய மிஸ்தேயுவினிடம் முறையிட்டு, ' ராஜாவே, தோமா என்ற மந்திரவாதி ஒரு புதிய கடவுளைப் பிரசங்கித்து, நம் நாட்டுமக்களை ஏய்க்கிறான். என் மனைவியையும், தங்கள் மனைவியாகிய ராணியையும், இளவரசனையும், இளவரசியையும் கூடத் தன் மந்திரத்தினால் மயக்கிவிட்டானே! இவனை உடனே கொன்று, நம் ராஜ்யத்தைக் காப்பாற்றுங்கள்'' என்று வேண்டினான். மிஸ்தேயு விஷயமறிந்து, வெகுளி கொண்டு, அப்போஸ்தலனைச் சிறையிலடைத்தான்.

மறுநாள் அவரை அவன் விசாரிக்க ஆரம்பித்தபோது, அப்போஸ்தலன் இயேசுவைக் குறித்துத் தைரியமாய்ச் சாட்சி சொன்னார். அரசன் அவரைக் கொன்றுவிடத் தீர்மானித்தான். ஆனால் திரள்பேரான விசுவாசிகளுக்குப் பயந்து, நான்கு சேவகர் கையில் ஒப்புவித்து, அவர்கள் அவரை மலைகளின் மேல் கொண்டுபோய், அங்கு ஈட்டியால் குத்திக்கொல்லுமாறு கட்டளையிட்டான். *

ஆனால், தோமா தப்பி, இந்தியாவுக்குப் போகிற கப்பல் ஒன்றைக் கண்டு அதிலேறி, கி. பி. 52-ம் வருஷத்தில் சேர நாட்டுத் துறைமுகப்பட்டினமாகிய முசிரியில் வந்திறங்கினார். சேரநாட்டில் அவர் சுவிசேஷப் பிரசாரம் செய்யவாரம்பித்து, மலியன்கரை, கோட்டக்காயல் (வட பாரூர்) என்றவூர்களில் கிறிஸ்து சபையை ஸ்தாபித்தார். கோட்டக்காயலில், இந்துக் கோவிலே கிறிஸ்தவ தேவாலயமாக மாற்றப்பட்டது. பின்பு பாலூர் (இக்காலத்தில் சௌகாத்) என்றவூரைச் சந்தித்து, அங்கு ஒரு உறுதியான சபையை ஸ்தாபித்தார். பின்பு, தெற்கே திரும்பி கொல்லம், கோக்கமங்கலம், நீராணம், சாயல் (நீலக்கால்) என்னுமிடங்களிலும் சபைகளை நாட்டினார். இவ்வேழும்தான் தோமா சேரநாட்டில் கட்டுவித்த முதல் சபைகள். இவை தவிர, இன்னும் பல சபைகளை ஸ்தாபித்து, மூப்பர்களையும் கண்காணிகளையும் நியமித்து, பின் கிழக்குக்கரையை நாடிச்சென்றார்,

சோழ மண்டலக் கரையில்வேலை செய்ய வாரம்பிக்குங்காலை, அவர் பர்மாவரை சென்று, அங்கு சின்னாட் செலவிட்டுத் திரும்பி வந்து, மைலாப்பூரில் தங்கி, அங்கு சுவிசேஷப் பிரச்சாரவூழியத்திலீடுபட்டார். பலர் விசுவாசித்தார்கள். இது கண்ட பிராமணர் அவரை விரட்டியடித்து, சென்னைக் கருகிலுள்ள பரங்கிமலையில் கல்லெறிந்து கொன்றார்கள். இது கி. பி. 68-ம் ஆண்டு போல் நடந்தது.

---

* ஒரு பிரதியின்படி, அவர் அவ்வாறே கொல்லப்பட்டார். ஆனால் மற்ற சில பிரதிகளும், பர்க்குஷார் போன்ற சாஸ்திரிகளும் அவர் தப்பி விட்டார் என்று கருதுகிறார்கள். மிஸ்தேயுஸ்' சொக்கோட்ரா அரசனல்ல, இந்தியாவிலேயே வேறொரு பாகத்தின் அரசன் என்பதும் பழம் பிரதிகளின் தகவல். ஆனால் F. E. கே போன்ற வரலாற்றாசிரியர்கள் அக்கருத்தை ஆதரிக்கவில்லை.

விண்போகும் பாதை தூரமாம்
என்றே நாம் எண்ணுவோம்
பகைஞரின் கொடூரமாம்
வன்மையை உணர்வோம்.

— பாமாலை 145 : 1.

8

அப்போஸ்தலனாகிய

பரிசுத்த சீமோன்

உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் [மத். 5: 44]

அருமை இரட்சகரின் சீஷர்களில் அரசியல்வாதியாகத் திகழ்ந்தவர் 'கானானியனான' அல்லது 'செலொத்தே என்னப் பட்ட' சீமோன்.

ரோம ஆட்சியை வெறுத்து, அதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டு மென்று போராடிய யூதா என்னப்பட்ட ஒரு தேசியத் தலைவனைப் பின்பற்றிய 'கானானியர்' அல்லது செலொத்தே (வைராக்கியம்) என்னும் ஓர் கட்சியைச் சேர்ந் தவர் செலொத்தே சீமோன். நாட்டுக்கு விடுதலை வேண்டு மானால் வன்முறையினாலல்லாது அது சாத்தியமாகாது என்ற கொள்கையையுடையது அக்கட்சி.

அதிலிருந்து விலகி சாந்தசொரூபியாகிய கிறிஸ்து இயேசு வின் சீஷனாக மாறினாரானால், சீமோனின் உள்ளத்தில் கிறிஸ்து நாதரின் போதனை எத்தனை பெரும் புயலை எழுப்பியிருந்திருக்க வேண்டும்! 'என்னுடைய இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல' என்ற செய்தியை அவர் விளங்கிக் கொள்ள எவ்வளவு தயக்கம் ஏற்பட்டிருந்திருக்கக்கூடும்! நிச்சயமாக அருமை இரட்சகரின் சகவாசமும் கிருபையும் அவரை ஒரு சாந்தமும் அமைதி சுபாவ முமுடைய சீஷனாக மாற்றின.

பரிசுத்த சீமோனைப் பற்றிச் சில பாரம்பரிய செய்திகளுண்டு. முதலாவது அவர் எகிப்துக்குச் சென்றார். பெந்தேகோஸ்தே நாளில் இரட்சகரை ஏற்றுக்கொண்ட ஒரு சிறு விசுவாசக்கூட்டத் தார் அந்த நாட்டிலிருந்தனர். ஆகையினால் அவர் அதிகமான காலத்தை அங்கு பின்னிடாமல், லிபியா, வட ஆப்பிரிக்காவி லுள்ள (தற்கால டுனிசியா, அல்ஜிரியா என்னும்) தேசங் களாகிய நாடுகளில் அலைந்து திரிந்து சுவிசேஷம் அறிவித்தார். பின் அங்கிருந்து மாரிற்றேனியாவுக்குப் போய் அங்கு ஊழி

யத்தை நிறைவேற்றிச் சபைகளை நாட்டியபின் கடலைக் கடந்து இங்கிலாந்துக்குப் போனார்.

இங்கிலாந்தில் அவர் பணியாற்றினர் என்பதற்குச் சரியான ஆதார மெதுவும் இல்லையெனினும் வெகுகாலமாக சீமோன் அங்கு ஊழியம் செய்தார் என்று நம்பப்பட்டு வந்தது. தவிரவும் அவர் கி. பி. 74ம் வருஷம் வரை வாழ்ந்து, பல சபைகளை நிறுவி மூப்பர்களை நியமித்து, அவைகளைப் பரிபாலனம் செய்தாரென்றும், அப் பாரம்பரியம் கூறுகிறது.

அங்கேயே சிலுவையில் அறையப்பட்டு இரத்தச்சாட்சியாக மரித்தார் (கி. பி. 74) என்னும் ஒரு நம்பிக்கை யிருந்துவந்தது.

விசுவாசம், நம்பிக்கை
ஓங்கி உம்மை நேசித்தார்;
மாட்சியோடும் வெற்றியோடும்
தூயர் வீரர் ஆயினர்.

— பாமாலை 165–3

9

அப்போஸ்தலனாகிய

பரிசுத்த யூதா ... ...

சிலரை அக்கினியிலிருந்து இழுத்து விட்டு [யூதா வ. 22]

எடெஸா என்பது பழங்கால அசீரியா நாட்டி லிருந்த ஒரு நகரம். தற்காலம் இராக் தேசத்தில் தியசுன் நதியோரத்தி லிருக்கிற உர்பர் என்னும் ஊரும் பழங்கால எடெஸாவும் ஒன்றே என்பர் அறிஞர். அக் காலத்தில் அது சிறப்புக்கள் பல கொண்ட பெரிய பட்டணமாக விளங்கினது. கிழக்கேயுள்ள பாரசீக சாம்ராஜ்யத்துக்கும், மேற்கேயிருந்த ரோம சாம்ராஜ் யத்துக்கு மிடையில் அமர்ந்து இரண்டு சாம்ராஜ்யங்களின் வியாபார மார்க்கமாக விளங்கிச் செழிப்புற்றது. அதின் அரசன் ரோம சக்கரவர்த்திகளின் மேலதிகாரத்தை ஒப்புக்கொண்டு அவர்களுக்குக் கப்பங்கட்டுகிற ஓர் ஆர்மீனியச் சிற்றரசனா யிருந்துவந்தான்.

சீரியா ரோம சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த ஒரு மாகாணமா யிருந்தது. அதை ஆண்டுவந்த ரோம கவர்னர் சிலிசியா, கப்பதோக்கியா, பலஸ்தீனா முதலிய நாடுகளை ஆண்டுவந்த ரோம அதிபதிகளுக்கு மேற்பட்ட ராஜ பிரதிநிதி யாக விருந்தான். ஆகையால் அப் பிராந்தியங்களிலிருந்த ரோம ஆளுநர்களும், அதிபதிகளும் சுதேசச் சிற்றரசுகளும் சீரியா வின் ரோம கவர்னரிடமே அரசியற்றொடர்பு கொண்டனர்.

இயேசுநாதர் வாழ்ந்த காலத்தில் எடெஸாவில் அரசு புரிந்தவன் அப்கார் என்னுமோர் அரசன் (Abgar the Black). கரிய நிறத்தவன், ஆனால் வெள்ளை உள்ளத்தவன், அவனுக் கும் கிறிஸ்துநாதருக்கு மிடையில் உண்டாகியிருந்த கடிதத் தொடர்பு, அதன் வாயிலாகப் பின்னாளில் அவனுடைய நாட் டில் நிறைவேற்றப்பட்ட அப்போஸ்தல சுவிசேஷப் பணி விடை முதலியவற்றைப் பற்றிய வரலாறுகள் சிரியக் மொழி கையெழுத்துப் பிரதிகளில் காணப்பட்டன. மோசே என்னு மொருவர் அவைகளைக் கையாடி வரலாறெழுதினார். திருச்

சபை வரலாற்றுத் தந்தையென்று புகழப்பட்ட சிசெரியா நகர் கண்காணியாரான யூசெபியஸ் (Bishop Eusebius of caesarea the Father of Church History) தானே அந்தக் கையெழுத்துப் பிரதிகளை எடெஸாப் பட்டணத்தில் பார்த்ததாகத் தெரிவிக்கிருர். அவர் வாழ்ந்த காலம் கி. பி. 3-ம் நூற்ருண்டின் இறுதியும் 4-ம் நூற்ருண்டின் துவக்கமுமாகும் அவர் அவ் வரலாற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தாரென்று தெரிகிறது. நைசிபோரஸ் என்ற வரலாற்ருசிரியனும் அதை நம்பினுர் என்று விளங்குகிறது.

ஆயினும் தற்கால ஆராய்ச்சியாளர்கள் அவைகளிலொன்றைக்கூட ஏற்கவில்லை. எனினும், அவ் வரலாறு வருமாறு:

அரசன் அப்கார் சீரியாவின் ரோம அரசப் பிரதிநிதியுடன் சிநேக பாவத்துடனிருந்துவந்தான். அதனுல் அவனுடைய தூதாட்கள் அடிக்கடி தெற்கேயிருந்த அந்தியோகியாவுக்கும் தமஸ்குவுக்கும் போய்வருவது வழக்கமா யிருந்தது. ஒரு தடவை அத்தூதுவர்களிலொருவனுகிய அனன் என்பவன் பலஸ்தீனு தேசத்திலும் எருசலேம் நகரிலும் இயேசுநாதர் செய்து வந்த அற்புதக் கிரியைகளையும் உபதேசங்களையும்குறித்துக் கேள்விப்பட்டு, தன் அரசனுக்குத் தெரிவித்தான். அத்துடன் நன்மையே செய்கிற அந்த இயேசுவை யூதர்கள் வெறுக்கிருர்களாம் என்றும் சொன்னுன்.

ஏற்கெனவே நோயுற்றிருந்தவனுன அப்கார் உடனே இரட்சகருக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினுன். அதில் அவன் வரைந்தது:

பிறருக்கு நன்மை செய்கிறவரும், இரட்சகரும், எருசலேமிலிருப்பவருமாகிய இயேசுவுக்கு இந் நாட்டின் அதிபதியாகிய அப்கார் அர்ஸ்கமா எழுதுவது :

மூலிகைகளாவது மருந்துகளாவது இல்லாமலே நீர் ஆரோக்கியமளிக்கிறீரென்பதையும் வேறு காரியங்களையும் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறேன். கண் தெரியாதவர்களுக்கும் பார்வையளிக்கிறீரென்றும், முடவரை நடக்கச்

செய்கிறீரென்றும், குஷ்டரோகிகளைச் சுத்தமாக்குகிறீரென்றும் அசுத்தாவிகளை விரட்டுகிறீரென்றும் நீண்ட கால வியாதியஸ் தருக்கும் சுகங்கொடுக்கிறீரென்றும், மரித்தோரை உயிரோ டெழச் செய்கிறீரென்றும் கேள்விப்படுகிறோம். இவைகளையெல் லாம் கேள்விப்பட்டபொழுது நான் எனக்கே சொல்லிக் கொண்டது: ஒன்று நீர் அற்புதங்களைச் செய்வதற்கென்று பரலோ கத்திலிருந்து வந்த ஒரு தெய்வமா யிருக்கவேண்டும், அல்லது இவ்வித அற்புதங்களைச் செய்கிற நீர் தேவ குமாரனுயிருக்க வேண்டுமென்பதுதான். அதினுற்றுன் இப்பொழுது நான் உமக்கு எழுதுகிறேன். நீர் இங்கு வந்து எனக்கிருக்கிற நோயைக் குணப்படுத்த வேண்டுமென்று கெஞ்சிக்கேட்கிறேன். யூதர்கள் உமக்கு விரோதமாக முறுமுறுக்கிருர்களென்றும், உமக்குத் தீங்கு செய்ய நாடுகிருர்களென்றும் கேள்விப்படு கிறேன். என்னுடைய இந்த நகரம் சின்னதுதான், ஆனல் அழகானது. இதில் நம்மிருவருக்கும் போதுமான இடமிருக் கிறது.

இந்தக் கடிதத்தை அனனிடம் கொடுத்து அனுப்பினுன். அவன் எருசலேமுக்குச் சென்று கர்த்தரிடத்தில் அதைக் கொடுத்தான். அவர் அவனுக்குச் சொல்லியனுப்பிய பதில்: "என்னைப் பாராமலே என் மீது நம்பிக்கை வைக்கிறவன் பாக்கியவான், ஏனெனில் என்னைக் காண்கிறவன் விசுவாசிக்க மாட்டான் என்றும், என்னைக் காணுதவன் விசுவாசித்து வாழுவான் என்றும் எழுதியிருக்கிறது. இப்பவும், நீ எழுதி யிருக்கிற காரியத்தைக் குறித்து நான் சொல்வதென்னவெனில் நான் எதற்காக அனுப்பப்பட்டேனே, அதை முதலாவது நிறைவேற்றவேண்டும் அது முடிந்தபின் நான் என்னை அனுப்பினவரிடத்திற்கு ஏறிப் போகவேண்டும் "ஏறிப்போனபின் என்னுடைய சீஷரில் ஒருவனை உன்னிடத்திற்கு அனுப்பு வேன். அவன் வந்து உன் நோயைக் குணமாக்கி, உன்னையும் உன்னைச் சேர்ந்தவர்களையும் வாழ்விப்பான்", என்பது.

அவ்வாறே கர்த்தர் பரமேறியபின் அப்போஸ்தலனுகிய லெபேயு என்றும் ததேயு என்றும் அழைக்கப்பட்ட யூதா எடெஸாவுக்குப் போய், அப்காரினுல் நன்கு வரவேற்கப்பட்டு அரசனையும் அவ்வூரிலிருந்த வியாதியஸ்தரனைவரையும் சுக

மாக்கி, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அப்காரும், அரச குடும்பத்தினரனைவரும் நகரவாசிகளில் அநேகரும் விசுவாசித் தார்கள்.

அப்காரின் பிந்திய ஆண்டுகளில் யூதா அவனுடைய நாட்டுக்கு வடக்கிலுள்ள ஆர்மீனியச் சிற்றரசுகளில் ஊழியம் செய்தார்.

அப்கார் இறந்தபின் (கி. பி. 50) அவனுடைய மகனுன ஆளுனூனும், (சகோதரி மகனுன) சனதுருகனும் இராஜ்யத் தைப் பங்கிட்டுக்கொண்டு அரசுபுரிந்தனர். இருவரும் கிறிஸ் தவர்களே. ஆனல் சனதுருகன் மறுதலித்துக் கிறிஸ்தவர் களைத் துன்புறுத்தினன்.

அந் நாட்களில் இரத்தச்சாட்சிகளாக இறந்தவர்களில் பரிசுத்த யூதாவும் அவருடைய சீஷரு மிருந்தனர் என்று நம்பப் பட்டது.

அவருடைய மரணத்துக்குச் சற்று முன் யூதா தன் நிருபத்தை எழுதினர் என்பது ஒரு பாரம்பரியம்.

அப்போஸ்தலனகிய ததேயு என்னப்பட்ட நூல் தரும் வரலாறு மேற்சொன்ன வரலாற்றின் பின் பகுதியிலிருந்து பேதப்பட்டிருக்கிறது. அதின்படி:

அப்காருவின் நாட்களில் கர்த்தருடைய கட்டளைப்படியே எடெஸாவுக்குச் சென்ற ததேயு, அவ் வரசனல் நன்கு வரவேற்கப்பட்டு, அவ் வேந்தனின் நோயைக் குணமாக்கின பின், அவனுக்கும் அந் நாட்டினரான சீரியர், கிரேக்கர், ஆர்மீனியர், யூதர் முதலிய ஏராளமான மக்களுக்கும் சுவிஷேத் தைப் பிரசங்கித்து அவர்களுடைய நோய்களைக் குணமாக்கி பிசாசுகளைத் துரத்தி வேறு பற்பல அற்புதங்களையும் நிகழ்த்தி ஞர். அதின் பயனுக திரள்பேர் விசுவாசித்தார்கள். எடெ ஸாப் பட்டணத்திலிருந்த விக்கிரகக் கோவில்களனைத்தும் இடிக்கப்பட்டன. கிராம வாசிகளிலும் அநேகர் விசு வாசித்தார்கள். ததேயு அம்மக்களுக்குக் கிறிஸ்து இயேசுவின் வரலாறு கூறி, அவரே உலக இரட்சகர் என்று பிரசங்கித்தார்.

விசுவாசித்தவர்களுக்குப் பிதா. குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்து, மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி போதித்தார். பல கண் காணியார்களையும், மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் **(Bishops, Presbyters, and Deacons)** நியமித்து, கர்த்தருடைய இராப்போஜனமாகிய சாக்கிரமெந்தை அனுசரிக்கவேண்டிய முறைகளையும் திட்டம்பண்ணினர்.

அதன்பின் அவர் தெற்குமுகமாகத் திரும்பி திகிரீஸ் நதிப் பிராந்தியத்தில் அமிஸ் என்ற நகருக்குச் சென்று, அங்கு வாழ்ந்த மத்தியப்பிரதேசக் கல்தேயர், வடசீரியர், யூதர் முதலியோர்க்குச் சுவிசேஷம் அறிவித்தார். அங்கு ஒரு ஓய்வுநாளில் அவர் தன் சீஷருடன் யூதருடைய ஜெப ஆலயத்தில் உபதேசித்தபொழுது ஜெபாலயத்தலைவன் அவர்களுக்கு எதிர்ப்புக் கூறவில்லை. ஆகவே இயேசுநாதரின் நாமத்தில் ததேயு அநேக வியாதியஸ்தரைக் குணமாக்கி, அசுத்த ஆவிகளை விரட்டினர். வெளியூர் களிலிருந்தும் மக்கள் திரள்திரளாக வந்தனர். ஏராளமான மக்கள் விசுவாசித்துத் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, ஞானஸ் நானம் பெற்றனர். அந்த நாட்டில் ததேயு ஐந்து ஆண்டுகள் ஊழியம் செய்து, திருச்சபையை நிலைப்படுத்தி, ஒரு கண்காணி யாரையும், பல மூப்பர்களையும் நியமித்தார்.

பின் பெனிக்கே நாட்டுக்குப் போனர். பெரிற்றஸ் (**Berytus, modern Beirut**) நகரில் மக்கள் இருதயக் கடினமுள்ளவர்களா யிருந்ததைக் கண்ட ததேயு அவர்களுக்குப் பிரசங்கம் செய்யும் போது கண்ணீர் விட்டு அழுது கொண்டே போதித்தார். அவரும் அவருடைய சீஷரும் செய்த ஊழியம் வீண்போக வில்லை. அநேக மக்கள் விசுவாசத்துக்குள் வந்து ஞானஸ் நானம் பெற்றார்கள். பல சபைகள் தோன்றின.

அங்கு ஊழியம் செய்துவரும் நாட்களில் அவருக்கு அழைப்பு வந்தது. சமாதானமாக மரித்து நித்ய ஜீவனுக்குட் பட்டார் (ஆக. 21 கி. பி. 72).

ஆனல் திருச்சபையில் துவக்க காலந் தொட்டே வழங்கி வந்த பாரம்பரியம் அவர் ஆர்மீனிய நாட்டில் கிறிஸ்தவர்களுக்

குத் துன்பமுண்டானபோது "சிலுவையில் அறையப்பட்டு இரத்தச்சாட்சியாக மரித்தார் என்பதே.

ஆகையால், பெனிக்கே நாட்டில் சபைகளை நிறுவிய பின் அவர், தன் அப்போஸ்தலப் பணிவிடையின் துவக்க காலத்தில் நிறுவப்பட்ட ஆர்மீனிய திருச்சபைக்குத் துன்பமுண்டான படியால், அச்சபைகளை உற்சாகப்படுத்த அங்கு சென்ருர் என்றும், அந்நாட்களில் இரத்தச்சாட்சியானுர் என்றும் கொள்வோம்

செவ்வானம் மேற்கில் தோன்றி ஒளிரும்
மெய் வீரருக்கு ஓய்வு வாய்த்திடும்
சீர் பரதீசில் பாக்கியம் அமையும்
அல்லேலூயா! அல்லேலூயா!

— பாமாலை 167 : 6

10

அப்போஸ்தலனாகிய

பரிசுத்த யாக்கோபு

சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் [மத்தேயு 5 : 5]

அல்பேயுவின் குமாரனான யாக்கோபு என்று இவர் சுவிசேஷங்களில் அறியப்படுகிறார். செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு, கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபு என்னுமிருவரிடமிருந்தும் வித்தியாசப்படுத்துவதற்காக இவர் 'சின்ன யாக்கோபு' (James the Less) என்றும் விளங்கினார்.

ததேயு என்னப்பட்ட யூதா, 'யாக்கோபின் சகோதரனாகிய யூதா, என்றுஅறிமுகப்படுத்தப்படுவதையிட்டு, இவர் ஒருக்கால் எடெஸாப் பட்டணத்தைச் சேர்ந்தவராயிருக்கலாம் என்ற எண்ணமுமுண்டு. ஏனெனில் யூதா என்னும் ததேயு எடெஸா ஊரைச் சேர்ந்த ஒரு யூதன் என்றும், அவர் எருசலேமுக்குச் சென்றிருந்த நாட்களொன்றில் கிறிஸ்துவின் சீஷரானார் என்றொரு பாரம்பரியமுமிருந்தது. ஆனால் அது ஏற்கப்பாலதன்று. ஏனெனில் கர்த்தருடைய சீஷர்களில் யூதாஸ்காரியோத்தைத் தவிர மற்றனைவரும் கலிலேயர் என்பது சுவிசேஷங்கள் தரும் தகவலாகும்.

பரிசுத்த யாக்கோபு மற்ற அப்போஸ்தலரைப்போலவே சில வருஷங்கள் பலஸ்தீனாவிலேயே சுவிசேஷம் கூறிவந்தார்.

பின் பரிசுத்த (பெரிய) யாக்கோபு ஏரோது அகிரிப்பாவினால் கொல்லப்பட்டபின்பு (கி. பி. 42 ... அப். 12 : 2) சீஷர்கள் பற்பல தேசங்களுக்கும் போகத்தொடங்கின காலை, இவர் ஸ்பானியா தேசத்துக்குச் சென்றார். அங்கு அந்நாட்டின் வடமேற்கு பகுதியில் பணிவிடைசெய்து, கம்போஸ்டெல்லா [இந் நாளில் சான்றியாகோ] என்றறியப்பட்ட நகரில் பெரியதொரு சபையை

நாட்டினார். வாழ்நாள் முழுவதும் அந்தப்பகுதிகளிலேயே ஊழியம் செய்தாரென்றும் அங்கேயே மரித்தாரென்றும் பாரம் பரியம் கூறுகிறது. எவ்வாறு மரித்தாரென்பது புலனாகவில்லை

நற்செய்கையில் நிலைப்போர்க்கே
வாடாத கிரீடம் என்றுதான்
விஸ்வாசிகள் கைக்கொள்ளவே
யாக்கோபு பக்தன் கூறினான்.
— பாமாலை 150 : 4

---

11 G.B. Sathyanesan, B.A.

அப்போஸ்தலனுகிய

பரிசுத்த மத்தியா

எங்களுடனே கூடச் சாட்சி [அப். 1 : 22]

யூதா ஸ்காரியோத்துக்குப் பதிலாகத் தெரிந்துகொள்ளப் பட்ட பரிசுத்த மத்தியா, இரட்சகருடைய எழுபது சீஷர்களி லொருவரயிருந்தாரென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட செய்தி.

மத்தியா வெகுகாலமாகப் பலஸ்தீனுவிலேயே சுவிசேஷம் கூறிவந்தார். அவர் சில காலம் பலஸ்தீனுவைவிட்டு வெளியே நினுரென்றும் அக்காலத்தில் நரமாம்ச பட்சணிகளின் நாடொன் றுக்குள் போய்விட்டதாகவும், அங்கு அக்கொடியவர்களால் கிட் த்தட்ட ஒருமாதம் சிறையிலிடப்பட்டதாகவும், அவரைக் கொன்று உண்ண அவர்கள் திட்டமிட்டிருந்த நாளுக்கு முன் தினம்பரிசுத்தஅந்திரேயா அங்குவந்து அற்புதங்கள் நடப்பித்து அவரைச் சிறைமீட்டதாகவும் 'அந்திரேயா, மத்தியா என்னும் அப்போஸ்தலரின் நடபடிகள்' (**The Acts of the Holy Apostles Andrew and Mathias**) என்னும் பிற்கால நூலொன்று கூறுகிறது. ஆனுல் கட்டுக்கதைகள் நிறைந்த அச்செய்திக ளொன்றும் ஏற்கப்பாலதன்று.

பரிசுத்த மத்தியா யூதேயாவிலேயே ஊழியம் செய்து இறு தியில் எருசலேமுக்குப் புறம்பே கல்லெறிந்து கொல்லப்பட்டு இரத்தச்சாட்சி மரணமெய்தினுரென்னும் பாரம்பரியம் நிலைத்து நிற்கிறது.

புது சீயோன் நகரில், பக்தர் வரிசையிலே
நிற்கும் மத்தியாவோடும், நாங்கள் சேரச் செய்யுமே
கண் குளிர உம்மையும், காணும் பாக்கியம் அருளும்.
— பாமாலை 148 : 4

12

அப்போஸ்தலனாகிய
பரிசுத்த பவுல்

நல்ல போராட்டத்தைப் போராடினேன் [II தீமோ. 4 : 7]

அப்போஸ்தலர் நடபடிகளின் ஆகமத்தின் இறுதி வசனங்களில், பரிசுத்த பவுல் ரோமாபுரிப் பட்டணத்தில் தனக்காக வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்த வீட்டில் 'வீட்டுக் காவலில்' (House arrest) இரண்டு வருஷங்கள் இருந்தாரெனவும், தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்துத் தன்னிடத்தில் வந்த யாவருக்கும் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார் என்றும் வாசிக்கிறோம். அந்த இரண்டு வருஷங்கள் முடிந்த பின் அவர் விடுதலையாகி. ரோமாபுரியை விட்டு வெளியேறி, மறுபடியும் தன் ஊழியத்தை நடத்தி வந்தார். அவர் விடுதலையானது கி பி. 60–ம் ஆண்டாயிருக்கவேண்டும்.

அதற்குப் பின் அவர் எங்கு சென்றார், எங்கெங்கு பணியாற்றினார், எப்பொழுது, எங்கே மரித்தார் என்ற வரலாறுகளைப் பரிசுத்த லூக்கா எழுதவில்லை. அவரைப் பற்ற ஏதாவது செய்தி கிடைக்குமா என்று தேடின், நாம் தீமோத்தேயு, தீத்து நிருபங்களையும், பாரம்பரியங்களையுமே நாடவேண்டியதா யிருக்கிறது. அவற்றிலும் நமக்கு அதிகமான தகவல்கள் கிடைக்கவில்லை.

பாரம்பரியச் செய்திகளின்படி : அவர் ரோமாபுரியிலிருந்து சீரியா தேசத்துக்குச் சென்று சில காலம் அந்தியோகியாவிலிருந்தார். அக் காலங்களில் தீமோத்தேயு, லூக்கா முதலிய சீஷர்கள் அவருடனிருந்தார்கள் அங்கிருந்து, சின்ன ஆசியாவில் அவர் தனது முதலாலது பிரயாணத்தில் நிறுவின பெர்கே, லீஸ்திரா, இக்கோனியா முதலிய சபைகளைப் பார்த்து வரப் புறப்பட்டார். இக்கோனியாவில் எதிரிகளால் அவருக்குச் சில கொடிய துன்பங்களுண்டாயின (II தீமோ. 3 : 11) புறஜாதி

யார் பலர் விசுவாசத்தை ஏற்றுக்கொண்டதே அதற்குக் காரணமாகத் தெரிகிறது. இந்தப் பிரயாணத்தில் அவருடைய முக்கிய சீஷரி லெவரும் அவருடன் சென்றதாகத் தெரியவில்லை.

பின் எபேசுக்குச் சென்றுர். தீமோத்தேயு, லூக்கா, மாற்கு, தீத்து முதலானவர்கள் அங்கு வந்து சேர்ந்தனர். எபேசுவில் அவர் சில காலம் தங்கியிருந்தார். அக் காலத்திற்ருன் அவர் தீமோத்தேயுவை எபேசு சபையின் கண்காணியாராக நியமித்து அபிஷேகித்தார் என்று எண்ண இடமுண்டு. ஓநேசிப்போரு என்னுமொரு பக்தன் எபேசுவிலும் (II தீமோ 1 : 18), அதற்கு முன், பாரம்பரியத்தின்படி, இக்கோனியத்திலும் பவுலுக்கு மிகுந்த உதவியாயிருந்தார். ஆசியா நாட்டுச் சபைகள் சிலவற்றில் அவருக்கு வேதனைதரும் பல காரியங்களிருந்தன. உதாரணமாக பிகெல்லுவும், எர்மொகெனேயும் அவரை விட்டு விலகினர் (II தீமோ 1 : 15) சத்தியத்தை எதிர்க்கிறவர்கள் சபைகளுக்குள் நுழைந்துவிட்டார்கள் (II தீமோ 3 : 1—9)

எபேசுவிலிருந்து அவர் கிரேத்தாத் தீவுக்குப் போய், அங்கு சில மாதங்கள் ஊழியம் செய்தார். ஏற்கனவே அத்தீவில் திருச்சபை நிறுவப்பட்டிருந்தது. பரி. பவுல் அச்சபைகளைத் திடப்படுத்தி, ஒழுங்குபடுத்தி தீத்துவை அதின் கண்காணியாராக நியமித்து, சபைகளை ஆசீர்வதித்து, அங்கிருந்து புறப்பட்டு கிரேக்க தேசத்துக்குச் சென்றுர்.

அங்கு அகாயா நாட்டுச் சபைகளைச் சந்தித்துவிட்டுக் கொரிந்துப் பட்டணத்தில் சில மாதங்களை, அல்லது ஏறத்தாழ ஒரு வருஷத்தைப் பின்னிட்டார். கொரிந்து சபை பிரிவினைகளால் வாதிக்கப்பட்ட சபை யாதலால் அவருடைய நீண்ட காலப் பணிவிடை அங்கு தேவைப்பட்டது.

பின் துரோவா, தெசலோனிக்கா சபைகளில் சிற்சில காலமிருந்து, ஊழியத்தை நிறைவேற்றி, சபைகளைத் திடப்படுத்திய பின், புதிய நாடுகளில் சுவிசேஷத்தை அறிவிக்கும் நோக்கமாகத் தல்மாத்தியா, இல்லிரிக்கம் (**Dalmatia, Illyricum**)

என்னும் தேசங்களுக்குப் போனூர். [இவ்விரண்டு நாடுகளுமே இன்று யுகோஸ்லாவியா என்றறியப்படும் தேசமாகும்]. தல்மாத்தியா நாட்டு ஊழியத்தில் தீத்து, லூக்கா முதலியவர் களும் கலந்துகொண்டார்களென்று நம்ப இடமுண்டு.

இதன் பின்பு தன்னுடைய நெடுநாளைய வாஞ்சையை நிறைவேற்றும் வண்ணமாகப் பரிசுத்த பவுல் ஸ்பானியா (Spain) தேசத்துக்கும் போனூரென்று நம்பப்படுகிறது. ரோமாபுரி கிளமென்ற் என்று புகழ்பெற்ற திருச்சபைப் பிதாக்களிலொரு வரும், பரிசுத்த பேதுருவின் சீஷனும், ரோமாபுரியின் இரண் டாவது கண்காணியருமானவர் பரிசுத்த பவுல் ஸ்பானியா தேசத்துக்கும், அதற்கப்பாலுள்ள 'கடலுக்கு எதிரான தீவு களுக்கும் இரட்சிப்பை எடுத்துச் சென்றூர்'' என்றெழுதுகிறூர். 5-ம் நூற்றூண்டில் வாழ்ந்த (சீரியாவிலுள்ள சைரஸ் நகரத்துக் கண்காணியாரான) தியோடோரெட்டும் அதை ஒப்புக்கொள் கிறூர். 'கடலுக்கு எதிரான தீவுகள்' என்பவை பிரிட்டிஷ் தீவுகள் என்றும் பரிசுத்த பவுல் இங்கிலாந்தில் சுவிசேஷம் கூறினூர் என்றும் ஒரு பாரம்பரியம் வழங்குகிறது. ஆனூல் பரிசுத்த பவுலின் இங்கிலாந்து ஊழியத்துக்கு எவ்வித ஆதார மும் கிடையாது. 'கடலுக்கு எதிரான தீவுகள்'' என்பவை ஒருக்கால் ஸ்பெயின் தேசத்துக்குக் கிழக்கிலுள்ள பலியாரிக் தீவுகளைக் குறிக்கலாம்.

ஸ்பானியா தேச ஊழியம் முடிந்த பின் அவர் துரோப்பீமு, லூக்கா முதலியவர்களுடன் மிலேத்து வழியாக ரோமாபுரிக் குப் பயணமானூர். வழியில் மிலேத்துவில் துரோப்பீமு வியாதிப் பட்டபடியால் அவனை அங்கு விட்டுவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தார். ஒருக்கால் மிலேத்துவிலிருந்து கொரிந்துவுக்குச் சென்று, அல்லது கொரிந்துவுக்கு முதலில் போய் பின் மிலேத் துவுக்கு வந்து, அங்கிருந்து ரோமாபுரிக்குப் பிரயாணப்பட்டி ருக்கலாம் (II தீமோ 4 : 20).

அவர் ரோமாபுரிக்கு வருவதைக் கேள்விப்பட்ட யூத சமுதாயத்தார் அவரை அங்கு வரவிடாதபடி தடை செய்ய வேண்டுமென்று ரோமச் சக்கரவர்த்தியாகிய நேரோவிடம்

மனுச் செய்தார்கள். அவனும் சம்மதித்தான். எனவே, பவுல் தலை நகரத்துக்கு வரமுடியாது என்று யூதர்கள் மகிழ்ந்தார்கள். தடையை மீறி வந்துவிட்டால் அவரைக் கொலை செய்துவிட வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். அதை அறிந்த ரோமாபுரிக் கிறிஸ்தவ சபையார் இரண்டு தூதுவரை அனுப்பிக் கப்பல் சிசிலித்தீவிலுள்ள சைரக்யூஸுக்கு வருமுன் அங்கு சென்று காத்திருந்து பவுலை எச்சரித்தனர். அவ்வெச்சரிக்கையைப் பெற்ற பவுல், கப்பல் தலைவனுடைய உதவியினால் இத்தாலியாவின் தென் முனையிலுள்ள ரீஜியம் (Rhegium) என்னும் துறைமுகத்திலிறங்கி, பொன்றியோல் (Pontiole) என்னுமூரில் கிறிஸ்தவ சபையாருடன் தங்கினர். கப்பல் தலைவன் அவருடன் பொன்றியோலுக்குச் சென்றுவிட்டுத் திரும்பும்போது, சில யூதர், அவனைப் பவுல் என்றெண்ணிக் கைதுசெய்து, வெட்டிக் கொன்றுவிட்டனர். அச் செய்தியை ஏழு நாட்களுக்குப் பின் அறிந்த பவுல் அதிக மனவேதனைப் பட்டார்.

பின் அவர் அங்கிருந்து புறப்பட்டு வழியிலிருந்த சபைகளைச் சந்தித்துத் திடப்படுத்திக் கடைசியில் ரோமாபுரியை அடைந்தார்.

அவர் அங்கு சேர்ந்த சில நாட்களுக்குள் நேரோ ராயனுடைய கட்டளைப்படி நகரின் ஒரு பகுதிக்கு நெருப்பு வைக்கப்பட்டது. அதினால் ஏற்பட்ட நஷ்டம் மகத்தானது. ஒரு சில தினங்களுக்குள் சக்கரவர்த்தியே நெருப்புக்குக் காரணர் என்ற வதந்தி நகரில் பரவவே, அந்தப் பொல்லாத அரசன் தான் தப்பித்துக்கொள்ள வேண்டி ரோமாபுரிக்கு நெருப்பிட்டவர்கள் கிறிஸ்தவர்களே என்று அவர்கள் மீது குற்றம் சாட்டிக் கிறிஸ்தவர்களைப் பிடித்துக்கொல்லும்படிக் கட்டளையிட்டான்.

பவுலும், பேதுருவும் இன்னு மநேகக் கிறிஸ்தவர்களும் கைதுசெய்யப்பட்டார்கள். அந்தத் துயர நாட்களில் பவுலின் சீஷர்கள் பலர் அவருடனிருந்தனர். அவர்களில் ஒநேசிமு என்னுமோர் அடிமைச் சிறுவனுமிருந்தான். பரிசுத்த பவுல் தீமோத்தேயு, தீத்து, பிலேமோன் முதலியவர்களுக்கு அருமையான நிருபங்க ளெழுதி அனுப்பினர். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் எபேசுவிலிருந்து அவரைப் பார்க்க வந்தார்கள்.

ஜூன் மாதம் 29-ம் தேதி பரிசுத்த பேதுரு சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டார். அதே நாளில் ஆஸ்ற்றிய என்னு மூருக்குப் போகும் பாதையோரமாக, ரோமாபுரிக்கு வெளியே பரிசுத்த பவுல் சிரச்சேதம் செய்யப்பட்டார். அருகிலிருந்த ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் அவருடன் சிரச்சேதமாயினர்.

நான்கு பரிசுத்தர் ஒரே நாளில் இரத்தச்சாட்சிகளாயினர்.

கிறிஸ்துவின் சத்துரு நல்ல
போர்ச் சேவகனானன்
கொல் ஓநாய்போன்றோன் ஆட்டுக்
குட்டிக் கொப்பாயினான்.

—பாமாலை 146 : 4

13

அப்போஸ்தலனாகிய
பரிசுத்த பர்னபா

அப்பொழுது பர்னபா.........அவனைச் சேர்த்துக்கொண்டு......
[அப்: 9 : 27]

இரண்டாம் மிஷனெரிப் பிரயாணத்தைத் துவக்க முற்பட்ட போது பரிசுத்த பவுலுக்கும் பரிசுத்த பர்னபாவுக்கும் பரி. மாற்குவை அழைத்துக்கொண்டு போவதில் விகற்பம் உண்டாகி, 'அவர்களுக்குள்ளே கடுங்கோபமூண்டபடியினால், அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள்.'' இதுவே நடபடிகளின் கமம் பரிசுத்த பர்னபாவைப்பற்றித் தரும் கடைசிச்செய்தி (அப். 15 : 39). பரி. பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறி சீப்புரு தீவுக்குப் போனான் என்று அவ்வசனம் அச்செய்தியை முடிக்கிறது. அச்செய்தி குறிப்பிடும் சம்பவம் கி. பி. 52-ம் ஆண்டு நடந்தது.

சீப்புரு தீவுக்குப் போகப் புறப்பட்டார்கள் என்பதைப் பரி. லூக்கா அறிந்திருந்தார். ஆனால் பர்னபாவும் மாற்கும் நேராக அத்தீவுக்குச் செல்லக்கூடாதிருந்தார்கள் என்பது அவருக்குத் தெரிந்திருக்க முடியாது. ஏனெனில், புறப்பட்டவர்கள் போய்ச் சேரவில்லை. அந்தியோகியாவிலிருந்து புறப்பட்ட அவர்கள் சீரியாவிலுள்ள லவோதிக்கேயா என்னும் துறைமுகத்துக்குப் போய், அங்கு சீப்புரு தீவுக்குப் போக ஆயத்தமாயிருந்த கப்பலில் ஏறினார்கள். ஆனால் காற்று கப்பலைத் திசை மாற்றிச் சின்ன ஆசியாவின் கரையோரமாகத் தள்ளிக் கொண்டுபோய் கடற்கரை ஊர்களிலொன்றான கொராசியம் என்னும் நகரில் சேர்த்தது. அவர்கள் பட்டணத்துக்குள் போகாமல் சிலநாள் ஊருக்கு வெளியில் தங்கிப் பின் கப்பலேறி இசாரியா திசைகளுக்கு வந்து, பித்தியூசாத் தீவில் விழுந்து, மூன்று நாட்கள் அங்கு பின்னிட்டனர் புயல் நின்றபாடில்லை. அத்தீவில் யூபிமஸ் என்ற ஒருவன் அவர்களால் கிறிஸ்துவினடியானுக்கப் பட்டான்.

மேற்குறிப்பிட்ட சம்பவத்துக்குபின் சில ஆண்டுகள் சென்றிருக்க வேண்டும். அக்காலங்களில் பரிசுத்த பர்னபா கிரேக்கு, சின்ன ஆசியா, பலஸ்தீனு முதலியவிடங்களில் பணியாற்றினுர் என்று எண்ணலாம்.

கி. பி. 70-லிருந்து 80க்குள் பர்னபாவின் நிருபம் என்ருெரு நூல் வெளிவந்தது. அந்த நூலை பர்னபாவே எழுதியிருப்பார் என்று வரலாற்ருசிரியர்கள் வெகுகாலம் நம்பிவந்தனர். அலெக்சந்திரியா பட்டணத்து கிளமென்ற, ஒரிஜென் (Origen) முதலிய சபைப்பிதாக்கள் இவ்விதம் எண்ணியவர்களில் சிறப்பானவர்கள். யூதர்களுக்கென்று எழுதப்பட்ட இந்நூலில், பழையேற்பாடு மேசியாவைக் காட்டுகிற நூல், அதில் மேசியாவைப்பற்றிச் சொல்லப்பட்டிருப்பவையெல்லாம் கிறிஸ்து இயேசுவில் நிறைவேறியிருக்கின்றன என்று ரூபிக்க ஆசிரியர் முயற்சிக்கிருர். யூதர்களையும் யூதமார்க்கத்தமைந்தவர்களையும் இந்நூலாசிரியர் குறைத்து மதிப்பிடுவதினுல் பர்னபா இதை எழுதியிருக்க முடியாது ஏனெனில் அவர் பவுலை விட்டுப் பிரிந்தபின் நியாயப்பிரமாணக் கட்சியைச் சேர்ந்த பரி. பேதுருவால் இழுப்புண்டு போனுர் என்று பரிசுத்த பவுல் முறையிடுகிருர் (கலா. 2 : 13) என்று சில வரலாற்று மேதைகள் எண்ணுகின்றனர். ஆனுல் இந்நூல் கி. பி. 70க்கு மேல் எழுதப்பட்ட தென்பதினுல் பர்னபா தன் பிந்திய காலத்தில் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வது தேவையில்லை என்ற பவுலின் கோட்பாட்டைத் திரும்பவும் ஏற்றுக்கொண்டிருந்திருக்கலாம். ஆகையினுல் பரிசுத்த பர்னபாவின் நிருபத்தைப் பரிசுத்த பர்னபா எழுதவில்லையென்று அவ்வளவு இலகுவில் தள்ளிவிடமுடியாது என்று கொள்ளுவோம்.

எபிரேயருக்கு எழுதப்பட்ட நிருபத்தையும் லேவிக் கோத்திரத்தில் பிறந்தவரான பரிசுத்த பர்னபாவே எழுதினுர் என்று சில புதியேற்பாட்டு வியாக்கியான வல்லுநர் கருதுகின்றனர்.

சின்ன ஆசியா, பலஸ்தீனு முதலிய நாடுகளில் ஊழியம் செய்தபின், பரிசுத்த மாற்குவையும் கூட்டிக்கொண்டு, பர்னபா சீப்புரு தீவுக்குப் புறப்பட்டுப் போனுர்.

சீப்புரு தீவில் அவர்கள் முதலாவது சேர்ந்த ஊர் க்ரோமியாஸிற்ரு என்பது. அங்கு தீமோன், அரிஸ்த்தான் என்ற இருவர் குணப்படுத்தப்பட்டார்கள். அங்கிருக்கும்போது மத்தேயு எழுதின கர்த்தருடைய "அற்புதங்களும், அவர் போதித்த கொள்கைகளும்'' அடங்கிய நூல் ஒன்று பர்னபாவிடம் கொடுக்கப்பட்டது.

க்ரோமியாஸிற்ருவிலிருந்து லப்பீது நகர் சேர்ந்தார்கள். அன்று அவ்வூரில் ஒரு விக்கிரகக் கோவில் திருவிழா. அங்கு நடந்த ஆபாசங்களை அப்போஸ்தலனால் சகிக்கக்கூடவில்லை. அவ்வூராரும் ஊழியர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே அங்கிருந்து லம்பாடிஸ்து நகர் சென்றனர். அங்கு தீமோனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். அவனுக்கு அவ்வூர் பூர்வீகம். முன்னால் பவுலுடைய பிரசங்கத்தைக் கேட்டிருந்தவனாகிய ஹெராக்கிளியு பவுலினால் ஹெராக்கிளிடியு என்னும் நாமத்துடன் ஞானதீக்ஷைபெற்று பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாயிருந்தான். பர்னபா, மாற்கு, தீமோன் என்னும் பக்தர் ஹெராக்கிளிடியுவுடன் அவன் சொந்த ஊராகிய தமசுப் பட்டணம் சென்று, அங்கு அவனை சீப்புரு தீவின் முதல் அத்தியக்ஷராக அபிஷேகம் செய்தார்கள். [கி. பி. 53].

பின் அவர்கள் மூவரும் பாப்போப்பட்டணம் போனார்கள். அங்கு பழைய விரோதியாகிய மாயவித்தைக்காரனும் கள்ளத் தீர்க்கதரிசியுமான பர்யேசு என்ற எலிமாவைக் கண்டார்கள் [அப் 3 : 6-12]. சிலகாலம் குருடனாகச் சாபத்துக்குள்ளாயிருந்த அவன், இப்போது அச்சிலகாலம் கழிந்துவிட்டபடியால் திரும்பவும் பார்வை பெற்றிருந்தான். அவன் பர்னபாவை முன்பு பவுலுடன் பார்த்திருந்தவனானபடியால் உடனே அவரை அறிந்துகொண்டு, அவர்களைப் பட்டணத்துக்குள் வராதபடி தடுத்தான். எனவே அவர்கள் அங்கிருந்து கூரியம் ஊருக்கு சென்றனர்.

அவ்வூரிலும் அன்றொரு திருநாள். மக்கள் ஆணும் பெண்ணுமாக ஆபாசமாக நடந்துகொண்டதைச் சகியாத பக்தன் அந் நகரைச் சபித்தார். உடனே நகரின் மேற்குக்கோட்டைச் சுவர் இடிந்து விழுந்து அநேகரைக் கொன்றுபோட்டது.

ஜனங்கள் உடனே தங்கள் தேவனாகிய அப்பொல்லோவிடம் சென்று முறையிட்டார்கள். இதற்குள் அங்கு வந்து சேர்ந்த பர்யேசு யூதரை எழுப்பிவிடவே அவர்கள் தொண்டர் மூவரையும் ஊரை விட்டு வெளியேற்றினர். பக்தர் அவ்விரவு ஊருக்கு வெளியே நின்ற ஒரு மரத்தடியில் படுத்துறங்கி, மறுநாள் அந்தியோகியாவில் பவுலினால் குஷ்டம் நீக்கி சுத்தமாக்கப் பட்டவனும் சீப்புரு தீவானுமாகிய அரிஸ்ற்றேக்கிளியான ஸினால் ஒரு மலைக்குகையில் மறைத்து வைத்துப் பாதுகாக்கப்பட்டு, பின் அமதுப் பட்டணம் செல்ல, அங்கும் பர்யேசு பிரசன்னமாகி யூதரை எழுப்பிவிட்டு அப்போஸ்தலனையும் சிநேகிதரையும் விரட்டியடித்தான். அவர்கள் தங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிவிட்டுச் சென்றார்கள். பட்டணங்கள் தோறும் பர்யேசு அவர்கள் ஊழியத்தைத் தடுத்தான். கடைசியாக சித்தியம் சேர்ந்து, கப்பலேறி, சாலமிப்பட்டணம் அடைந்தார்கள்.

அங்கும் திருவிழாச் சமயம், கோவில்களிலும் தெருக்களிலும் காணப்பட்ட விஷயங்கள் பர்னபாவை அதிகமாய் வருத்திற்று. அத்தியட்சரான ஹெராக்கிளிடியுவும் அங்கு வந்துசேர பக்தர் நால்வரும் வெகு ஊக்கமாகச் சுவிசேஷப் பணி செய்தார்கள். சாலமியின் ஒரு பாகமாகிய பிப்லியாவில் யூதர்கள் வசித்தார்கள். பர்னபா ஜெபாலயத்தில் உபதேசித்து, மத்தேயுவின் நூலை வாசித்து விளக்கம் கொடுத்து வந்தார்.

பர்யேசு அங்கும் வந்துவிட்டான். யூதர்களை எழுப்பிவிட்டான். விரோதிகள் திரண்டனர். ஒருநாள் அப்போஸ்தலன் ஜெபாலயத்தில் விசுவாசிகளான யூதர்களுக்குப்பிரசங்கம் செய்துகொண்டிருக்கும் வேளையில், அவரைப்பிடித்துக் கயிறுகளால் பிணைத்து, ஜெபாலயத்திலிருந்து குதிரைலாய மேடைவரை இழுத்துச்சென்று, அடித்து குத்துயிராக்கிப் பின்பு பட்டணத்துக்கு வெளியே கொண்டுபோய், நெருப்பிலிட்டுப் பொசுக்கினர். அன்றிரவு மாற்கு, தீமோன். ரோடான் முதலிய பக்தர் அவர் எலும்புகளை எடுத்து ஒரு கெபியில் அடக்கம் செய்தனர். [கி. பி. 55 or 56.]

மாற்கு, அரிஸ்தான், தீமோன், ரோடான் முதலியவர்களை யும் யூதர் பிடிக்க வகைதேடினர்கள். அவர்கள் கெபிகளில் ஒளித்திருந்து, பகைவர் கைக்குத் தப்பி லிம்னெஸ் என்ற கிராமத்துக்கு வந்து, அலெக்ஸந்திரியா செல்லும் கப்பலொன் றைக்கண்டு அதில் ஏறி, எகிப்து போய்ச்சேர்ந்தார்கள்.

'ஆறுதலின் மகனும்'
என்னும் நாமம் பெற்றேனும்
பக்தன் செய்கை வாக்கிலே
திவ்ய ஒளி வீசிற்றே.

— பாமாலை 151 : 1

14

கர்த்தருடைய சகோதரனாகிய பரிசுத்த யாக்கோபு

கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது [யாக். 2 : 26]

நமதருமை இரட்சகருக்கு நான்கு சகோதரரும், சகோதரிகளு மிருந்தார்கள். சகோதரருடைய பெயர்கள் யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் என்பவையாம் (மாற்கு 6 : 3). சகோதரிகள் குறைந்த பட்சம் இரண்டு பேரிருந்தார்களென்பது நிச்சயம் (மத். 13 : 56, மாற் 6 : 3). தங்கள் தாயாரான பரிசுத்த மரியாளோடு சேர்ந்து, அவருடைய சகோதரர் அவரைத் தேடி வந்தார்களென்று சுவிசேஷங்களில் வாசிக்கிறோம் (மத். 12 : 46, 47 ; மாற்கு 3 : 34, 35 ; லூக். 8 : 19, 20).

இயேசுநாதரின் ஊழிய காலத்தில் அவருடைய சகோதரரிலொருவரும் அவரை விசுவாசிக்கவில்லை. (யோ. 7 : 4, 5) நியாயப்பிரமாண விஷயத்தில் கர்த்தருக்கு எதிராகச் செயல் படுவதற்கொப்ப, அவர்களில் மூத்தவரான யாக்கோபு நசரேய விரதத்தை மேற்கொண்டு, நியாயப்பிரமாண விதிகளைக் கைக் கொள்வதில் நிகரற்றவராக விளங்கி, யூதரால் 'நீதிமான்' என்று பாராட்டப்பட்டார் [யுசெபியஸ் தரும் செய்தி].

கர்த்தர் உயிர்த்தெழுந்த பின்பு, அவர் யாக்கோபுக்கும் தரிசனமானார் (1 கொரி. 15 : 7). அதுமுதல் யாக்கோபும், யோசே முதலிய மற்றச் சகோதரரும் விசுவாசித்து சீஷர் கூட்டத்தில் சேர்ந்தார்கள். பெந்தேகோஸ்தே திருநாளில் அவர்களும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றார்களென்று நாம் நம்பலாம்.

சீஷர்கள் கி. பி. 42-ம் ஆண்டு வரை எருசலேமிலும் யூதேயாவிலுமே பணிவிடை நிறைவேற்றினர் என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. அவ்வாண்டில் செபெதேயுவின் குமாரனும் பரிசுத்த யோவானின் சகோதரனுமான பரி. யாக்கோபை ஏரோது அகிரிப்பா கொலை செய்தபின்,

அப்போஸ்தலர் பலஸ்தீனாவைவிட்டு வெளியேறினர். அதற்கிடையில் கிறிஸ்துநாதரின் சகோதரரில் மூத்தவர் என்ற முறையில் கிறிஸ்தவர்களுக்குள்ளும், நீதிமானான நசரேயன் என்றறியப்பட்டதினால் யூதருக்குள்ளும் உயர்வாகவும் மரியாதைக் குரியவராகவும் மதிக்கப்பட்ட பரிசுத்த யாக்கோபு எருசலேம் சபையின் தலைவராகவும் கண்காணியாராகவும் சகலராலும் ஏற்கப்பட்டார். தவிரவும் திருச்சபை யனைத்தையுமே நிர்வகிக்கிற முதல்வராகவும் கருதப்பட்டார். அப்போஸ்தலர் பற்பல இடங்களில் ஊழியம் செய்துவிட்டு, எருசலேமுக்கு வந்து பரிசுத்த யாக்கோபினிடத்தில் தங்களுடைய பணிகளைப் பற்றிய செய்திகளைச் சொல்லுவது ஒரு வழக்கமாயிற்று (அப். 15; கலா. 2).

நியாயப்பிரமாணத்தைக் கிறிஸ்தவர்கள் கைக்கொள்வது அவசியமா, அல்லவா என்ற கேள்வி எழுந்து, அதினால் சபையில் பிளவுகளும், அப்போஸ்தலருக்குள் விகற்பங்களும் தோன்றிய காலத்தில், எருசலேமில் சங்கம் கூட்டி, அதில் தலைமை வகித்துச் சகலரும் ஏற்கக்கூடியதான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றித் திருச்சபையின் ஒற்றுமையைக் காப்பாற்றிய பெருமை பரிசுத்த யாக்கோபுடையதன்றோ! (அப். 12 : 17; 15 : 1-29, கலா. 2 : 1-10)

எருசலேம் சபையின் தலைவராகவும் கண்காணியாராகவும், திருச்சபை அனைத்திலுமே ஓர் இயக்குனர் (Director) போலும் பணியாற்றிய பரிசுத்த யாக்கோபு யூதராலும் நன்கு மதிக்கப் பட்டாரென்றோமல்லவா? அவர்கள் அவரை ஒரு கிறிஸ்தவர் என்றறிந்திருந்தாலும் நியாயப்பிரமாணத்தின்மேலும் தேவாலயத்தின்மேலும் விசேஷப் பற்றுக்கொண்டவர் என்றும் அறிந்திருந்தனர். அவரும் தேவாலயத்துக்குட் போகும்போது நடந்து செல்லமாட்டார். முழங்காலிலேயே முன்னேறுவார்.

ஒரு தடவை அவரைக்கொண்டே கிறிஸ்தவர்களுக்கு நியாயப்பிரமாண மதத்தைப் போதிக்கச் செய்யவேண்டும் என்று தீர்மானித்த பரிசேயரும் சதுசேயரும் ஒரு திட்டம் வகுத்தனர். அந்தத் திட்டம் அவருடைய இரத்தச்சாட்சி மரணத்தில் முடிந்தது. அதைப்பற்றி ரோமாபுரி கிளமென்று, இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த யூதக் கிறிஸ்தவ எழுத்தாளரான ஹெகஸிப்பஸ் (Hegesippus), வரலாற்றுத் தந்தை யுசெபியஸ் முதலான ஆசிரியர்கள் விபரம் தந்துள்ளனர் அது வருமாறு:

கி. பி. 62-ம் ஆண்டில் பஸ்கா பண்டிகைச் சமயத்தில் பரிசேயரும் வேதபாரகரும் பரிசுத்த யாக்கோபை தேவாலயத்துக்கு அழைத்து, ஆலயப்படிகளுக்கு மேல் ஓர் உயரமான இடத்தில் உட்காரவைத்து, அங்கு வருகிறவர்களும் போகிறவர்களுமான மக்களுக்கு நியாயப்பிரமாணப் போதனை கொடுக்கவும் அதற்கெதிரான போதனைகளை மடங்கடித்து உபதேசிக்கவும் கேட்டுக்கொண்டனர். மேலும், கிறிஸ்துநாதரைப் பற்றிய உபதேசங்களை எதிர்த்துப் பேசவும் வேண்டுமென்றனர். அப்பொழுது அவர் அவர்களைப் பார்த்து, “ மனுஷ குமாரனாகிய இயேசுவைப் பற்றி என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்? அவர் இப்பொழுது பரலோகத்தில் சர்வ வல்லவரின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். வானலோகத்திலிருந்து மேகங்களின்மீதிலமர்ந்தவராய்ச் சடுதியில் வரப்போகிறார் ” என்றார். உடனே அங்கு நின்ற சில கிறிஸ்தவர்கள், “ தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா ” என்று உரத்துக் கூறி ஆரவாரித்தார்கள். தங்கள் திட்டம் சுக்குநூறானதைக் கண்ட பரிசேயரும் வேதபாரகரும் பல்லைக் கடித்துக்கொண்டு, கோபாவேசமாய் அவர் மீது பாய்ந்து தேவாலயப்படிகளில் அவரை உருட்டித் தள்ளினார்கள். முதிர்வயதும், தளர்ந்த உடலையுடையவருமான பரிசுத்த யாக்கோபு உருண்டு உருண்டு, மிகுந்த காயங்களுடன் தரையில் வந்து விழுந்தார். உடனே அவர் தள்ளாடிக்கொண்டே எழுந்து முழங்காலில் நின்று தன் பகைவர்களுக்காக ஜெபித்தார். அப்பொழுது அவரைச் சூழ்ந்து நின்ற கூட்டத்திலிருந்த ஒருவன் தன் கையிலிருந்த குண்டாந்தடியை ஓங்கி அவருடைய தலையில் அடித்து அவரைக் கொன்றான்.

இவ்விதமாக நமதாண்டவரின் சகோதரனும் எருசலேம் சபையின் முதல் அத்தியட்சருமான பரிசுத்த யாக்கோபு இரத்தச்சாட்சியாக மரித்தார்.

எருசலேம் என் ஆலயம்,
ஆசித்த வீடதே;
நான் அதைக் கண்டு பாக்கியம்
அடையவேண்டுமே

— பாமாலை 400 : 1

15

சுவிசேஷகனாகிய

பரிசுத்த மாற்கு

ஊழியத்தில் மிகவும் பிரயோஜனமுள்ளவன் [ii தீமோ. 4:11]

பரிசுத்த மாற்கு யோவான் மாற்கு என்றும் அறியப்பட்டார்.

அவர் லேவிக்கோத்திரத்தினன் என்பதும், அவரது தந்தை அரிஸ்தோபுலு என்னுமொருவரென்பதும், அவர் சீப்புரு தீவில் வாழ்ந்த வொரு தனவந்தரென்பதும் பாரம்பரியச் செய்திகள், மேலும் அச்செய்திகள் தெரிவிப்பன வெவை யெனின்,

அரிஸ்தோபுலு பரிசுத்த பர்னபாவின் சகோதரன், அவருடைய மனைவியின் பெயர் மரியாள் (அப். 12:12). பரிசுத்த மாற்கு அவருடைய வயது காலத்தில் பிறந்த மகன். மாற்குவுக்கு மூத்த சகோதரி ஒருத்தி யுண்டு. நூபியர் என்னுமொரு சாதியினர் சீப்புரு தீவின்மீது படையெடுத்த காலத்தில் அரிஸ்தோபுலு தன் சம்பத்தனைத்தையும் இழந்து, பலஸ்தீனாவுக்குக் குடியோடி, கப்பர்நகூமில் வாசம்பண்ணினார். அவர் இறக்குமுன், அல்லது இறந்தபின் அவருடைய மூத்த மகளைப் பரிசுத்த பேதுரு மணந்தார். வேறொரு பாரம்பரியப்படி அரிஸ்தோபுலுவின் மனைவியின் சகோதரன் பரிசுத்த பர்னபா. அந்த முறையில் பரிசுத்த மாற்கு பர்னபாவுக்குத் தமக்கை மகனானார். பேதுருவுக்கு மாற்கு என்றொரு மகனிருந்தான். ஆயினும் அவர் தன் மனைவியின் சகோதரனான யோவான் மாற்குவையும் தன் மகனெனப் பாவித்தார். 'என் குமாரனாகிய மாற்கு' என்று அவர் நிருபத்தில் குறிப்பிடுவது (i பேதுரு 5 : 13) இந்த மாற்குவையேயன்றித், தன் சொந்த மகனை யல்ல என்பது வியாக்கியானிகளின் கருத்து

மாற்குவின் தாயாராகிய மரியாளுக்கு எருசலேமி லும் ஒரு வீடு இருந்தது. இரட்சகர் பாடுபட்ட நாட் களில் மாற்குவும் அவரது தாயாரும் எருசலேம் வீட் டில் வசித்துவந்தனர். மாற்கு சுவிசேஷம் 14 : 51, 52ல் குறிக்கப்படுகிற வாலிபன் மாற்கு சுவிசேஷகனுகிய இந்த யோவான் மாற்குவே. எருசலேமில் அப்போஸ்தலர் கூடி ஜெபித்த மேல் வீட்டறை மாற்குவின் வீட்டு மேல்வீட் டறையென்பது பல வியாக்கியானிகளின் முடிவு.

துவக்க காலத்தில் பேதுருவுக்குச் சீஷனுகவிருந்த மாற்கு அந்தியோகியாவுக்குப் போய்த் தன் உறவின னுன பரிசுத்த பர்னபாவுடன் சேர்ந்து கொண்டார்.

பரிசுத்த பவுலின் முதலாம் பிரயாணத்தில் பவுலுக் கும் பர்னபாவுக்கும் உதவியாயிருந்த யோவான் மாற்கு (அப். 13 : 5), பெர்கேயில் அவர்களைவிட்டுப் பிரிந்து எருசலேமுக்குச் சென்றுவிட்டதினுல் (13 : 13), இரண் டாம் பிரயாணத்தில் அவரைச் சேர்த்துக்கொள்ளப் பவு லுக்கு மனதில்லை. அதினுல் அவருக்கும் பர்னபாவுக்கும் மனப்பேத முண்டாகி ஒருவரைவிட்டொருவர் பிரிந்து கொண்டார்கள் (15 : 39). பர்னபாவும் மாற்கும் சீப் புரு தீவுக்குச் சென்றுர்கள்.

சீப்புரு தீவில் அவர்கள் எவ்வளவு காலம் பணி யாற்றினர் என்பது திட்டவட்டமாகத் தெரியாது. 'அப் போஸ்தலனுகிய பர்னபாவின் பயணங்களும் இரத்தச் சாட்சி மரணமும்' என்ற நூலில் (**The Journeyings and martyrdom of St. Barnabas the Apostle**) அவர்களது ஊழியத்தைப் பற்றிய வரலாறு கொடுக்கப்பட்டிருக்கி றது. அதைப் பர்னபாவைப்பற்றிய விருத்தாந்தத்தில் கூறியுள்ளோம்.

சீப்புரு தீவு ஊழியத்திற்குப்பின் பரிசுத்த மாற்கு மறுபடியும் பரிசுத்த பேதுருவுடன் சேர்ந்து முதலில் அந்தியோகியாவிலும், பின்பு பாபிலோனிலும் அவருக் குச் சீஷனுகவும் உடனூழியனுகவு மிருந்தார்.

பேதுரு அலெக்சந்தரியாவுக்குச் சென்றபொழுது மாற்குவும் அங்கு சென்ருரென்றும், அங்கிருக்கும் பொழுது 'பேதுரு சொல்லச் சொல்ல இரட்சகரின் சுவி சேஷத்தை மாற்கு எழுதினர்' என்றும் ஒரு பாரம்பரியம் உண்டு. பேப்பயஸ் என்ற கண்காணியார் அவ்வுண்மை யைத் தெரிவித்துள்ளார். அந்த சுவிசேஷமே நமது வேதாகமத்திலுள்ள பரிசுத்த மாற்கு எழுதின சுவி சேஷம்.

பேதுரு அலெக்சந்தரியாவைவிட்டு வேறிடங்களுக் குப் போகும்பொழுது, மாற்குவை அங்கே நிறுத்தி எகிப்து தேசத்தில் கிறிஸ்தவ சபைகளே நிறுவும் பொறுப்பை அவரிடம் கொடுத்துச் சென்ருர்.

பரிசுத்த மாற்கு அந்தப் பணிவிடையை வெகு திறமை யுடன் நிறைவேற்றி ஓர் உறுதியான திருச்சபையை அலெக்சந்தரியாவிலும் சுற்றுப் புறங்களிலும் நாட்டி, அதில் மூப்பர்களேயும், உதவிக்காரரையும், கண்காணியா ரொருவரையும் நியமித்தார். இது கி. பி. 62க்கு முன் நடந்திருக்கவேண்டும். அதேவிதமாக லிபியாவிலும் திருப் பணிவிடை நிறைவேற்றி முடித்தார்.

பரிசுத்த பவுல் அப்போஸ்தலனின் முதலாம் சிறையி ருப்பு முடிந்து, விடுதலேயாகி, அவர் அந்தியோகியாவுக்கு சென்றபொழுது, பரிசுத்த மாற்கு அவருடன் ஒப்புரவாகி, அவருடன் சேர்ந்து, சின்ன ஆசியாச் சபைகளே அவர் சந் தித்த காலத்தில் அவருடைய ஊழியத்தில் அவருக்கு 'மிகவும் பிரயோஜன'மாயிருந்தார். எபேசுவில் பரிசுத்த பவுல் பரிசுத்த மாற்குவைத் தீமோத்தேயுவுடன் விட்டு விட்டுத் தன்னுடைய பிரயாணத்தைத் தொடர்ந்தார். அல்லது, பவுல் தல்மாத்தியா நாடுகளில் ஊழியம் செய்த பொழுது, மாற்குவும் அவருடன் சென்று, அவருக்கு மிகுந்த உதவியாயிருந்து, அவர் ஸ்பானியாவுக்குப் புறப் பட்டபொழுது, அவருடன் செல்லாமல் எபேசுவுக்குப் போய் அங்கு தங்கினர் என்றும் கொள்ளலாம்.

பவுல் தனது இரண்டாவது சிறையிருப்பின் காலத்தில் எபேசுவிலிருந்த மாற்குவைக் கூட்டிக்கொண்டு வரும்படி தீமோத்தேயுவுக்கு எழுதினர். (II தீமோ. 4:11). அப்படியே தீமோத்தேயுவும் மாற்குவும் பவுலைப் பார்க்கும்படி ரோமாபுரிக்குப் போனர்கள்.

அங்கு, மாற்கு பரிசுத்த பேதுருவைக் கண்டு அவருடன் சேர்ந்து ரோமாபுரியார்க்குச் சுவிசேஷம் கூறினரென்றும், விசுவாசித்தவர்களாகிய ரோமர் கிறிஸ்துநாதரைப் பற்றிப் பேதுருவும் மாற்குவும் தங்களுக்குச் சொன்னவைகளை ஒரு நூலாக எழுதித்தரவேண்டுமென்று கேட்டதாகவும், அவரும் அதற்கிணங்கி நாமறிந்திருக்கிற மாற்கு சுவிசேஷத்தை எழுதினதாகவும், கி. பி. 323-ல் திருச்சபை வரலாற்றுசிரியரான செசரியா நகரக் கண்காணியாரான யுசெபியசும் 410-ம் ஆண்டில் பரி. ஜெரோமும் எழுதுகிறார்கள். ஆனல் இது ஏற்கப்பாலதன்று கி. பி. 60 முதல் 130 வரை வாழ்ந்தவரும் பரிசுத்த யோவானின் சீஷனும் ஹயராப்போலி நகரக் கண்காணியாருமான பேப்பயஸ் (Papias Bishop of Hierapolis), பரிசுத்த மாற்கு சுவிசேஷகன் அலெக்சந்தரியாவில் பரிசுத்த பேதுருவிடம் கேட்டுத் தன் சுவிசேஷத்தை எழுதினர் என்பதே ஏற்புடைத்து.

பரி. பவுல், பரி. பேதுரு முதலியவர்களின் இரத்தச் சாட்சி மரணத்துக்குப் பின், பரிசுத்த மாற்கு மறுபடியும் அலெக்சந்தரியாவுக்குச் சென்றார். அங்கு சபைகளை ஒழுங்குபடுத்தி, எகிப்திய திருச்சபைக்கு ஒரு ஸ்திரத் தன்மையைத் தந்தார். சிறப்பான ஊழியத்தை நிறைவேற்றி வந்த அவருக்கு எதிராக விரோதிகள் எழும்பினர்.

அவர்கள் அவரைப் பிடித்துச் சித்திரவதை செய்து, தெருத்தெருவாகத் தரையில் கிடத்தி இழுத்துச் சென்று, இரவு முழுவதும் ஒரு பாதாளக்கிடங்கில் காவல்வைத்து; மறுநாள் அவரைக் கொன்று, சடலத்தை சுட்டெரித்தார்கள்.

கிறிஸ்தவ பக்தர்கள் அவருடைய எலும்புகளை எடுத்து அடக்கம் செய்தார்கள். (கி. பி. C 70).

மெய் மாந்தனை கர்த்தரின்
மகா செய்கை எல்லாம்
உரைக்கும் திவ்யவசனம்
சாவாமை உள்ளதாம். —பாமாலை 149 ; 3

16

சுவிசேஷகனாகிய

பரிசுத்த லூக்கா

சுவிசேஷங்களில் அதிக விருப்பத்தோடு வாசிக்கப்படுகிறது பரிசுத்த லூக்கா எழுதின சுவிசேஷமென்பர். லூக்காவின் பெருமை சுவிசேஷத்துடன் நின்றுவிடவில்லை, அவர் எழுதியுள்ள பரிசுத்த அப்போஸ்தலரின் நடபடிகள் என்னும் ஆகமம் 'முதல் திருச்சபையின் வரலாற்று நூல்' என்னும் புகழ் பெற்றுள்ளது.

புறஜாதியினனான கிறிஸ்தவர், கிறிஸ்துநாதரை முகமுகமாய்ப் பார்த்தறியாதவர், கல்விமான், எழுத்தாளன், பரிசுத்த பவுலின் அத்தியந்த நண்பன். அவரின் மருத்துவர், மருத்துவமேதை, இவையெல்லாவற்றுக்கும் மேலாகச் சுவிசேஷகன் — மேற்சொன்னவைகளைத் தவிர வேறு எதுவும் பரிசுத்த லூக்காவைப்பற்றி அறியோம்.

பரிசுத்த பவுலின் முதலாம் சிறையிருப்புக்குப்பின், மருத்துவரும் பவுலின் உற்ற நண்பனும் உடனூழியனுமான பரிசுத்த லூக்கா. அவருடைய கிரேக்க, தல்மாத்திய மிஷனெரிப் பணிகளிலும், ஒருக்கால் ஸ்பானியா நாட்டு ஊழியத்திலும் அவருடனுழைத்தார் என்று கொள்ள இடமுண்டு.

இரண்டாம் சிறையிருப்புக் காலத்தில் பரிசுத்த லூக்கா பரிசுத்த பவுலுடனேயே யிருந்தார் என்பது நிச்சயம் (II தீமோ. 4:11)

பரிசுத்த பவுலின் முதலாம் சிறையிருப்பு முடிந்தபின் பரிசுத்த பவுல் சின்ன ஆசியாவிலிருந்த சபைகளைச் சுற்றிப் பார்க்கச் சென்றிருந்த நாட்களில், பரி. லூக்கா அப்போஸ்தலர் நடபடிகளினாகமத்தை எழுதினார். அப்படியானால் இதின் காலம் கி.பி. 65 / 66 ஆகவிருந்திருக்க

வேண்டும். அப்போஸ்தலனின் இரத்தச்சாட்சி மரணத்துக்குப்பின் எழுதியிருப்பரேல், நிச்சயமாக முதலாம் சிறையிருப்புக்குப்பின், மரணம் வரை நேரிட்ட சம்பவங்களின் வரலாற்றையும் எழுதியிருப்பாரன்றோ? முதலாம் 'பிரபந்தத்தை' எழுதியவர், அப்போஸ்தலனின் மரணத்துக்குப்பின் மரணம் வரை நேரிட்ட வரலாற்றை இரண்டாம் 'பிரபந்தமாக' எழுத நினைத்து, வேலை மிகுதியினால் எழுதக்கூடாது போயிருந்திருக்கலாம்.

பவுலின் மரணத்திற்குப்பின் லூக்கா தன்னுடைய சுவிசேஷத்தை எழுதத் தீர்மானித்துப் பலஸ்தீனுவுக்குச் சென்று நமதாண்டவரை அறிந்தவர்களிடத்திலிருந்து பற்பல விபரங்களைச் சேகரித்தார். பின் எபேசுவுக்குச் சென்று இரட்சகரின் தாயாராகிய பரிசுத்த மரியாளைச் சந்தித்து, அந்த அம்மையாரிடம் கர்த்தருடைய பிறப்பைப்பற்றிய செய்திகளைத் திட்டவட்டமாக விசாரித்தறிந்தார். பரிசுத்த மரியாள் தன்னுடைய இறுதி ஆண்டுகளை எபேசு பட்டணத்தில் செலவிட்டாரென்று பாரம்பரியம் கூறுகிறது. பலஸ்தீனுவிலிருந்த காலத்தில் 'இயேசுவின் மொழிகள்' (**The Sayings of Jesus**) என்ற ஒரு தொகுப்பு நூலையும், பரிசுத்த மாற்கு எழுதின சுவிசேஷத்தையும் பரிசுத்த மத்தேயு எழுதினதாக சொல்லப்படுகிற எபிரேயர் சுவிசேஷத்தையும் அவர் அறிந்திருக்க வேண்டும் என்று கற்றோர் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். கிறிஸ்துநாதர் உயிர்த்தெழுந்தபின் அவர் யார் யாருக்குத் தரிசனமானாரோ அவர்களையும் கண்டு பல செய்திகளை விசாரித்தறிந்தார். எடுத்துக்காட்டாக: எம்மாவூருக்குப் போன சீஷர்களுக்கு இயேசுநாதர் அருளிச் செய்த தரிசனம்,

இப்படி அலைந்து திரிந்து தன் அரும்பெரும் நூலை எழுதச் செய்திகளைச் சேகரித்தபின் கி. பி. 75ம் ஆண்டு, அல்லது அதற்கு இரண்டொரு ஆண்டுகள் கழித்துச் சுவிசேஷத்தை எழுதினாரென்றெண்ணக் கிடக்கிறது.

அக்காலமெல்லாம் அவர் எங்கெங்கு சென்ருரோ அவ்விடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்

சுவிசேஷத்தை அவர் கிரேக்க நாட்டிலிருந்து எழுதிஞரென்றும், புறஜாதியாருக்குப் பயன்பட வேண்டுமென்றே அதை ஆக்கிஞரென்றும் வேத வல்லுநர் அபிப்பிராயப் படுகின்றனர்.

சுவிசேஷத்தை எழுதி முடித்தபின் அவர் அப்போஸ்தலர் நடபடிகளின் இரண்டாம் பிரபந்தத்தை எழுதத் தொடங்கியிருக்க வேண்டும், அல்லது முயற்சித்திருக்க வேண்டும். ஆனுல் அதற்குள் முடிவு வந்துவிட்டது,

கி, பி. 76 அல்லது 77—ல் புறமதத்தினரான சில கிரேக்க மதாபிமானிகள் பரிசுத்த லூக்காவைப் பிடித்து ஒரு ஒலிவ மரக்கிளையில் அவரைத் தூக்கிலிட்டார்கள். இது கிரீஸ் தேசத்தில் அகாயா நாட்டில் நடந்தது என்பது பாரம்பரியம்.

ஆகவே, பரிசுத்த லூக்காவும் இரத்தச்சாட்சி மரணத்திஞலேயே கர்த்தரை மகிமைப்படுத்திஞர்.

———

G. B. Sathyanesan, B.A.

17

பரி. பவுலின் சீஷனை

பரிசுத்த தீமோத்தேயு

விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய

தீமோத்தேயு [I தீமோ. 1 : 12]

பரிசுத்த தீமோத்தேயு லீஸ்திரா ஊரான். அவருடைய தாயார் ஐனிக்கேயாள் ஒரு யூதப் பெண். தந்தை புற ஜாதியினனான ஒரு கிரேக்கன், தாயாரின் தாயாரது பெயர் லோவிசாள். லீஸ்திராவுக்கும் தர்சுவுக்கும் அதிகத் தொலைவு இல்லை. ஆகையினால் பவுலின் குடும்பத்துக்கும் லோவிசாளின் குடும்பத்துக்கும் நட்புறவுண்டு என்றெண்ணலாம்.

பவுலின் குணப்படுதலுக்குப்பின், அவர் சில காலம் தர்சுவில் தங்கியிருந்த காலத்தில் (அதாவது கி பி. 37 க்கும் 45 க்கு மிடையில்) லோவிசாள், ஐனிக்கேயாள் தீமோத்தேயு ஆகிய மூவரும், பவுலின் மூலம் கர்த்தரைக் கண்டடைந்தனர் என்பது ஒரு சாராரின் கருத்து. அக் காலத்தில் தீமோத்தேயு ஓர் இளைஞனாயிருந்து, பவுல் தன் முதலாம் மிஷனெரிப் பிரயாணத்தில் அடைந்த துன்பங்களை நேரில் அறிந்தார் (II தீமோ. 3 : 11). அக் காலத்தில் அவர் பரிசுத்த பவுலின் 'ஆவிக்குரிய மகனா'னார். அதாவது ஞானஸ்நானம் பெற்றுக், கைகளை வைக்கும் நியமத்தால் விசுவாசத்தில் திடப்படுத்தப்பட்டார். அது முதல் பவுலின் பிரியமான குமாரன் என்றும் எண்ணப் பட்டார் (I தீ 1 : 2, II தீ 1 : 1). பவுலின் இரண்டாம் பிரயாண காலத்தில் அவர் லீஸ்திரா சபையில் ஒரு சீஷனாக விளங்கினார்.

இரண்டாவது பிரயாணத்தில் அவர் பவுலுடன் சேர்ந்து கொண்டார். அக் காலத்தில் யூதர்களினிமித்தம் தீமோத்தேயு விருத்தசேதனம் செய்துகொள்வது நல

மென்று பவுல் எண்ணின படியால் அவர் அதை நிறை வேற்றினூர் (அப். 16 : 3). அப்பொழுது அவருக்கு வயது சுமார் 21. அதற்குப்பின் பவுல் அவரை ஒரு சுவிசே ஷகனுக நியமித்தார். கைகளை வைக்கும் நியமத்தால் அவர் ஒரு மூப்பராகவும் ஏற்படுத்தப்பட்டார் (II தீ 1 : 6) இவ் விதமான அந்தஸ்துடன் பவுலுடனும் சீலாவுடனும் அவர் நேரடியான ஊழியத்தில் பங்கு பெறலானூர்.

துரோவாவில் பரிசுத்த லூக்கா அவர்களுடன் சேர்ந்துகொண்டார் (அப். 16 : 10). பிலிப்பியில் லூக்கா பிரிந்துபோகவே அவர்கள் தெசலோனிக்காவுக்குச் சென் ருர்கள். அந்த நீண்ட மிஷனெரிப் பிரயாணத்தில் தீமோத்தேயு சீலாவுடன் சேர்ந்து பவுலின் உடனூழியனு கவும், சீஷனுகவும், தூதுவனுகவும் விளங்கினூர் (அப். 16: 40, 17 : 1, 10, 14; II தீ 3 : 15, I தெச. 3 : 1–6; அப். 18 : 2–5; II கொ. 11 : 8, 9). இருவரும் அவருடன் சேர்ந்து சுவிசேஷம் கூறி அநேகரின் மனந்திரும்புதலுக்குக் காரணராக விருந்ததுடன் (II கொ. 1:19), அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் பணியையும் நிறைவேற்றினர் (I கொ. 1 : 14). காலம் கி. பி. 52–53. கி. பி. 53–ல் பவுலும் ஒருக்கால் தீமோத்தேயுவும் எபேசு வழியாக எருச லேமுக்குச் சென்றனர். அங்கிருந்து அவர்கள் அந்தியோகி யாவுக்குப் போனூர்கள்.

54–ம் ஆண்டின் பின் பகுதியில் பவுலும் தீமோத்தேயு வும் மூன்றும் மிஷனெரிப் பிரயாணத்தைத் தொடங்கினூர் கள். அவர்கள் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்கு வந்த போது. அங்கு நியாயப்பிரமாணத்தை வலியுறுத்துபவர் கள் வந்து சபைகளின் விசுவாசத்தையும், தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தையும் குலைத்துச் சீரழித்திருந் ததைக் கண்ட பவுல் மிகுந்த மனவேதனைக்குள்ளானூர் (கலா. அதி 1, 3). அங்கு பணிவிடை நிறைவேற்றி, எபேசுவுக்குச் சென்று அங்கு மூன்று வருஷங்கள் தங்கினர் (அப். 19 : 1–20). அங்கிருக்கும்பொழுது பவுல் கலாத்தி யருக்கு ஒரு நிருபம் எழுதினூர் (கி. பி. 55). கொரிந்து

சபையைப்பற்றி துயரச் செய்திகளைக் கேள்விப்பட்ட அவர் தீமோத்தேயுவையும் எரஸ்துவையும் அங்கு அனுப்பினார். அங்கு போய் அவர்கள் சேருமுன், ஒருக்கால் கொரிந்தியர் தீமோத்தேயுவை ஏற்றுக்கொள்ளாமல் அவரை மனமடிவுக் குள்ளாக்கிவிடலாம் என்று பயந்து, கொரிந்தியருக்கு ஒரு கடிதம் எழுதி, தீமோத்தேயுவுக்கு முன் அது அவர்களுக்குக் கிடைக்கும்படி தீத்துவிடம் கொடுத்தனுப்பினார் (I கொ. 4 : 17; 16 : 10). — கி. பி. 57.

பின்பு அவர் மாசிதோனியாச் சபைகளுக்குப் போனகாலை தீமோத்தேயு பிலிப்பியில் அவருடன் சேர்ந்து கொண்டார் அங்கிருந்து பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாவது நிருபத்திலிருந்து இது தெளிவு (II கொ. 1 : 1) — கி. பி 58. பவுல் தீமோத்தேயுவை மறுபடியும் கொரிந்துவுக்கு அழைத்துச் சென்றார். அங்கு மூன்று மாதமிருந்தனர். அங்கிருந்து பவுல் ரோமருக்கு ஒரு நிருபமெழுதி அனுப்பினார் (58).

பின் பிலிப்பி வழியாகப் பவுல் எருசலேமுக்குத் திரும்பினார். அவருடன் லூக்கா, தீமோத்தேயு, சொவேத்தர் அரிஸ்த்தர்க்கு, செக்குந்து, காயு, துரோப்பீமு, தீகிக்கு முதலியோரிருந்தனர் (அப். 20 : 4). எருசலேமிலும், பின் செசரியாவிலும் (கி பி. 59–61) தீமோத்தேயு பரிசுத்த பவுலுடனிருந்தார். அங்கிருந்து சமயா சமயங்களில் பவுலின் தூதுவனாகப் பல இடங்களுக்குச் சென்று திரும்பினார். ஆனால் பவுல் ரோமாபுரிக்குப் பயணமான போது தீமோத்தேயு அவருடன் போகவில்லை. ஏனெனில் அச் சமயத்தில் அவர் எபேசுவுக்குச் சென்றிருந்தார்.

ரோமாபுரியில் பரிசுத்த பவுல் சிறையிலிருந்த இரண்டு ஆண்டுகளில் (61–63) சில காலம் தீமோத்தேயு அங்கு அவருடனிருந்தார் (62). அந் நாட்களில் பவுலின் தூதுவனாக அவர் பிலிப்பி சபைக்கு அனுப்பப்பட்டார் (பிலி. 2 : 19, 20). பிலிப்பியிலிருந்து விரைவில் திரும்பி வந்து ரோமாபுரியில் பவுலுடனிருந்த தீமோத்தேயு கொலோசே சபைக்கும், பிலேமோனுக்கும் எழுதின நிருபங்களி லிடம் பெற்றார் (கி. பி. 53).

63-ம் ஆண்டில் சிறையிலிருந்து விடுதலையான பவுல் பிலிப்பி, துரோவா, கொலோசே, பெர்க்மு, சர்தை, லவோதிக்கேயா சபைகளைப் பார்க்கச் சென்றார். அந்தப் பிரயாணத்தில் தீமோத்தேயுவும் அவருடனிருந்தார். இறுதியில் அவர்கள் எபேசுவுக்குப் போனார்கள். அங்கு அப்போஸ்தலன் ஓராண்டு காலம் தங்கினார்.

அவ்வோராண்டு கால ஊழியத்துக்குப்பின், தீமோத்தேயுவை எபேசுவின் கண்காணியாராக அங்கு நியமித்து விட்டுத், தீத்துவுடன் அவர் கிரேத்தாத்தீவுக்குப் போய் அத்தீவில் சிலமாதங்கள் பணியாற்றினார். அதன் முடிவில் தீத்துவைக் கிரேத்தாவின் கண்காணியாராக நியமித்து விட்டு, ரோமாபுரிக்கும், அங்கிருந்து தல்மாத்தியாவுக்கும் (அல்லது மாசிதோனியாவுக்கும் அங்கிருந்து தல்மாத்யாவுக்கும்), பின் ஸ்பானியா நாட்டிற்கும் போய்ப் பணியாற்றிய பவுல், சிலருடைய கருத்துப்படித் திரும்பவும் கொலோசே, எபேசு, துரோவா சபைகளைச் சந்தித்து (கி. பி. 66) பிலிப்பி, கொரிந்து சபைகளையும் பார்த்து விட்டு ரோமாபுரிக்குச் சென்றார் (66). அங்கு அவர் சிறைப்படுத்தப் பட்டுக் காவலில் வைக்கப்பட்டார் (66-67)

அக்காலங்களில் I, II தீமோத்தேயு, தீத்து, பிலேமோன் நிருபங்களை எழுதினார். 67-ம் ஆண்டு ஜூன் மாதம் பவுல் இரத்தச்சாட்சியானார்.

தீமோத்தேயு ரோமாபுரிக்குப் போய்ச் சேருமுன் பரிசுத்த பவுல் கொல்லப்பட்டுவிட்டார்.

ஆகையால் தீமோத்தேயு எபேசுவுக்குத் திரும்பிச் சென்று, அச்சபையில் கண்காணியாராகத் (Bishop) தன் பணியை நிறைவேற்றிவந்தார் (Eusebius-H, E. III. 14). அவருடைய அத்தியட்ச ஊழிய காலத்தில் அப்போஸ்தலரென்று தங்களை வர்ணித்துக்கொண்ட அப்போஸ்தலரல்லாத போதகரையும், நிக்கொலாய் மதத்தினரையும் வெறுத்துப் புறக்கணித்து, அவர்களுடைய உபதேசங்களை நிராகரித்துச் சபைகளை சுத்த உபதேசத்தில் உறுதிப்படுத்தி, இடைவிடாமல் பணியாற்றி வந்தார்.

இவ்வாறு சுமார் 25 ஆண்டுகளுக்கு மேல் ஊழியம் செய்த பரிசுத்த தீமோத்தேயு சுமார் (கி. பி.] 90-ம் அல்லது 96-ம் ஆண்டில் இரத்தச்சாட்சியாக மரித்தார், நைசிப்போரஸ் என்ற திருச்சபை வரலாற்றாசிரியர் (Niceephorus the Church Historian in his H. E. iii. 11) கூறுவது: எபேசுவின் ஆர்த்தெமிஸ் தேவதையின் வருடாந்தரப் பெரும்விழா நடந்தது. விக்கிரகங்களைத் தூக்கிக் கொண்டு ஆர்ப்பாட்டமாகப் பவனிவருவது அவ்விழாவின் அம்சங்களிலொன்று. அப்பவனியில் பெண்கள் நிர்வாணமாக நடனமாடிக்கொண்டு முன்நடந்து செல்வர். பவனியின் முடிவில் பக்தர்கள் தங்களைக் கத்தியால் கீறி இரத்தம் சிந்துவர், இக் காட்சிகளைக் கண்ட தீமோத்தேயு ஆர்த்தெமிஸின் கோவிலுக்குள் பாய்ந்து, அங்கு ஆர்ப்பரித்து, ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த கூட்டத்தினரை விளித்து, நாகரிகமாக நடந்து கொள்ளுங்கள் என்று போதிக்கத் தொடங்கினார், வெறிபிடித்து நின்ற அவ்விக்கிரகத்தொழும்பர் உடனே அவரைக் கம்புகளாலும் தடிகளாலும் தாக்கிக் கொன்றனர்.

பரிசுத்த தீமோத்தேயு இரத்தச் சாட்சியாக மாண்டது ஜனுவரி 24-ம் நாள். அப்பொழுது அவருக்கு வயது சுமார் 60 அல்லது 65.

நீயோ தேவனுடைய மனுஷன்

சாகும்போது, திறவுண்ட
வானத்தையும், அதிலே
மகிமையினால் சூழுண்ட
இயேசுவையும் காண்போமே.

—பாமாலை 314 : 6

18

பரிசுத்த பவுலின் சீஷனை

பரிசுத்த தீத்து

பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரனுகிய தீத்து
[தீத்து 1 : 1]

தீத்து கிரேத்தாத் தீவைச் சேர்ந்த ஒரு கிரேக்கன். கிரேத்தாவின் பழங்கால அரச வம்சத்தைச் சேர்ந்தவர் என்னுமொரு வரலாறு முண்டு. அவ்வரலாறு தீத்துவின் சகோதரிகளில் ஒருத்தி அத்தீவின் கவர்னரின் மனைவியா யிருந்தாள் என்று கூறுகிறது. கல்விமானுயிருந்த தீத்து, கிரேக்க தத்துவ ஞானங்களை ஆராய்ந்து அதில் தனக்கு ஆத்மீகத் திருப்தி ஏற்படாமல் கவலையுற்றிருந்த காலத்தில் யூதர்களின் ஆகமங்களைக் கற்று, ஏசாயா தீர்க்கதரிசியின் வசனங்களால் கவரப்பட்டு, கிறிஸ்துநாதரைக் காணச் சென்ற கிரேக்கருடன் சேர்ந்து, எருசலேமுக்குப் போய், பரிசுத்த அந்திரேயாவின் மூலம் கர்த்தரண்டை அழைத்துச் செல்லப்பட்டார் என்பதும், இரட்சகரின் உயிர்த்தெழுதலுக்குப்பின், விசுவாசியாகி, பெந்தேகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றூர் என்பதும் மற்ருெரு பாரம்பரியம்.

ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் பவுலப்போஸ்தலனின் நிருபங்களிலிருந்து பரிசுத்த தீத்துவைப்பற்றி நாம் சேகரிக்கக்கூடிய தகவல்கள், மேற்படி பாரம்பரியங்களை ஒப்புக்கொள்ள நமக்கு இடம் தரவில்லை.

தீத்துவுக்கு எழுதப்பட்ட நிருபத்தின் காலம் கி. பி. சுமார் 56—ம் ஆண்டு என்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். அந்நிருபத்தில் தீத்து இளவயதுள்ளவராயிருந்ததாக நாம் அறியக் கிடக்கிறது (தீத்து 2 ; 6, 7, 15). பவுல் தீமோத்தேயுவைப்போலவே தீத்துவையும் விசுவாசத்தின்படி தனது குமாரன் என்று வர்ணிப்பதும் (தீ 1 : 1) அவருடைய இளமையைக் காட்டுகிறது.

கி. பி. 50-ம் ஆண்டில் எருசலேமில் நடந்த சங்கத்திற்கு அந்தியோகியா சபையினால் பரிசுத்த பவுல், பர்னபா என்பவர்களுடன் அனுப்பப்பட்ட மனிதரில் (அப். 15 : 2) தீத்துவும் ஒருவர் என்பது கலாத்தியர் நிருபம் 2 : 1-ன் மூலம் தெளிவு. இதிலிருந்து தீத்து கி. பி. 50-ம் ஆண்டுக்கு முன்னரே பரி. பவுலின் மூலம் கிறிஸ்துநாதரைப் பற்றிய விசுவாசத்துக்குள் கொண்டு வரப்பட்டா ரெனவும், 50-ம் ஆண்டுக்குள் அந்தியோகியா சபையாரால் ஒரு தூதுக்குழுவில் சேர்க்கப்படத் தக்க அளவுக்கு மதிக்கப்பட்டவ ராகிவிட்டாரெனவும் புலனாகிறது.

பரிசுத்த தீத்து எப்பொழுது கிறிஸ்தவரானரென்பது அடுத்த கேள்வி.

கி பி. சுமார் 29-ம் ஆண்டில் கிரேத்தாத்தீவில் பிறந்த தீத்து தனது இளம் பிராயத்தில் சீரியாவிலுள்ள அந்தியோகியாவில் வாழ்ந்தார். ஸ்தேவானின் கொலைக்குப்பின் எருசலேமிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த துன்பமுண்டானபடியால் அவர்களிலநேகர் அங்கிருந்து வெளியேறி பெனிக்கே, சீப்புரு தீவு முதலிய நாடுகளுக்கும், அந்தியோகியாவரைக்கும் சென்று, யூதர்களுக்குச் சுவிசேஷம் கூறினார்கள். (கி. பி. 39–40). சீப்புரு தீவிலும் சிரேனேயிலும் கர்த்தரை ஏற்றுக்கொண்ட சிலர் அந்தியோகியாவுக்குப் போய், அங்கு வாழ்ந்த புறஜாதியாரான கிரேக்கருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அநேக ஜனங்கள் மனந்திரும்பினார்கள். ஒரு பெரிய சபை அங்கு உருவானது. அதைக் கேள்விப்பட்ட எருசலேம் சபையார், அந்தியோகியா சபைக்கு உதவியாயிருக்கும்படி பரி. பர்னபாவை அங்கு அனுப்பினார்கள். பர்னபா அங்கு போய், அப்பெரிய சபையின் ஊழியத்தில் தனக்கு உதவி தேவைப்பட்டதை உணர்ந்து, தர்சுவுக்குச்சென்று, பவுலைக் கூட்டிக்கொண்டு அந்தியோகியா சேர்ந்து, இருவரும் பிற ஊழியர்களுடன் ஊழியத்தை நடப்பித்தார்கள் (கி பி. 43–44) – அப். 11 : 19–26.

சுமார் ஒரு வருஷ காலம் பவுல் அந்தியோகியா வில் பணியாற்றினர். அந்நாட்களில் சுவிசேஷத்துக்குச் செவிகொடுத்து, அவர்மூலமாய் கர்த்தருடைய பிள்ளை களானவர்களில் ஏறத்தாழ பதினைந்து வயதினனுல தீத் துவு மொருவர். பவுல், தீமோத்தேயுவை விசுவாசத் தில் தான்பெற்ற குமாரனுக ஏற்றுக்கொண்டதுபோலத், தீத்துவையும் ஏற்றுக்கொண்டார். இவர் அவருக்குச் சீஷனுனர்.

இளம் வயதினராயினும் ஐந்தாறு ஆண்டுகளுக்குள், எருசலேம் சங்கத்தில் பேசும்படி அந்தியோகியா சபை யாரால் தெரிந்துகொள்ளப்பட்ட சில பிரதிநிதிகளி லொருவராகத் தக்க அளவு (அப். 15 : 22 உடன் கலா. 2 : 1 காணவும், சபையின் முக்கியமானவர்களிலொருவ ராக தீத்து வளர்ந்து விட்டார். கி. பி. 50 ம் ஆண்டில் எருசலேமில் நடந்த அச்சங்கத்தின் வரலாற்றை அப். 15-லும் கலா. 2-லும் காணலாம்.

பரிசுத்த பவுலின் முதலாம், இரண்டாம் மிஷனெரிப் பிரயாணங்களில் தீத்து சேர்ந்துகொள்ளவில்லை. மூன் ரும் பிரயாணத்தில் தீமோத்தேயுவுடன் தீத்துவையும் பவுல் சேர்த்துக்கொண்டாரென்று சில வியாக்கியானி கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். அந்தப் பிரயாணத் திற்ருன் தீத்து கலாத்தியா நாட்டுச் சபைகளுக்கு அறி முகமாகியிருக்கக்கூடும். (கலா. 2 : 1–3) என்பது அவர்களது அனுமானம்

அப்பிரயாணத்தில், பவுல் எபேசுவில் மூன்ருண்டுகள் தங்கின காலத்தில் தீத்துவும் தீமோத்தேயுவும் அவருட னிருந்தனர். கொரிந்து சபையைப்பற்றித் துர்ச்செய்தி களைக் கேள்விப்பட்ட அப்போஸ்தலன், அங்கு போய் அவர் களை விசாரித்து வரத் தீமோத்தேயுவை அனுப்பிவிட்டு, அவர் அந்நகரை அடையும்முன் ஒரு நிருபத்தை (கொரிந் தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தை) எழுதி அதைத் தீத்துவின் மூலம் கொரிந்துவுக்கு அனுப்பினுர். [ii கொ. 12 : 18] தீத்து அக்கடிதத்தைக் கொண்டுபோய்க்

கொடுத்துவிட்டு, கொரிந்துசபைச் செய்திகளுடன் பரிசுத்த பவுலைத் துரோவாவில் சந்திக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது (ii கொரி, 2 ; 12). ஆனால் தீத்துவால் அது கூடாது போயிற்று. அவர் பவுலை தெசலோனிக்காவில் சந்தித்துக் கொரிந்து சபைத் தகவல்களைக் கொடுத்தார். அவை அப்போஸ்தலனுக்கு ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அளித்தன. (ii கொரி 7 : 6–16]. அவ்வசனங்கள் தீத்துவின்மீது பரி. பவுல் கொண்டிருந்த அன்பையும் நம்பிக்கையையும் தெளிவு படுத்துகிறவைகளாகவுமிருக்கின்றன.

அப்போஸ்தலன் கொரிந்தியருக்குத் தன்னுடைய இரண்டாவது நிருபத்தை எழுதி, தீத்துவின் கையில் கொடுத்து, தீகிக்கு, துரோப்பீமு என்னும் நண்பருடன் அவரைக் கொரிந்துவுக்கு அனுப்பினார் (கி. பி. 58). சில நாட்களுக்குப் பின் அவரும் கொரிந்துவுக்குச் சென்றார். அங்கிருக்கும்போது அவர் ரோமருக்கு மகத்துவமான தன் நிருபத்தை எழுதினார்.

அதன்பின் தீத்துவைப் பற்றிய எட்டு ஆண்டு காலச் செய்தி யெதுவும் கிட்டவில்லை (58–64).

அக்கால முழுவதும் தீத்து பவுலப்போஸ்தலனுடன் தொடர்பெதுவுமில்லாதிருந்தாரென்று கொள்ள முடியாது. அவர் சிலகாலம் அந்தியோகியாவிலும், சிலகாலம் கிரேத்தாவிலும் வாசம் செய்திருக்க வேண்டும்.

அப்போஸ்தலனின் முதலாம் சிறையிருப்பு முடிந்தபின், அவர் எபேசுவிலிருக்கும்போது பரிசுத்த தீத்து அவரை அங்கே சந்தித்து, கி பி 64–ம் ஆண்டினிறுதி மாதங்களில் கிரேத்தாத் தீவுக்கு அழைத்துச் சென்றாரென்பதினால், அவர் அத்தீவிலிருந்துதான் எபேசுவுக்குப் போனார் என்று கற்றோர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

கிரேத்தாத் தீவிலிருந்த சபைகளின் கண்காணியாராகத் (Bishop) தீத்துவை நியமித்தபின் அப்போஸ்தலன் அங்கிருந்து புறப்பட்டார்.

தல்மாத்தியா நாட்டில் பவுல் சுவிசேஷம் கூறினர் என்பது வரலாற்றுண்மையெனின், பரிசுத்த தீத்தும் அவ் ஊழியத்தில் பங்கு கொண்டாரென்று கொள்வது பொருந்தும்.

அப்போஸ்தலனின் இரண்டாம் சிறையிருப்பின் நாட்களில் அவர் தீத்துவுக்கு ஒரு நிருபம் எழுதினர். அந்த நிருபத்தைப் பெற்றபின் தீத்து ரோமாபுரிக்குச் சென்று பரிசுத்த பவுலைக் கண்டார். அவரை வரவேற்ற அப்போஸ்தலன், தன் சிறையிருப்பின் நாட்களில் தீத்து முதலிய சீஷர்கள் அருகிலிருப்பது தனக்கு ஆறுதலாகவும் உதவியாகவுமிருக்குமெனினும், சபைகளின் தேவைகளையே பெரிதாக எண்ணினவராகக், கிரேஸ்கேயைக் கலாத்தியாவுக்கும், தீத்துவைத் தல்மாத்தியாவுக்கும், தீகிக்குவை எபேசுவுக்கும் அனுப்பினர் (ii தீ. 4 ; 10, 11). தீத்து தல்மாத்தியாவுக்குப் போன சிலமாதங்களுக்குள் பரிசுத்த பவுல் சிரச்சேதமானர்.

தல்மாத்தியாவில் தன்வேலை முடிந்தபின், தீத்து கிரேத்தாத் தீவுக்குத் திரும்பிச் சென்று, தன் அத்தியட்சப் பணிவிடையை நிறைவேற்றி வந்தார். பரிசுத்த பவுல் தன் நிருபத்தில் எழுதின பிரமாணத்தின்படியே அவர் தன்னுடைய கண்காணிப்பு ஊழியத்தைச் செய்தார் என்றொரு பாரம்பரியக் கூற்றுண்டு.

முதிர்வயதில் மரித்த தீத்து மரணவேளையில் பரலோகக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து இறுதிநேரம் வந்ததையறிந்து தன் சபை மக்கள் ஒவ்வொருவருக்காகவும் ஜெபித்துப் பின் புன்முறுவலுடன் கண்களை மூடி பரத்துக்கேகினர் என்பது பாரம்பரியம்.

வெம்பாவம் சாவை இவர்
வென்றார்; போர் ஓய்ந்ததே
செம்பொன்னும் வாசல் திறவும்!
செல்வார் இவர் உள்ளே!

—பாமாலை 40 : 61.

Books consulted

1. Some New Testament Commentaries.
2. The Search for the Twelve Apostles by W. S. Mc Birnie
3. Lives and legends of Apostles and Evangelists by Myrtle Strade-Jackson.
4. The Student's Ecclesiastical History by Philip Smith.
5. The Acts of the Holy Apostles Peter and Paul
6. The Jouneyings and acts of Philip the Apostle
7. Martyrdom of the holy and glorious Apostle Bartholomew.
8. The Acts of Thomas.
9. The Acts of Barnabas.

The Tirunelveli Diocesan Press, Palayamkottai — Z 239

AVAILABLE AT

1. The Bethel Agricultural Fellowship,
   Danishpet, Salem Dist.

2. The Diocesan Book Depot,
   Palayamcottai. 627002

3. The Tuticorin Circle Book Depot,
   Tuticorin.

The Tirunelveli Diocesan Press, Palayamkottai — Z. 239